விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 02 வெள்ளிக்கிழமை (18.08.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 242

## எழுந்தார் முதல்வர்; அதிர்ந்தது அவை

# எதிர்க்கட்சித் தலைவருக்கு கொடுத்தார் பதிலடி

(யாழ்ப்பாணம்)

எமது அவைத்தலைவரின் சாதுரியத்தால் பதவியை தக்க வைத்துக்கொண்டிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, தன்னை பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதற்கு எம்மை கையாலாகாதவர்கள் என்று சித்திரிக்கப் பார்க்கிறார் எனப் பதிலடி கொடுத்தார் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். (23-பக்கம் பார்க்க...)



## தனக்குத் தானே தீமூட்டி இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

தீக்காயத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த இளைஞர் ஒருவர் சிகிச்சை பல 23

## எங்களைப் பயன்படுத்தி அரசு தன்னை மறைக்கிறது

### மகிந்த குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்தின் மிகப் பெரிய ஊழல் மோசடிகள் எதிர்பாராத வகையில் வெளியாகும் போது எமது குடும்ப உறுப்பினர்களை குற்றப் புலனாய்வு பிரிவுக்கும் நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கும் 23

## மகிந்தவை திருமணம் செய்துள்ளீர்களா? ஷிராந்தியை கேட்டதாம் சி.ஐ.டி

(கொழும்பு)

எமது அம்மாவிடம் வாக்குமூலம் பெறுவதாக கூறி அவர்க 23

## படைத் தளபதிகள் நேற்றுச் சந்திப்பு



(கொழும்பு)

பாதுகாப்பு படையின் பிரதானி ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா கடற்படை தளபதி வைஸ் 23

## விரைவில் அரசமைப்பு இடைக்கால அறிக்கை

### லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பில் சில இணக்கப்பாடுகள் காணப்பட்டுள்ளன. வெகு விரைவில் அரசமைப்பு உருவாக்கம் தொடர்பிலான இடைக்கால அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும். 24

## மண்ணெண்ணெய் குடித்த குடும்பப் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மண்ணெண்ணெய் குடித்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் அச்சுவேலி பாரதி வீதியினைச் சேர்ந்த குணசிங்கம் நிரஞ்சனாதேவி (வயது30) என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார்.

கடந்த 22 நாட்களுக்கு முதல் மனவிரக்தியால் இவர் மண்ணெண்ணெய் அருந்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலமானது பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர் 24

## மானிப்பாயில் விபத்து இளம் யுவதி மரணம்

(யாழ்ப்பாணம்)

உந்துருளியும் துவிச்சக்கர வண்டியும் மோதி விபத்துக்குள்ளானதில் இளம் யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 8.30 மணியளவில் மானிப்பாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் மானிப்பாய் ஆனந்தா வீதியைச் சேர்ந்த குகராசா கஜேந்தினி (வயது22) என்பரே உயிரிழந்தவராவார். 23

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுடன் ஐ.நா சந்திப்பு



24

### தனியார் நிதி நிறுவன ஊழியர்கள்

## கடன் வசூலிக்க சென்று இரவு அட்டகாசம்!

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கிராம்புவில் பகுதியில் அமைந்துள்ள ஒரு வீட்டிற்குச் சென்ற தனியார் நிதி நிறுவன ஊழியர்கள் பெரும் அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று இரவு 8.30 மணியளவில் தமது நிதி நிறுவனத்தில் கடன் பெற்று ஒரு தவணைக் கடனை உரிய நேரத்தில் செலுத்தாதவர் வீட்டிற்குள் நுழைந்தே அடாவடியில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் நிறுவனமொன்றில் சாவகச்சேரி கெருடாவில் கிராம்புவில் பகுதியில் வசிக்கும் பெண் 23

## சிறப்பு நீதிமன்ற யோசனை சு.கவுக்கு தொடர்பில்லை!

### அமைச்சர் எஸ்.பி

(கொழும்பு)

ராஜபக்ஷவினருக்காகவோ அல்லது வேறு எவருக்காகவோ தனியான நீதிமன்றம் அமைக்கப்படுமாயின் அது நாட்டின் அரசியலமைப்பு மற்றும் சட்டத்திற்கு அமைய நடைபெற வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

இவற்றை தவிர்த்து நீதிமன்றங்களை ஸ்தாபிக்க முடியாது என அந்த கட்சியின் பொருளாளரான அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க கூறியுள்ளார்.

இந்நிலையில், சிறப்பு நீதிமன்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற அமைச்சரவை பத்திரம் அமைச்சர் ராஜித சேனாரத்ன 23

## மோ.சைக்கிள், கப், ட்ரக்களுக்கு நேற்று நள்ளிரவு முதல் வரி குறைப்பு

### இணைய வரியும் நீக்கம்

(கொழும்பு)

மக்களுக்கு நிவாரணங்கள் சிலவற்றை வழங்க அரசாங்கம் தீர்மானம் மேற்கொண்டுள்ளதாக நிதியமைச்சர் மங்கள சமரவீர அறிவித்துள்ளார்.

10 வீத தொலைத்தொடர்பாடல்கள் வரியை முற்றாக நீக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவித்த மங்கள சமரவீர,

10 வீதத்திற்கு மேலதிகமாக கடந்த 2017 வரவு செலவுத்திட்டத்தில் இந்த வரியை 25 வீதமாக உயர்த்துவதற்கு யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது. அதாவது, மேலும் 15 வீதத்தால் அதிகரிக்கப்படவிருந்தது.

ஆயினும், அந்த வரவு- செலவுத்திட்ட யோசனையை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்கும், தற்போது அமுலிலுள்ள 10 வீத வரியை நீக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இணை 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவைச் சேர்ந்த சுவாமி பரமாத்மானந்த கங்கை நதியில் சமாதி



கனடா யோக வேதாந்த நிறுவனத்தின் ஸ்தாபகரும் அதன் தலைவருமான சுவாமி பரமாத்மானந்த நேற்றுக் காலை 6 மணியளவில் கங்கை நதியில் சமாதியடைந்தார்.

1945ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3ஆம் திகதி நயினாதீவில் பிறந்த பரமாத்மானந்த சுவாமி கனடாவில் ஆன்மீகத் தொண்டாற்றி வந்த நிலையில், இந்தியாவின் கங்கை நதியில் சமாதியடைவதற்காக அங்கு வந்து நேற்றுக் காலை சமாதியடைந்தார்.

வாழ்வை உயர்த்தும் உன்னத எண்ணங்கள், விண்ணோடு விரியும் ஒளி, முத்தி அல்லது வாழ்வின் நிலை போன்ற 24 நூல்களை எழுதியுள்ள பரமாத்மானந்த சுவாமி, ஒளிமயம் எனும் மாதாந்த சஞ்சிகையின் ஆசிரியராகவும் திகழ்ந்து சைவத்திற்கும் தமிழுக்கும் அருந்தொண்டாற்றினார்.

கடந்த மாதம் அவர் தான் பிறந்த நயினாதீவு மண்ணுக்கு வந்து சென்றதுடன் தனது சமாதி நிலையை முன் கூட்டியே தெரியப்படுத்தியும் உள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

# காணி பிணக்குகளை தீர்க்க அமைக்கப்பட்ட விசேட மத்தியஸ்த சபை இயங்கவில்லை!

நீதி அமைச்சின் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவினால் காணிப்பிணக்குகளை தீர்ப்பதற்கென அமைக்கப்பட்ட விசேட மத்தியஸ்த சபை (காணி) இந்த ஓகஸ்ட் மாதத்தில் இருந்து இயங்கும் என அறிவிக்க ப்பட்டிருந்த போதும் இதுவரை அதன் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுவதாக இல்லை என பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளதுடன், மீண்டும் மீண்டும் மக்களை ஏமாற்றும் செயற்பாடா எனவும் காணி மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவிடம் கேள்வி எழுப்பியுள்ளனர்.

நீதி அமைச்சின் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவினால் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் புதிதாக அமைக்கப்பட்ட விசேட மத்தியஸ்த சபைகளின (காணி) மத்தியஸ்தர்களுக்கான நியமனம் கடந்த வருடம் மே மாதம் 27ஆம் திகதி நீதி அமைச்சால் வழங்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் அமைக்கப்பட்ட விசேட மத்தியஸ்த சபையில் (காணி) 27 மத்தியஸ்தர்களுக்கும் கிளிநொச்சி மாவட்ட மத்தியஸ்த சபையில் (காணி) 17 மத்தியஸ்தர்களுக்கும் நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டன.

ஆனால் கடந்த வருடம் மே மாதம் நியமனம் வழங்கப்பட்டு 3 நாள் பயிற்சிப்பட்டறையின் பின்னர் குறித்த மத்தியஸ்தர் சபையால் காணி தொடர்பான பிணக்குகளை தீர்க்கும் நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. பின்னர் கடந்த ஜனவரி மாதம் குறித்த மத்தியஸ்தர்களுக்கான பயிற்சிப்பட்டறை நடைபெற்று பெப்ரவரி மாதத்தில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அதற்கான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படாத காரணத்தினால் பல தரப்பிடம் இருந்து நீதி அமைச்சுக்கு அழுத்தம் தெரிவிக்கப்பட்டது. அதனையடுத்து குறித்த மத்தியஸ்தர் சபையை விரைவில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்தனர்.

வடக்கில் அதிகமாக காணிப்பிரச்சினைகள் உள்ளன. அப்பிரச்சினைகளை தீர்த்து மக்களை ஒரு சுமுகமான நிலைக்கு கொண்டு வருவதற்காக நீதி அமைச்சு இந்த விசேட மத்தியஸ்த சபையை ஆரம்பித்துள்ளது.

இச் சபை அதிகாரம் வாய்ந்த சபையாகவும் காணிப்பிணக்குகளை தீர்ப்பதில் ஒரு வலுவான செயற்பாட்டை ஏற்படுத்துவதுடன் மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பயனுள்ள சபையாக இயங்கும். சபை இயங்குவதற்கான ஆயத்தங்கள் மேற்கொண்ட காரணத்தினால் சில தாமதம் ஏற்பட்டு செயற்பாடுகள் விரைவில் ஆரம்பிக்கவில்லை. ஆனால் இந்த மாதத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும் என கடந்த மாதம் பொதுமக்களுக்கு அறிவித்திருந்தனர்.

மேலும் காணி தொடர்பான முறைப்பாடுகளை குமாரசாமி சண்முகநாதன், தவிசாளர், விசேட காணி மத்தியஸ்த சபை, ராம கிருஸ்ண பவனம், கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும் என தெரிவிக்கப்பட்டதுடன் மக்களுக்கு இச் சபை தொடர்பில் தெளிவூட்டும் படிவங்கள் ஒவ்வொரு கிராம சேவகர் ஊடாகவும் வழங்கப்பட்டது.

ஆனால் இன்று வரை குறித்த சபையின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவில்லை எனபதுடன் இது பொது மக்களை ஏமாற்றும் செயல் எனவும் குறித்த சபை ஆரம்பிப்பதற்கே இவ் வாறான தாமதங்கள் ஏற்பட்டால் எமது பிணக்குகளை எவ்வாறு தீர்ப்பார்கள் எனவும் கேள்வி எழுப்பியுள்ளனர். (மு-9)

# திலீபனின் நினைவுத் தூபி புனரமைக்கப்பட வேண்டும்

## சீ.வீ.கே.கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாகி திலீபனின் நினைவுத் தூபி புனரமைக்கப்படுவதுடன் அப்பகுதி எல்லைப் படுத்தப்பட வேண்டும் எனவும் வடமாகாண சபை அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 102ஆவது சபை அமர்வும் கடந்த கால செயற்பாடுகள் தொடர்பாக மீளாய்வு செய்யும் விசேட அமர்வும் நேற்றைய தினம் கைதடியில் உள்ள பேரவை மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் மாநகர சபை ஆணையாளராக இருந்த போது குறித்த நினைவு தூபியை நிர்மாணித்து திறந்து வைத்தேன். அதற்காக என மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

தியாகி திலீபனுடைய நினைவுத் தூபி மீண்டும் புனரமைக்கப்பட வேண்டும் என யாழ்.மாநகர சபை ஆணையாளருக்கு கோரிக்கை விடுத்திருந்தேன். குறித்த பகுதியை மாநகர சபையிடம் இருந்து மாகாண சபை பொறுப்பெடுத்து நினைவிடம் அமைத்து பராமரிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். வடக்கு முதலமைச்சர் இந்த விடயத்திற்கு ஆதரவு வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருந்தார். (மு-4.9)

# எதிர்காலத்தில் ஒரு கொடூர யுத்தத்திற்கு முகம் கொடுக்க நேரிடும்

## ஜனாதிபதி எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் அனைத்து இனங்கள் மத்தியிலும் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் கட்டியெழுப்பி நாட்டில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதை தவிர்ப்பதற்காக அரசாங்கம் பல நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

ஆனால் இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு இடையூறுகளை ஏற்படுத்தும் அனைவரும் எதிர்காலத்தில் ஒரு கொடூர யுத்தத்திற்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எச்சரித்துள்ளார்.

அத்தனகல, திகாரிய அல் அஸ்கர் மத்திய கல்லூரியின் புதிய மூன்று மாடிக் கட்டிடத் தொகுதியை நேற்று மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித் திட்டத்திற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியமாகும்.

தேசிய நல்லிணக்கத்திற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித் திட்டத்தை சிலர் குழப்ப முற்படுகின்ற போதும் தேசிய நல்லிணக்க கொள்கையை வெற்றி பெறச் செய்வதன் மூலமே நாட்டில் நிலையான சமாதானம் சாத்தியமாகுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டினார். (மு-11)


## பணியாளர் தேவை

*வரவேற்பாளர்*
*(பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்)*

- ஆங்கிலம் எழுத, பேசத் தெரிந்திருத்தல் வேண்டும்
- கணனி மற்றும் தகவல் தொழில்நுட்ப அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.
- வயதெல்லை 21-30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகள் உடையோர் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளவும்.

நேர்முகத் தேர்வு:-18, 19, 20 ஆகஸ்ட் 2017
காலை 10.00-பி.ப 4.00 மணிவரை

TES
திகுவி கல்விச் சேவைகள்
இல.273, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
021 4548464, 0212217400
(162)



## வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் (VOGT)
## பதவி வெற்றிடம்/ ஆட்சேர்ப்பு (ஆண்கள் மாத்திரம்)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம், இலங்கைச் சோசலிசக் குடியரசின் 1980ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புக்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதாகும். இந்நிறுவனத்திற்கு பின்வரும் தகைமையுடைய வடமராட்சியில் நிரந்தரமாக வசிக்கும் 18-35 வயதிற்குட்பட்ட ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி நிலை-கள உத்தியோகத்தர்-01**

*தகைமைகள்*

01.க.பொ.த (உயர்தரம்) சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட
02.ஆங்கில அறிவு, கணினி அறிவு
03.மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப் பத்திரம்
04.ஏனைய தகைமைகள்

சேவையின் தன்மை-கிராம அமைப்புக்களுடனும், மக்களுடனும் சமூக அணி திரட்டும் ஆற்றலை மேம்படுத்தும் திறன், பேச்சாற்றல், தொடர்பாடல், ஆவணப்படுத்தல், அறிக்கை சமர்ப்பித்தல் எனும் திறன்கள்ள கொண்டிருத்தல். விண்ணப்பதாரி தமது சுயவிபரக் கோவையுடன் விண்ணப்பங்களை

**தலைவர்,**
**வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் (VOGT)**
**அல்வாய் கிழக்கு, அல்வாய்.**

என்ற முகவரிக்கு 31.08.2017 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும். (சி-9358)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(சி-9348)



## வாழ்த்துகின்றோம் வாழி



செல்வத்துரை
திருமாறன் பிரபு
உரிமையாளர்-
இராஜேஸ்வரி மண்டபம்
கோண்டாவில், தெல்லிப்பழை
2017.08.03ஆம் திகதி அன்று "அகில இலங்கை சமாதான நீதவான்" பதவி கிடைத்தமையையிட்டு பாராட்டி வாழ்த்தி இன்னும் பல சேவைகள் தொடர பதவிகள் கிடைத்திட வாழ்த்துகின்றோம்
வண்மேற்கு
வைத்தியசாலை-யாழ்ப்பாணம்
(கங்காதரன் வைத்தியசாலை)
(161)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் உறவினர்களுக்கு எதிராக வழக்கு தொடுக்கவே விசேட நீதிமன்று



## முன்னாள் அமைச்சர் பீரிஸ் கொதிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உறவினர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்க விசேட நீதிமன்றம் ஒன்றை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக முன்னாள் அமைச்சரும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவருமான ஜி. எல்.பீரிஸ் குற்றம்சாட்டினார்.

கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷவின் குடும்பத்திற்கு எதிராக விசேட நீதிமன்றம் அமைத்து, வழக்குத் தொடர்ந்து, தண்டனை வழங்கி, சிறையில் அடைக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்தயோசனை தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு குறித்து தாம் வேதனை அடைவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மக்களின் மீள்குடியேற்றத்திற்கான மத்திய அரசின் அர்ப்பணிப்பை வடக்கிற்கு பெற்றுக் கொடுப்பேன்

## ஆளுநர் கூரே உறுதியளிப்பு

வடக்கு மக்களின் மீள்குடியேற்றத்திற்கான அனைத்து விடயங்களிலும் மத்திய அரசின் அர்ப்பணிப்பினை பெற்றுக் கொடுப்பேன் என வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

நல்லிணக்கம் ஏற்படுவதற்கு பெரிதும் தடையாக இருப்பது கல்வியே சிங்கள மகாவித்தியாலயம், தமிழ் மகாவித்தியாலயம், முஸ்லிம் மகாவித்தியாலயம் என நம்முள்ளே பிரிவினையை ஏற்படுத்தக் கூடிய வகையில் பாடசாலைகள் தனித்தனியாக உருவாக்கப்பட்டுள்ளன. இதற்கு மாறாக சிறிசேன, நடராசா, முகமட் ஆகியோர் ஒன்றாக ஒரு இடத்தில் அமர்ந்து படிக்கின்ற வகையில் பாடசாலைகள் உருவாக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

குறைந்தது பாடசாலையை விட்டு வெளியேறி யதன் பின்னர் என்னுடன் படித்த எனது நண்பன் நடராசா என்று பேசக்கூடிய வகையில் நாம் செயற்பட வேண்டும். நல்லிணக்கத்தினை தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனை வரும் இணைந்து செயற்படு வதன் மூலமே உருவாக்க முடியும். இன, மத, குலம் என்ற அனைத்தையும் மறந்து நாம் ஒன்றாக பயணிக்க வேண்டும்

இன்று வடக்கில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. மயிலிட்டி, காங்கேசன்துறை போன்ற பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கு படிப்படியாக அவர்களின் காணிகள் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. மேலும் மக்களை குடியமர்த்துவதற்காக நல்லாட்சி அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றது. அதனை வலுப்படுத்த மத்திய அரசின் உதவிகள் அனைத்தினையும் நான் பெற்றுக்கொடுப்பேன் எனத் தெரிவித்தார்.

வடக்கில் இராணுவத்தினர் அபிவிருத்திப் பணிகளில் தம்மை இணைத்துக் கொண்டிருக்கின்றார்கள். தமிழ் மக்களுக்கான அடிப்படைத்தேவைகளை நிறைவு செய்வதிலும் அவர்களின் கல்வி, போக்குவரத்து போன்றவற்றிலும் தம்மாலான அனைத்தினையும் செய்து வருகின்றார்கள் என ஆளுநர் மேலும் தெரிவித்தார். கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாதறு தெரிவித்தார். (இ-3)

# தேசிய அரசாங்கம் பதவிக்கு வந்து நேற்றுடன் இரண்டு ஆண்டுகள் பூர்த்தி

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன இணைந்த தேசிய அரசாங்கம் பதவிக்கு வந்து நேற்றுடன் இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளன.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 17ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலின் பின்னர் இந்த தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் பல வெற்றிகளை பெற்ற போதிலும் அடைய வேண்டிய இலக்கு இன்னும் இருப்பதாக பிரதியமைச்சர் அஜித் பீ.பெரேரா தெரிவித்தார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் ஊடகம், நீதித்துறை மற்றும் பொலிஸ் சேவை போன்றன சுயாதீன சேவைகளாக மாற்றப்பட்டுள்ளன.

பெற்றோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு விலைகளை மக்கள் உணரும் வகையில் குறைக்கப்பட்டன. ஏனைய பொருட்களின் விலைகள் அதிகரித்த போதிலும் அது அந்தளவுக்கு பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

இரண்டு ஆண்டுகளில் குற்றம் செய்தவர்களை நீதிமன்றத்திற்கு கொண்டு சென்று தண்டனை பெற்றுக்கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. எதிர்வரும் ஆண்டுகளில் பொருளாதார அபிவிருத்திக்கான முனைப்புகள் மேற்கொள்ளப்படும் எனவும் பிரதி அமைச்சர் பெரேரா தெரிவித்தார். (இ-7)

# வாகன இலக்கத் தகடுகளை இணையத்தில் பார்வையிடலாம்

## யாழ்.அரச அதிபர் அறிவிப்பு

யாழ். மாவட்டத்தில் இது வரை காலமும் பொதுமக்கள் தாங்கள் விண்ணப்பித்த வாகன இலக்கத்தகடுகள் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்றதா என மோட்டார் போக்குவரத்துதிணைக்களத்திலேயே பார்வையிட்டு வந்தனர்.

இதனை இலகுவாக்கும் முறையில் இணைய சேவை ஊடாக தற்போது யாழ். மாவட்ட செயலக உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பொது மக்கள் பார்வையிடுவதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இச் சேவையை www.jaffnadist.gov.lk எனும் மாவட்ட செயலக உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரவேசித்து வலது பக்க மூலையில் Vehicle Number Plates ஊடாக பெற்றுக் கொள்ளலாம். இந்த நடைமுறையின் மூலம் வீட்டில் இருந்தவாறே தமது வாகன இலக்கத் தகடுகளை வந்துள்ளனவா என்பதை அறிந்து கொள்ளலாம். இனி வரும் காலங்களில் மக்கள் புதிய தொழில்நுட்ப முறையை பயன்படுத்திக்கொள்வதன் ஊடாக நேரத்தை செலவிடாமல் வீட்டில் இருந்தே திருப்திகரமான அரச சேவையை பெற்றுக் கொள்ளலாம் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ

# காலணி தைக்கும் தொழிலாளியின் கொட்டகை விசமிகளால் தீக்கிரை



கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு முன்பாக வீதியோரம் நீண்ட காலமாக காலணிகள் தைக்கும் தொழிலில் ஈடுபட்டு வந்தவரின் கொட்டகை விசமிகளால் தீ வைத்து எரிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு இச் சம்பவம் இடம்பெற்றது.

நான்கு பிள்ளைகளின் தந்தையான மிகவும் ஏழைத் தொழிலாளியின் என்பவரின் கொட்டகையே இவ்வாறு தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு எட்டு மணியளவில் அதேயிடத்தில் அமைந்துள்ள பிறிதொரு காலணி தைக்கும் தொழிலாளியின் கொட்டகை எரிக்கப்பட்ட போது வீதியால் சென்றவர்களால் தீ அணைக்கப்பட்டுள்ளது. இதன் பின்னரே குறித்த கொட்டகை நள்ளிரவில் எரிக்கப்பட்டுள்ளது இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (இ-3-312)

# வவுனியா வளாகம் விரைவில் பல்கலைக்கழகமாக மாறும்

## உயர் கல்வி அமைச்சர் கிரியல்ல தெரிவிப்பு

யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகமானது மிக விரைவில் பல்கலைக்கழகமாக மாறும் என உயர் கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

வவுனியா வளாகத்தின் 25ஆவதுஆண்டுநிறைவுவிழாவில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நீண்டகாலமாக வளாகமாக செயற்படும் வவுனியா வளாகமானது பல்துறையில் வளர்ச்சியடைந்துள்ளது. தமிழ், சிங்கள மாணவர்கள் கல்வி கற்கும் இவ் வளாகமானது மிக விரைவில் பல்கலைக்கழகமாக மாற்றமடையும்.

வட மாகாணத்தில் இரண்டாவது பல்கலைக்கழகமாக இப்பல்கலைக்கழகம் காணப்படும். இதற்காக செயற்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு எனது நன்றிகளை தெரிவிக்கின்றேன். அத்துடன் இலங்கையில் யுத்தம் முடிவுக்கு வந்து விட்டது. இதனால் ஏற்பட்ட பாதிப்புகளில் இருந்து மீள வேண்டும். ஜே.ஆர்.உருவாக்கிய அரசியல் அமைப்பினை தமிழர் தரப்பு ஏற்றுக்கொள்ளவில்லை. அதனையடுத்து வந்த அரசியல் அமைப்புகளையும் தமிழர் தரப்பு ஏற்றுக் கொள்ளவில்லை. எனினும் தற்போது உருவாக்கப்படும் அரசியல் அமைப்புக்கு பாராளுமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சியினரும் பங்களிக்கின்றனர். குறிப்பாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் ஆதரவு தெரிவித்து புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்படுகின்றது என அவர் தெரிவித்தார். (8-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல் 2018

## கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகள் உள்ளிட்ட குத்தகை நிலையங்களை 2018.01.01 - 2018.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

| விண்ணப்பப்படிவம் விநியோகிக்கப்படும் திகதி, நேரம் | கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி, நேரம் | கேள்வி திறக்கப்படும் திகதியும் நேரமும். |
|---|---|---|
| திகதி : 2017.08.18ம் திகதி முதல் 2017.09.06ம் திகதி வரை, அலுவலக நாட்களில் மட்டும்<br>நேரம் : மு.ப.8.30 - பி.ப.3.00<br>இடம் : கரைச்சி பிரதேச சபை தலைமை அலுவலகம் | திகதி : 2017.09.07ம் திகதி, வியாழக்கிழமை<br>நேரம் : மு.ப.10.00 மணி | திகதி : 2017.09.07ம் திகதி, வியாழக்கிழமை<br>நேரம் : மு.ப.11.00 மணி<br>இடம்: கரைச்சி பிரதேச சபை மாநாட்டு மண்டபம். |

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என முகவரியிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்பட்டு 2017.09.07ம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படவேண்டும்.

இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என்ற முகவரியிட்டு குறித்த தீகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விகள் யாவும் 2017:09.07 ம் திகதி வியாழக்கிழமை மு.ப.11.00 மணிக்கு கரைச்சி பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் கேள்விச் சபையின் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விச் சபையின் முடிவே இறுதி முடிவாகும்.

| இல | குத்தகை நிலையம் | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (NBT நீங்கலாக, மீளளிக்கப்பட முடியாதது) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | **சேவைச் சந்தை - கிளிநொச்சி** | | | |
| 01 | தராசுக்கொட்டகை - மீன் | 30,000.00 | 1,000.00 | 2,752,365.00 |
| 02 | தராசுக்கொட்டகை மரக்கறி | 50,000.00 | 1,000.00 | 5,291,137.50 |
| 03 | பழம்,தேங்காய், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை. | 30,000.00 | 1,000.00 | 2,832,500.00 |
| 04 | மாட்டிறைச்சிக்கடை | 30,000.00 | 1,000.00 | 2,640,330.00 |
| 05 | இல.01, கோழியிறைச்சிக்கடை | 20,000.00 | 1,000.00 | 1,906,410.00 |
| 06 | இல.02, கோழியிறைச்சிக்கடை | 20,000.00 | 1,000.00 | 1,545,500.00 |
| 07 | ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 219,985.12 |
| 08 | துவிச்சக்கரவண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 30,000.00 | 1,000.00 | 2,970,000.00 |
| 09 | பொது மலசலகூடம் | 10,000.00 | 1,000.00 | 500,000.00 |
| | **கிளிநகர்ப் பகுதி** | | | |
| 01 | கிளிநொச்சி சிறுவர் பூங்காவுக்கு அருகிலுள்ள பூமரக்கன்று விற்பனை நிலையம் | 10;000.00 | 1,000.00 | 132,000.00 |
| 02 | கரடிப்போக்கு சந்தியிலிருந்து டிப்போ சந்தி வரையான A.09 வீதி வாகனத் தரிப்பிடம் (முச்சக்கரவண்டி தரிப்பிடத்தை தவிர்த்து) | 10,000.00 | 1,000.00 | 500,000.00 |
| | **பொதுச் சந்தை - பரந்தன்** | | | |
| 01 | தராசுக்கொட்டகை மீன், மரக்கறி, பழம், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை, துவிச்சக்கரவண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10,000.00 | 1,000.00 | 276,595.35 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை | 20,000.00 | 1,000.00 | 1,545,500.00 |
| 03 | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 267,960.00 |
| 04 | ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 109,120.00 |
| | **பொதுச்சந்தை - வட்டக்கச்சி** | | | |
| 01 | தராசுக்கொட்டகை மீன், மரக்கறி, பழம், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை, துவிச்சக்கரவண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10,000.00 | 1,000.00 | 440,550.00 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை (வட்டக்கச்சி) | 10,000.00 | 1,000.00 | 568,920.00 |
| 03 | கோழியிறைச்சிக்கடை (வட்டக்கச்சி) | 10,000.00 | 1,000.00 | 198,000.00 |
| 04 | மாட்டிறைச்சிக்கடை (இராமநாதபுரம்) | 10,000.00 | 1,000.00 | 327,800.00 |
| 05 | கோழியிறைச்சிக்கடை (இராமநாதபுரம்) | 10,000.00 | 1,000.00 | 100,000.00 |
| 06 | ஆட்டிறைச்சிக்கடை (இராமநாதபுரம்) | 10,000.00 | 1,000.00 | 100,000.00 |
| | **பொதுச்சந்தை - இரணைமடு** | | | |
| 01 | தராசுக்கொட்டகை மீன், மரக்கறி, பழம், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை, துவிச்சக்கரவண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10,000.00 | 1,000.00 | 276,595.35 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை | 30,000.00 | 10,000.00 | 2,018,500.00 |
| 03 | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 10,000.00 | 561,000.00 |
| | **பொதுச்சந்தை - உருத்திரபுரம்** | | | |
| 01 | தராசுக்கொட்டகை மீன், மரக்கறி, பழம், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை | 10,000.00 | 1,000.00 | 79,027.24 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை (D.10) | 10,000.00 | 1,000.00 | 420,200.00 |
| 03 | கோழியிறைச்சிக்கடை (D.10) | 10,000.00 | 1,000.00 | 134,750.00 |
| | **பொதுச்சந்தை - ஸ்கந்தபுரம்** | | | |
| 01 | தராசுக்கொட்டகை மீன், மரக்கறி, பழம், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை, துவிச்சக்கரவண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10,000.00 | 1,000.00 | 342,099.99 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 357,610.00 |
| 03 | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 110,000.00 |
| | **பொதுச்சந்தை - தருமபுரம்** | | | |
| 01 | தராசுக்கொட்டகை மீன், மரக்கறி, பழம், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை | 10,000.00 | 1,000.00 | 246,447.30 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 515,900.00 |
| 03 | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 118,800.00 |
| | **கல்லாறு** | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 121,000.00 |
| | **ஜெயந்திநகர்** | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 282,810.00 |
| 02 | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 167,200.00 |
| | **ஊற்றுப்புலம்** | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 203,500.00 |
| | **ஆனைவிழுந்தான்** | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 239,580.00 |
| | **கண்டாவளை** | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 110,000.00 |
| | **முரசுமோட்டை** | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 265,210.00 |
| | **அக்கராயன்** | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 330,000.00 |

நிபந்தனைகள்

1. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.
2. கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளை செலுத்த தவறியவர்களும், கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும் குத்தகைக் கேள்விகளில் பங்குபற்றத் தகுதியற்றவர்கள்.
3. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ, நிராகரிப்பதற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு.
4. கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ள வரும் போது தம் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணத்தின் நிழற்பிரதியினை (தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப் பத்திரம்) கிராம சேவையாளர் மூலம் உண்மைப்பிரதி என சான்றுறுதிப்படுத்தி சமர்ப்பிப்பதுடன், கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழையும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
5. கேள்வி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும்போது சபையால் வழங்கப்பட்ட கேள்விப் பத்திரம், கடித உறை என்பவற்றை மட்டுமே பயன்படுத்த முடியும்.
6. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதித் தொகையினை உடனடியாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும். குறித்த கேள்விதாரர் ஒப்பந்தத்திற்கு அமைவாக குத்தகை நிலையத்தை நடாத்தினால் குறித்த வைப்புத்தொகை புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களின் குத்தகைப் பணமாக மாற்றம் செய்யப்படும்.
7. இறைச்சிக்கடைகள் மற்றும் சந்தைகள், குத்தகை நிலையங்கள் அனைத்தும் குத்தகைக்கு எடுப்பவராலேயே நடாத்தப்படல் வேண்டும். குத்தகைதாரர் தவிர்ந்த வேறு ஒருவரால் குத்தகை நிலையம் நடாத்தப்படின் உடனடியாக ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படுவதுடன் வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
8. மாதாந்த குத்தகை கட்டணங்களை அம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவது கட்டாயமானதாகும். அக் கட்டணங்களில் எவற்றையாவது குறித்த கால எல்லைக்குள் கட்டத்தவறி அதன்பின் பத்து நாட்களுக்கு உட்பட்டு செலுத்தும் பட்சத்தில் கட்டுப்பணத்துடன் 10% தண்டப்பணத்தையும், காலதாமதம் பத்து நாட்களுக்கு மேற்படும் பட்சத்தில் 15% தண்டப்பணத்தையும் சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
9. தொடர்ச்சியாக இரு மாதங்கள் குத்தகைக் கட்டணத்தை செலுத்தத் தவறும் பட்சத்தில் எதுவித முன்னறிவித்தலுமின்றி குத்தகை நிலையம் சபையால் பொறுப்பேற்கப்படும்.
10. இறைச்சிக்கடையினை குத்தகைக்கு எடுத்தவர் வெட்டப்பட்ட மாட்டிறைச்சியை பிரதேச சபை எல்லைக்கு அப்பால் எக்காரணம் கொண்டும் கொண்டுசெல்ல அனுமதிக்கப்பட மாட்டாது.
11. துவிச்சக்கரவண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையத்திற்கான கட்டணமாக துவிச் சக்கர வண்டிக்கு ரூபா 5.00 உம், மோட்டார் சைக்கிளுக்கு ரூபா 10.00 உம், முச்சக்கர வண்டி, கயஸ் போன்ற சிறியரக வாகனங்களுக்கு ரூபா 20.00 உம், கனரக வாகனங்களுக்கு ரூபா 50.00 உம் மட்டுமே அறவிட முடியும்.
12. அனைத்து தராசுக்கொட்டகைகளுக்குமான வரி அறவீட்டினை மேற்கொள்ளும்போது தற்போது பாவனையிலுள்ளவாறு 3% வரியினையே அறவிட முடியும். வரி வீதங்களின் அதிகரிப்பையோ, குறைப்பையோ சபையின் அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.
13. கிளிநகர்ப்பகுதி வாகனத்தரிப்பிடக் கட்டண அறவீடு, ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் அனைத்தும் "2016.02.02ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையின் (அதிவிஷேசமானது) பகுதி 2 - பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் வாகனங்களை நிறுத்துதலை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல்" தொடர்பான 1 தொடக்கம் 36 வரையான நியமத் துணைவிதிகளுக்கு கட்டுப்படும்.
14. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களினதும், கேள்விப் பத்திரத்தை சபைக்கு சமர்ப்பிக்காதவர்களினதும் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
15. இந் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக தெரிவுசெய்யப்பட்ட குத்தகைதாரர் சபையுடன் செய்துகொள்ளும் குத்தகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டிய பொறுப்புடையவராகிறார்.

கணேசன் கம்ஸநாதன்
செயலாளரும் கேள்விச் சபைத் தலைவரும், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

(C-9359)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









நல்லூர்க் கந்தன் கைலாச வாகனத்தில் வெளிவீதி யுலா வரும் காட்சி

## இந்துமத அற்புதங்கள்




ஸ்ரீ வாணி வெளியீட்டகத்தின் அற்புதங்கள் வெளியீட்டு வரிசையில் 9 ஆவது ஆத்மீகப் பணியில் 21 ஆவது இலவச வெளியீடானதுமான இந்துமத அற்புதங்கள்- புதியவை 2017 நூல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா அன்று வடக்கு வீதியில் அடியவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும். (இ)

## விபத்தில் சிக்கிய யுவதி படுகாயம்







மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கரவண்டியும் மோதி விபத்துக்குள்ளானதில் யுவதி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். மானிப்பாய் வீதியில் உதயதாரகை சனசமூக நிலையத்திற்கு அருகில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது. பயணிகளுடன் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த இ.போ.ச. பேருந்து திடீரென ஏற்பட்ட கோளாறு காரணமாக நடுவீதியில் நின்றுள்ளது. இதன்போதே குறித்த மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கரவண்டியும் மோதிக்கொண்டன. இதில் மானிப்பாய் ஆனந்தா வீதியைச் சேர்ந்த குகராசா கஜந்தினி (வயது-22) என்ற யுவதி படுகாயமடைத்தார். இந்த விபத்தால் சில மணிநேரம் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டது. மேலும், விபத்தில் சிக்கிய மோட்டார் சைக்கிள் பலத்த சேதங்களுக்குள்ளான அதேவேளை குறித்த யுவதி அணிந்திருந்த தலைக்கவசம் முற்றாக உடைந்து சிதைந்து காணப்பட்டது. (இ-30)

## சுத்திகரித்த நீர் வழங்கும் திட்டம் ஆரம்பம்





தேசிய சமூக நீர் வழங்கல் செயற்றிட்டத்தின் கீழ் தென்மராட்சி , தனங்கிளப்பு மக்களுக்கான சுத்திகரித்த நீர் வழங்கும் திட்டத்தின் தொடக்க நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இத்திட்டத்தின் கீழ் நாளாந்தம் ஆயிரம் லீற்றர் நீர் சுத்திகரித்து வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்திற்காக 1,1/4 பரப்புக் காணியை செல்வி. கணபதிப்பிள்ளை கனகம்மா என்பவர் நன்கொடையாக வழங்கியுள்ளார். தமிழரசுக் கட்சியின் தென்மராட்சி அமைப் பாளர் க.அருந்தவபாலன் கலந்து கொண்டு வேலைத்திட்டங்களை ஆரம்பித்து வைத்தார். (இ-89)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேய தேசத்தை மீளக் கட்டியெழுப்பக்கூடிய இளம் சமூகத்தினரை உருவாக்க வேண்டும்

## யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

எமது தமிழ் கலாசார, மனித நேய தேசத்தை மீளவும் கட்டியெழுப்ப கூடிய இளம் சமூகத்தினரை உருவாக்க வேண்டிய பாரிய பொறுப்பு ஒவ்வொரு பெரியவர்களுக்கும் உண்டு என யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ்.மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவால் வெளியிடப்படும் நல்லைக் குமரன் வெள்ளி விழா மலர் வெளியீட்டு விழா கடந்த 15ஆம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

யாழ்.மண்ணில் உதித்த பல பெரியார்கள் தமிழர் வாழ்வை கட்டியெழுப்பியுள்ளார்கள். தற்போதும் பல பெரியார்கள் அந்த சேவையை வளர்த்து வருகிறார்கள். அவர்களை அடையாளப்படுத்தி கௌரவிக்க வேண்டியது மிக முக்கியமான கடமையாகும்.

எமது முன்னைய பெரியார்களினாலேயே எமது தேசம் தலைநிமிர்ந்து நிற்கின்றது.

எமது தேசமானது, மனித நேயம், கலாசாரம், என்பவற்றினால் மீளக் கட்டியெழுப்பப்பட வேண்டும். எமது முன்னையோர் போன்ற பெரியவர்கள் எமது மண்ணில் உருவாக வேண்டும்.

அத்துடன் இந்த மண்ணிலே தொடர்ச்சியான மனித நேய சேவைகள் செய்ய வேண்டியவர்களை தயார் செய்ய வேண்டிய கடமை எமது பெரியவர்களுக்கும் உண்டு என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## சைவசமய தீட்சை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் மங்களகரமான ஏவிளம்பி வருட மஹோற்சவ பெருவிழா சிறப்புற நடைபெற்று வருகின்றது. இக்காலம் சைவசமய தீட்சை பெறுவதற்குரிய சிறப்பான காலமாகும். நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் சைவ சமய தீட்சை நாளை 19.08.2017 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். சைவசமய தீட்சை பெற விரும்புவோர்கள் பெயர், நட்சத்திரம் என்பவற்றை நாவலர் மணிமண்டபத்தில் பதிவு செய்து கொள்ளவும்.

சைவசமய தீட்சையைப் பெற்று சைவசமயி என்ற சிறப்பு பெயரை அனைத்து சைவசமயத்தவர்களும் பெற வேண்டும்.

அவ்வாறு சைவச மய தீட்சை பெற்றவர்களே புராணபடனம் செய்தல், திருமுறை ஓதுதல், ஆலய வழிபாடுகளில் சங்கற்பம் செய்தல், பூர்வக்கிரியைகளில் சங்கற்பம் செய்தல் என்பவற்றில் சிறப்புரிமையை பெறுகின்றனர்.

எனவே நாம் அனைவரும் சைவசமயதீட்சை பெற்று சைவசம யியாய் வாழ்வோம்.

தீட்சை பெறும் கைநூல் சான்றிதழ் என்பன வழங்கப்படும். தீட்சை பெற விரும்புவோர் சிறிய செம்பு அல்லது பேணி ஒன்று மட்டும் கொண்டு வந்தால் போதுமானது என உலக சைவ திருச் சபை நாயகர் சிவஸ்ரீ கதிர் குமாரசாமி சுமுகதிர்க சிவாச்சாரியார் அறிவித்துள்ளார். (இ

## ரக்ஷ பந்தன் நூல் அணிவிப்பு

ரக்ஷபந்தன் சகோதரத்துவ அன்பை குறிக்கும் பண்டிகையாகும். உலக குடும்பத்தில் சகோதார-சகோதரி உறவின் மகிமையை போற்றும் இப் பண்டிகையானது சமூக ஆன்மீக தாற்பரியத்தையும் எடுத்துரைக்கின்றது.

ஆண், பெண் வேறுபாடின்றி மனதில் தீய உணர்வுகளைக் களைந்து தெய்வீக பாதுகாப்பை அனுபவிக்கும் நோக்குடன் எமது எண்ணங்களையும் செயல்களையும் தூய்மையாக்குவோம் என உறுதியெடுத்து இப்புனித நூல் பிரம்மகுமாரி சகோதரிகளால் அணிவிக்கப்பட்டு கொண்டாடப்படுகின்றது.

இவ்விழாவை நடத்துவதற்காக கடந்த 25 வருடங்களாக இராஜயோக தியானத்தை கற்றும் கற்பித்தும் வரும் இரசாயனவியல் துறை சிறப்பு விஞ்ஞானப் பட்டதாரியான சகோதரி கவிதா இலங்கை வந்துள்ளார்.

தற்போது புதுச்சேரி பிரம்மகுமாரிகள் நிலையத்தின் இணைப்பாளராக சேவையாற்றி வரும் அவர் சிறந்த பேச்சாளராகவும் உளவள துணையாளராகவும் விளங்குவதுடன், தனியார், அரச நிறுவனங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பல அமைப்புக்களில் விளக்கவுரைகள், செயற்பாட்டு ரீதியான நிகழ்வுகள் என்பவற்றை நடத்துபவர்.

யாழ்ப்பாணத்தில் இல. 211, பிறவுண் வீதியில் அமைந்துள்ள சுகதாம்ம் மண்டபத்தில் இன்று 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு பொதுமக்கள் நன்மை கருதி நடைபெறும் என பிரம்மகுமாரிகள் இராஜ யோக நிலையம் அறிவித்துள்ளது. (இ

## மஞ்சவனப்பதி மஹோற்சவம்

கொக்குவில் மேற்கு அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும்.

எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ-7)

## குளம் சீரமைத்து ஆழமாக்கல்



வதிரி கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு அருகில் அமைந்துள்ள குளத்தினை ஆழமாக்குவதற்கும் குளத்தினை சீரமைப்பதற்கும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் க. தர்மலிங்கம் தனக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து பத்து இலட்சம் ரூபாவினை ஆலய நிர்வாக சபை உறுப்பினர்களிடம் கையளிக்கும் நிகழ்வும் குளத்தினை ஆழமாக்குவதற்கான ஆரம்ப நிகழ்வும் அண்மையில் நடைபெற்றன. (இ-60)

## வீதியில் கொட்டப்படும் குப்பைகளால் துர்நாற்றம்



யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட நல்லூர் அரசடிச் சந்தி புதிய சிவன் கோயில் வீதியில் கொட்டப்படும் குப்பைகளால் துர்நாற்றம் வீசுவதால் தொற்றுநோய் பரவும் அபாயம் இருப்பதாகப் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-108)

## இராசி பலன்

18.08.2017
(ஆவணி 02, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
ஏகாதசி முற்பகல் 9.02மணிவரை
திருவாதிரை முன்னிரவு 9.01 மணிவரை
சுபநேரம் 6.05 -7.35 மணிவரை
இராகுகாலம் 10.35 - 12.05 மணிவரை
ஏகாதசி விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் அனுசம் -கேட்டை | | செவ் ராகு, புத |
| கேது | | | சூரி சுக் |
| | சனி | | குரு |

**மேடம்:** நீண்ட நாளைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரும், உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும். வெற்றிச் செய்திகள் வந்து சேரலாம்.

**இடபம்:** நிம்மதி காண ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பொது வழியில் புகழ் கூடும், உறவினர்களின் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**மிதுனம்:** குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்.

**கடகம்:** எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், தூரத்து உறவினர்களின் வருகையுண்டு, தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம், சயன சுகக் குறைவான நாள்.

**சிம்மம்:** பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, பொன்னான நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

**கன்னி:** அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன் வருவர், செல்வாக்கு மேலோங்கும் நாள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**துலாம்:** தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், கனிவாக பேசி காரியத்தை சாதித்துக்கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** இறை வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும் நாள், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

**தனுசு:** குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், அரசு வழியில் அனுகூலமுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மகரம்:** உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், மாற்றுக்கருத்துடையோர் மனம் மாறுவார், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும்


**கும்பம்:** உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு.

**மீனம்:** தொழில் ரீதியாக வர வேண்டிய வரவுகள் வந்து சேரலாம், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், உடல் நலன் சீராகும், பயணங்கள் கைகூடும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

94

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



இசை விழாக்கள், முத்தமிழ் அரங்குகள், திருக்குறள் மாநாடுகள் என புங்குடுதீவு விழாக்கோலம் பூண்டு மகிழ்ந்த அந்தக் காலங்கள் இப்போது இல்லை.

அது ஒரு காலம்... என்று சொல்லிப் பெருமூச்சு விடுவதைத் தவிர வேறு எதையும் சொல்லிவிட முடியாது.

விடுதலைப்போராட்டத்திலும் புங்குடுதீவு மண் காத்திரமான பங்கைக் கொண்டிருந்தது. விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் பெண்ணெடுத்த ஊர் புங்குடுதீவு என்பதற்குள் வடமராட்சியும் தீவகமும் சம்பந்தக் குடியாகின.

என்ன செய்வது எல்லாம் இழந்த நிலையில் சோகம் ஒன்றுதான் மிஞ்சியது.

கொடூர யுத்தத்தின் கொடுப்பனவுகள் கொஞ்சமல்ல. பிறந்து வளர்ந்து வாழ்ந்த மண்ணைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்ற நினைப்புடையோர்; பார்க்கப் பிடிக்கவில்லை என்று திரும்பிப் பார்க்காதோர்; எதுவா இருந்தாலும் என்னுடல் புங்குடுதீவு மயானத்தில்தான் எரிய வேண்டும் என்று விருப்பம் கொள்வோர் என்ற பட்டியலில், வாழ்ந்தால் புங்குடுதீவில்தான் வாழ்வோம் என்ற நினைப்போடு மீள்குடியமர்ந்தவர்கள் சொற்பமானவர்களே!

ஊர்ப்பற்றோடு மீளக் குடியமர்ந்தவர்கள் பட்ட அவலங்கள் கொஞ்சமல்ல.

சாரதாம்பாள்; அவலத்தின் பெயரால் அனைவரும் அறியப்பட்ட பெயர். ஆம், சந்திரசேகரசர்மாவின் மகள் சாரதாம்பாள் புங்குடுதீவில் வைத்துக் கோரமாகக் கொலை செய்யப்பட்டார்.

வன்புணர்வின் பின் அந்தக் கொலை நடந்ததாக மருத்துவப் பரிசோதனைகள் உறுதி செய்தன. ஒரு அந்தணக் குடும்பத்திற்கு நடந்த கதிகண்டு கலங்காதார் எவருமில்லை.

படைத்தரப்பின் ஆக்கிரமிப்பில் தீவகம் திணறிக் கொண்டிருந்தபோது புங்குடுதீவில் சாரதாம்பாள் பலியாக்கப்பட்டார். சமூக எதிர்ப்புகள் ஆங்காங்கே எழுகை பெற்றாலும் எழுச்சியை அடக்கும் முயற்சியே வெற்றி பெற்றன என்று கூறலாம்.



## புங்குடுதீவில் மாணவி கொலை நடந்தது என்ன?

இன்றுவரை புங்குடுதீவு எனும் போதெல்லாம் சாரதாம்பாளின் படுகொலை நினைவுகள் நிழலாய்ப் பரவுகிறது.

புங்குடுதீவில் நடந்த மிக மோசமான படுகொலையாக சாரதாம்பாளின் கொலை உணரப்பட்ட போது ஈழத்தமிழர்களின் சோக வரலாற்றில் கிருஷாந்தி, ரஜனி, சாரதாம்பாள் என்ற பட்டியல் பருத்துக் கொண்டது.

### புங்குடுதீவில் நடந்த 2ஆவது படுகொலை

இலைகளாலும் சருகுகளாலும் மூடப்பட்ட நிலையில் சாரதாம்பாளின் உடல் பனம் காட்டுக்குள் இருந்து கண்டெடுக்கப்பட்ட போது புங்குடுதீவு அதிர்ந்து போனது. அந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்று நினைத்த வேளை தர்சினி என்ற இளம் யுவதியின் உடலம் புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தில் வரதீவு என்ற குறிச்சியில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து மீட்கப்பட்டது.

தர்சினி என்ற இளம் பெண்ணைக் காணவில்லை என்ற செய்தி புங்குடுதீவு எங்கும் பரவ ஊர்கூடி தேடுதல் நடத்தியது.

சாரதாம்பாளுக்கு நடந்த கொடூரம் தர்சினிக்கும் நடந்துவிடக் கூடாது என்ற ஏக்கத்தோடு தேடுதலைத் தீவிரப்படுத்திய போது வரதீவில் உள்ள கிணற்றில் தர்சினியின் பாதணி ஒன்று மிதப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

கிணற்றுக்குள் தர்சினியின் செருப்பு மிதப்பதற்குக் காரணம் என்ன என்ற கேள்விகள் வார்த்தைகளாக வெளிவருவதற்கு நேரம் எடுக்காமல் கிணற்றில் சோதனை நடத்தப்பட்டபோது கல்லுடன் கட்டப்பட்ட நிலையில் தர்சினியின் உடல் வெளியில் எடுக்கப்பட்டது.

ஓ! புங்குடுதீவில் நடந்த இரண்டாவது கொலை. அதிலும் இளம் பெண்களின் இரண்டாவது மர்ம மரணம்.

தர்சினியின் மரணம் ஏற்பட்டபோது புங்குடுதீவில் வாழமுடியுமா? அப்படி வாழ்வதாக இருந் தால் யார் பாதுகாப்பு? இந்தக் கேள்விகளுக்கு விடை கிடைப்பதற்கு முன்னதாக நகுலா என்ற புங்குடுதீவைச் சேர்ந்த இளம் ஆசிரியை புங்குடுதீவுக் கிணறு ஒன்றிருந்து சடலமாக மீட்கப் படுகிறார்.

(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருடைய மிரட்டலுக்கும் அஞ்சமாட்டோம் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி சூளுரை



(டில்லி)

"எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா என்ற இரு பெரும் பாடசாலைகளில் படித்த மாணவர்களாகிய நாங்கள் யாருடைய மிரட்டலுக்கும் அஞ்சமாட்டோம்" என்று தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி சூளுரைத்துள்ளார்.

தமிழக அரசு சார்பில் எம்.ஜி.ஆரின் நூற்றாண்டு விழா, கடலூர் மஞ்சக்குப்பம் மைதானத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை நடைபெற்றது.

விழாவில் தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிச்சாமி பங்கேற்று, எம்.ஜி.ஆரின் உருவப் படத்தைத் திறந்து வைத்து அவர் பேசிய போது,

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவை அரசியலுக்கு எம்.ஜி.ஆர். அறிமுகப்படுத்திய சிறப்புப் பெற்ற கடலூரில் அவரின் நூற்றாண்டு விழா நடைபெறுவது கூடுதல் சிறப்பு.கடமை, பொறுமை, கருணை ஆகியவையே ஒருவரைத் தலைவராக்கும் என்று கூறியவர் எம்.ஜி.ஆர். அவரது வழியில் அ.தி.மு.கவை வெற்றிப் பாதையில் அழைத்துச் சென்றவர் ஜெயலலிதா.

தற்போதைய ஆட்சி எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோரின் கொள்கைகளைப் பின்பற்றியே நடைபெற்று வருகிறது. தன்னைவிட சக்தி மிகுந்தவர்கள் இல்லையென்று நினைப்பவர்களை இயற்கை பார்த்துக் கொள்ளும். யார் பெரியவர், சிறியவர் என்ற பேதம் இல்லாமல் கூடி வாழ்ந்தால் கோடி நன்மை கிடைக்கும்.

எம்.ஜி.ஆர். பிறந்த நாளை ஏன் அரச விழாவாகக் கொண்டாடுகிறார்கள் என்று சிலர் கேட்கிறார்கள். இது ஜெயலலிதா முதல்வராக இருந்தபோதே அறிவித்த திட்டம். அதை நாங்கள் செயற்படுத்துகிறோம். இந்த ஆட்சி நிலைக்குமா, எத்தனை நாளைக்கு நீடிக்கும் என்று சிலர் கேட்கின்றனர்.

நாங்கள் மக்கள் பணி செய்வதற்கே அ.தி.மு.கவில் இருக்கிறோம். எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா என்ற இரு பெரும் பாடசாலைகளில் படித்த மாணவர்கள் நாங்கள். எனவே, யாருடைய மிரட்டலுக்கும் அஞ்ச மாட்டோம். எந்த மிரட்டலையும் முறியடிக்கும் சக்தி எங்களிடம் உள்ளது.

நான் 1974-ஆம் ஆண்டு கட்சியில் சேர்ந்து கிளை, ஒன்றியம், மாவட்டம், மாநிலப் பொறுப்புகளைப் பெற்று, தற்போது முதல்வர் என்ற நிலையை எட்டியுள்ளேன். அ.தி.மு.கவில் உழைப்பும், விசுவாசமும் இருந்தால் உயர்ந்த நிலையை அடையலாம் என்பதற்கு நானே உதாரணம். விவசாயியாக இருந்த நான், கோட்டையில் கொடியேற்றியதன் மூலம் விவசாயிகளுக்குப் பெருமையை ஏற்படுத்தியுள்ளேன். சிலர் பின்புற வாசல் வழியாக வந்து கட்சியையும், ஆட்சியையும் பிடிக்க முயற்சிக்கிறார்கள்.

அ.தி.மு.கவில் ஒன்றரை கோடி தொண்டர்கள் எங்கள் பக்கம் இருக்கும் வரை இந்த முயற்சி வெற்றி பெறாது. கட்சியையும், ஆட்சியையும் யாராலும் அசைக்க முடியாது என்றார்.

சட்டப்பேரவைத் தலைவர் ப.தனபால் விழாவுக்குத் தலைமை வகித்தார். தொழில் துறை அமைச்சர் எம்.சி. சம்பத், கடலூர் மக்களவைத் தொகுதி உறுப்பினர் ஆ.அருண்மொழித்தேவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ் வளர்ச்சி, செய்தித் துறைச் செயலர் இரா. வெங்கடேசன் வரவேற்க, மாவட்ட ஆட்சியர் த.பொ. ராஜேஷ் நன்றி தெரிவித்தார்.

# மக்களுக்கும் அரசுக்கும் ஏன் இந்த இடைவெளி

## சீமான் சீற்றம்

தமக்கான நீதியை கோரி போராடும் விவசாயிகளை முதல்வர் நேரில் சந்திக்க என்ன இடையூறு? மக்களுக்கும் அரசுக்கும் ஏன் இந்த இடைவெளி? என்று மதுரை விமான நிலையத்தில் வைத்து நிருபர்களிடம் கருத்து தெரிவித்த நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

மதுரை விமான நிலையத்தில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நிருபர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழகத்தை ஆள்பவர்கள் பதவியை விட்டு அவர்களாகவே போய் விட்டால் மக்கள் நிம்மதியாக இருப்பார்கள். மத்தியில் ஆளும் பாரதிய ஜனதா கட்சி என்ன சொல்கிறதோ அதை கேட்டுத்தான் இவர்களால் செய்ய முடிகிறது.

ஆகவே இவர்களிடம் எதுகுறித்து முறையிட்டும் எந்தப் பயனும் இல்லை. வாக்களித்த விவசாயிகளை, கதிராமங்கலம், நெடுவாசலில் போராடுபவர்களை முதல்வர் நேரில் சந்திக்க என்ன இடையூறு இருக்கிறது என்று தெரியவில்லை. மக்களுக்கும் அரசுக்கும் ஏன் இந்த இடைவெளி உள்ளது?

தினகரன் கைது செய்யப்பட்டபோது அவருக்காக நாங்கள் குரல் கொடுத் தோம். ஆனால் சிறையில் இருந்து வெளியே வந்த பின்னர் குற்றச்சாட்டு குறித்து எதுவுமே பேசவில்லை. அரசு இயந்திரம் ஏதோ நாட்களை கடத்திக்கொண்டு செல்கிறது.

ராஜீவ் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட 7 பேர் விடுதலையிலும் காங்கிரசுக்கும், பாரதிய ஜனதாவுக்கும் ஒரே நிலைப்பாடுதான். பேரறிவாளன் பரோலுக்கு சட்டத்தில் இடம் இருந்த போதும் மத்திய அரசின் நிலைப்பாட்டையே மாநில அரசும் செய்து வருகிறது.

ஆகையால் தமிழக அரசுக்கு என்று தனி நிலைப்பாடு எதுவும் இல்லை.

இவ்வாறு சீமான் தெரிவித்தார். (8)

# ஓ.என்.ஜி.சி.பணிகளை கைவிட வேண்டும்

## திருநாவுக்கரசர் பேட்டி

மக்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருவதால் ஓ.என்.ஜி.சி. பணிகளை கைவிட வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் திருநாவுக்கரசர் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம் கதிராமங்கலத்திலிருந்து ஓ.என்.ஜி.சி. நிறுவனம் வெளியேற வேண்டும் என தொடர் காத்திருப்பு போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

அங்குள்ள ஐயனார் கோயிலில் நேற்று முன்தினம் 36ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்ட கிராம மக்களை தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திருநாவுக்கரசர் சந்தித்தார். அப்போது கிராம மக்கள் திருநாவுக்கரசரிடம் வலியுறுத்தி பேசியதாவது,

கதிராமங்கலத்தில் ஓ.என்.ஜி.சி. ஆய்வால் நீர் வளம் மற்றும் நிலவளம் பாதிக்கப்பட்டுள்ளது. குடிநீர் காவி நிறமாகி விட்டது. இத்தகைய சுகாதாரமற்ற நிலையால் குழந்தைகள் மற்றும் முதியவர்கள் நோய் தாக்குதலுக்கு ஆளாகின்றனர். காங்கிரஸ் ஆட்சி காலத்தில் தான் இங்கு ஓ.என்.ஜி.சி. ஆய்வு பணிகளை தொடங்கியது. எனவே ஓ.என்.ஜி.சி. நிறுவனத்தை இங்கிருந்து வெளியேற்ற காங்கிரஸ் கட்சி தலைவராக உள்ள நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என மக்கள் வலியுறுத்தினர்.

கடந்த 17 வருடம் முன்பு கதிராமங்கலத்தில் ஓ.என்.ஜி.சி. நிறுவனம் ஆய்வு பணிகள் தொடக்கப்பட்ட போது மக்கள் அனுமதி அளித்தனர். தற்போது குழாய்கள் உடைப்பு ஏற்பட்டு கச்சா எண்ணெய் கசிந்து நிலத் தடிநீர் மற்றும் விவசாயம் பாதிக்கப்படுவதாக தெரிவித்தனர்.

கதிராமங்கலத்துக்கு வெளியூர்களிலிருந்து யாரையும் வரவிடாமல் தடுத்து ஊரையே தனி தீவாக பொலிஸ் வைத்துள்ளது. போராட்ட த்துக்கு ஆதரவு அளிக்க வரும் மாணவர்களை தடுப்பது தேவையற்றது. ஓ.என்.ஜி.சி. ஆய்வு பணி தேவையில்லை எனக் கூறி மக்கள் போராடுகின்றனர். மக்களின் ஜனநாயக உரிமைகளை தடுக்கும் வகையில் பொலிஸ் கொண்டு அச்சுறுத்துவது கண்டனத் திற்குரியது.

கதிராமங்கலத்தில் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற தமிழ்நாடு அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். முன்பு காங்கிரஸ் ஆட்சி காலத்தில் இத்திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கலாம். மக்களுக்காக தான் திட்டங்கள். மக்கள் ஏற்றுக் கொண்டால் தான் அதனை செய்ய வேண்டும். தற்போது மக்கள் வேண்டாம் என்று சொன்னால் அதனை கைவிட வேண்டும்.

கதிராமங்கலம் மக்களை மத்திய அரசு சார்பிலோ, மாநில அமைச்சர்களோ, எம்.பி.யோ யாரும் இது வரை வந்து பார்க்காமல் உள்ளனர். மக்கள் பிரச்சினைகளை நேரில் வந்து கேட்பதில் என்ன இடையூறு உள்ளது. பிரச்சினைகளை தீர்ப்பது என்பது ஒன்று. கேட்பது என்பது ஒன்று. மக்களை சந்தித்து பிரச்சினையை கேட்கவே இல்லை என்பதால் தான் மக்கள் ஆத்திரத்துடன் உள்ளனர். காங்கிரஸ் கட்சி மக்களுக்கு துணையாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார். (8)

# திரைப்படமாகிறது பிரபாகரன் தலைமையிலான ஈழப்போர்

(சென்னை)

ஈழப்போரில் தமது இன்னு யிரைத் தியாகம் செய்த புலிகளின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரனையும் அவர் நடத்திய போரையும் மையமாக்கி தமிழில் சில திரைப் படங்கள் வெளிவந் திருக்கின்றன. அவை தமிழ் ஈழ அரசியல் செயற்பாட்டில் ஆர்வமுள்ள, ஈழத்தமிழர்களின் நலனில்



அக்கறையுள்ள கலைத்துறையினரின் உணர்வு வெளிப்பாடாகக் கருதப்பட்டது. தமிழில் இப்படியான முயற்சிகள் வழக்கமானவை.

ஆனால் தெலுங்கில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளைமையமாக வைத்து திரைப் படங்கள் வெளிவருவது அரிது. 10 ஆண்டுகளுக்கு முன்பு எஸ். எஸ். ராஜ மௌலியின் 'சத்ரபதி' திரைப் படத்தில் அம்மா சென்ட்டி மென்ட் காட்சிகள் சில இலங்கையிலிருந்து போரில் தப்பி வரும் அகதிப் பிரச்சினையைத் லேசாகத் தொட்டு வெளி வந்தது. அவ்வளவு தான் அதற்குப் பின் அங்கே இலங்கைப் பிரச்சினை குறித்த திரைப்படங்கள் வெளிவந்த தாகத் தெரியவில்லை. தற்போது நடிகர் மோகன் பாபுவின் மகன் மஞ்சு மனோஜ் நடிப்பில் உருவாகி வரும் 'ஒக்கடு மிகிலடு' திரைப்படம் இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப்போரை மையமாக வைத்து வெளிவர இருப்பதாக செய்



திகள் கசிகின்றன. அதுமட்டுமல்ல அத்திரைப்படத்தில் மஞ்சு மனோஜ் புலித் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வேடமேற்று நடிக்க விருப்பதாகவும் கூடத் தகவல்! ஒக்கடு மிகிலடு எனும் தெலுங்கு வார்த்தைகளுக்கான அர்த்தம் 'எவனும் மிஞ்சப்போவதில்லை' என்பதே.

தென்னிந்தியாவைப்பொறுத்தவரை மிக சென்சிட்டிவ்வான அரசியல் போராட்டங்களில் ஒன்றான இலங்கை உள்நாட்டுப் போரை மையமாக்கி வெளிவரும் இத்திரைப்படம் வழக்கமாகப் புறக்கணிக்கப்படும் மசாலா தூக்கலான தெலுங்கு அக்ஷன் திரைப்படங்களில் இருந்து மாறுபட்டு உண்மையாகவே இலங்கை உள்நாட்டுப்போரை உள்ளது உள்ளபடி உணர்வு பூர்வமாக வெளிக்கொண்டு வருமா? என்பது படம் வெளி வந்தால் தெரியும். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 ஆம் ஆண்டின் நீங்கா நினைவில்...



## அமரர். திருமதி மகாலட்சுமி இராஜலிங்கம்

**திதி: துவாதசி - 18.08.2017**

மலர்வு 27.08.1934

உதிர்வு 22.08.2014

அன்போடு அறமும் காத்தாய்
அறிவினால் உள்ளம் பூத்தாய்
பண்பினில் சிகரம் எம் தாய்
பாலொடு தென்பும் தந்தாய்
நன்மை செய் வாழ்வில் என்றாய்
நல்லன சொல்லித் தானே
மண்ணுவோர் போற்ற வாழ்ந்த
மாதவப் பேறே அம்மா!

அடிநெஞ்சில் கருணை ஊற்று
அன்பேதான் சுவாச மூச்சு
மடிதந்து வளர்த்த தெய்வம்
மனசள்ளும் அம்மா மஞ்சம்
கடிவயிற்றுப் பசியை ஓட்டக்
கடுமையாய் உழைத்தாள் அன்று
மடி நிறையச் செல்வம் இருக்க
மாதரசி போனாள் எங்கு?

நிலவதும் தோன்றும் மறையும்
நீங்காதே அன்னை உருவம்
பழகிய வாய்கள் எல்லாம்
"லிங்கம்மா" நாமம் சொல்லும்
உலவிய நீராவி யடியினில்
இன்றுமுன் காட்சி தோன்றும்
விலகாதே உந்தன் நினைவு
நிழலென எம்மைத் தொடரும்!
அம்மாவின் ஆத்ம சாந்திக்காய்
பிரார்த்திக்கின்றோம்.

**84, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.** **குடும்பத்தினர்.**

(சி-9349)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# அடமறந்திட்டனே... ஞாபக-மறதி

பிறப்பில் தொடங்கும் வாழ்வின் ஓட்டம் இறப்பினைச் சென்றடைந்திடும் வரையில் சுமுகமாகச் செல்ல உறக்கத்தைப் போல் மறதியும் அத்தியாவசியத் தேவையாய் இருக்கிறது. சிலநேரங்களில் மரணம் தவிர்க்க இயலாததென அறிந்திருந்தாலும் நெருங்கிய உறவின் இழப்பு மனவேதனையினை அதிகரித்து மனச்சிதைவினை ஏற்படுத்தும் அளவில் கொடியதாகவே இருக்கும். அச் சமயங்களில் மறதியே உயிரை வாழவைத்திடத் தேவையான அருமருந்தாக உள்ளது.

சிறுவயதில் படித்த வாய்ப்பாடு, திருக்குறள் முதற்கொண்டு உறவினர், நண்பர்களின் பெயர்கள் வரையிலும் நினைவு கொள்ளப்பட வேண்டியவைகளின் அட்டவணையின் எண்ணிக்கை அதிகம் தான். அதுவும்எப்போதும்நினைவு கொள்ள வேண்டியதில்லை. அந்தந்த சந்தர்ப்பம் வருகையில் உடன் நினைவு கூர்ந்தால் போதும். கணனியில் எழுதி சேமித்து பாதுகாத்து வைத்து தேவையான நேரத்தில் அதனதனிடத்திலிருந்து எடுத்து உபயோகிப்பது போல் மூளையின் அறைகளில் நினைவுகளை அதற் குண்டான அறைகளில் சேமித்து வைத்து விட வேண்டும். தேவை யானவற்றை மட்டுமே தேவை யான நேரத்தில் எடுத்துநினைவு கொள்ள வேண்டும். இதில் உள்ள தொல்லை என்னவென்றால் கணனி நமது கட்டுப்பாட்டில் உள்ள வரையில் நமது தேவையினை சிறப்பாய் செயற்படுத்தும். வைரஸ் தாக்கினால் மட்டுமே தன்னிச் சையாய் செயற்படும். மனமோ எப்போதும் தன்னிச்சையாய் செயற் பட்டுவிடும். அதனாலேயே மறக்கும் கலையினை வளர்த்துக் கொள்ள. வேண்டிய கட்டாயத் தேவையுள்ளது.

நினைவாற்றல் அல்லது ஞாபக சக்தி எனப்படுவது தான் அனுபவித்த, கற்றறிந்த விடயங்களை தேவைப்படும் போது மறுபடியும் நினைவிற்குக் கொண்டு வரும் ஒருசெயற்பாடாகும். நல்ல நினைவாற்றல் பெற்றுள்ள மனிதன் அறிவாற்றல் மிக்கவனாக எண்ணற்ற சாதனைகளை நிகழ்த்த இயலும். நினைவாற்றல் குன்றுவதனால் பலவிடயங்களில் தோல்வி ஏற்பட்டு பின் தங்கிவிட நேரிடும். அதுவும் பாடசாலை மாணவர்களுக்கு பரீட்சைநேரத்தில் அவர்களின் நினைவாற்றல் திறன்தான் கைகொடுக்கும். ஏதாவது ஒரு கேள்விக்கு பதில் மறந்து போனாலே டென்சன் ஆகிவிடுவார்கள். அதன் பின்பு அவர்களுக்கு கையும் ஓடாது. காலும் ஓடாது. அதேபோன்று தான் நேர்முக பரீட்சைக்கு தோன்றும் ஒருவருக்கும் உரியநேரத்தில் சரியானப தில் தெரிந்திருந்தும் நினைவாற்றல் குறைவினால் பதில் கூற முடியாது தோல்வி அடைகின்றான். பொதுவாக நாம் எல்லோருமே நினைவாற்றல் மனதில் (நெஞ்சில்) தான் பதிந்துள்ளதாக எண்ணுகின்றோம். மனம், மனச்சாட்சி, நெஞ்சு என முன்வைப்பதெல்லாம் மூளையைத்தான் குறிக்கின்றன அதனால்தான் மூளை கோளாறு உள்ளவர்களை மன நோயாளி என குறிப்பிடுவது வழக்கத்தில் உள்ளது.

நினைவாற்றல் என்றால் என்ன? ஒருவிடயத்தை மறக்காமல் இருப்பது மட்டுமல்ல நினைவாற்றல் மனதில் (மூளையில்) பதியப்பெற்று இருக்கின்ற அறிவில் இருந்து சரியான விபரத்தை தேவைப்படும் நேரத்தில் வெளிப்படுத்தும் திறமைதான் நினைவாற்றல் என்கிறார்கள் விஞ்ஞானிகள்!

ஒரு மாணவனை எடுத்துக் கொண்டால், பாடங்களை நன்றாகப் படித்து விட்டு தேர்வுக்குச் செல்கின்றான். அவன் படித்ததில் இருந்து கேள்விகள் வருகின்றன. ஆனால், தேர்வறையில் இருக்கும் போது பதில் நினைவுக்குவராமல் வீட்டுக்குச் சென்றபிறகு நினைவிற்கு வந்தால்.அதனால் ஏதாவது பலன் இருக்குமா? நிச்சயம் இல்லை. பதில் தெரிந்தும் அதுசரியான நேரத்தில் ஞாபகத்திற்கு வரவில்லை. பலருக்கும் பலவிடயங்கள் நினைவில் இருக்கும். ஆனால், தேவையான நேரத்தில் குறிப்பிட்ட விடயத்தை நினைவிற்குக் கொண்டு வர முடியாமல் தவிப்பார்கள். தேவைப்படும் நேரத்தில் தேவை



யான செய்தி உடனடியாக நினைவுக்குக் கொண்டு வர முடியாது போதலே ஞாபக- மறதி எனலாம். இதற்கு தீர்வாக பாடசாலை மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு முதல் தாம் கற்றவற்றை மீட்டல் செய்து மூளையில் பதியப் பெற்றவற்றை புதுப்பித்து ஒருங்கமைப்பதன் மூலமும், நேர்முக பரீட்சைக்குச் செல்பவர்கள் முக்கியமான விடயங்கள் பற்றி மீட்டல் செய்து மூளையில் சிதறல்களாக பதியப் பெற்றுள்ளனவற்றை மேலே கொண்டு வந்து ஒரு முகமாக பதிவை புதுப்பித்தல் மூலமும் நினைவாற்றலை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

ஆசிரியர் கேட்ட கேள்விக்கு பதில் தெரியாமல் தன்னிச்சையாக தலையைச் சொறிந்து கொண்டு நிற்பதும், ஆசிரியர் அதற்கு தண்டனையாக தோப்புக்கரணம் போடச் செய்வதும் மறதிக்கு செய்யப்பெறும் சில அப்பியாசங்களாகும். தலையைச் சொறியும் போது மூளை நரம்புகள் உயிர்த்தெழுகின்றன. அதேபோல் தோப்புக் கரணம் போடும் போது மைய நரம்புத்தொகுதி உயிர்ப்படைந்து மூளையைத் தூண்டுகின்றது. அப்பியாசங்கள் மட்டுமன்றி நினைவாற்றல் திறன் அதிக ரிக்கச் சத்தான உணவுகளை உண்பதன் மூலம் அனைவரும் ஞாபகத்திறனை அதிகரிக்கலாம் என்கின்றனர் உணவியல் நிபுணர்கள்.



மனிதனின் நினைவாற்றலுக்கும் மனதை ஒருநிலைப்படுத்தலுக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுவதாக நிபுணர்கள் கூறுகின்றனர். மனதை எந்தளவுக்கு ஒருமுகப்படுத்தி ஒருவிடயத்தில் கவனம் செலுத்துகிறோமோ அந்த அளவிற்கு அது மனதிலே பதிகின்றது. வேறுவிதமாக கூறுவதாயின் நாம் ஒன்றிற்கு மேலான வேலை



களை ஒரே நேரத்தில் செய்யும் போது கவனம் சிதறடிக்கப்பெற்று அவை மனதிலே சிதறல்களாக பதிவாகின்றன. அதனால் நாம் அவற்றை தேவைப்படும் போது உடனடியாக நினை வில் ஏற்படுத்திக் கொள்ள முடிவ தில்லை.

மூளையின் சக்தி என்பது அளவிட முடியாதது. ஒருவர் நூறாண்டுகள் வாழ்கிறார் எனவைத்துக் கொண்டால் இந்த 100 ஆண்டுக ளில் ஒவ்வொரு விநாடியிலும் ஒரு சில விடயங்களை நினைவில் சேகரித்துக் கொண்டுதான் இருக்கிறார். அவ் வளவு விடயங் க ளையும் அவர் நினைவில் சேகரித்து வைத்தாலும் கூட தனது மூளை செயற்றிறனில் 10 இல் ஒருபங்கை மட்டுமே பயன்ப டுத்துகிறார். இத னால்தான் "மனித மூளை" அதிக திறன் வாய்ந்தது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

மறதி என்பது சில நேரங்களில் வரம். சில நேரங்களில் சாபம். எதனை மறக்க வேண்டுமோ அதனை அடிக்கொரு முறை நினைவு கூர்வதும் எதனை நினைவு கொள்ள வேண்டுமோ அதனை மறந்து விடுவதும் மனிதர்களின் உடன் பிறந்தகுணம். இரண்டு மாதங்களுக்கு முன்பு முதல்- வெள்ளியன்று மாலை வெளியில் செல்கையில் உடுத்திய உடையின் நிறம் என்ன? மூன்று வாரங்களுக்கு முன்பு காலையில் உண்ட சிற்றுண்டி என்ன? என்பது எத்தனை பேருக்கு நினைவில் இருக்கும். அது நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய தேவையும் இல்லை. ஆனால் முப்பது வருடங்கள் முன்பு எங்கோ எதற்கோ நண்பர்களுக்குள் அல்லது உறவினரிடையே நடந்த ஒரு சிறுசர்ச்சையை முப்பது வருடங்களுக்கும் மேலாகச் சுமந்து கொண்டு நிம்மதி இழந்து குடும்ப நிம்மதியையும் சேர்த்தழித்து அலைபவர் எத்தனைபேர். இதுவும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய தேவை இல்லைதான். இதனையும் மறந்திருந்தால் வலியினை சுமக்காதிருந்திருந்தால் நம்மில் பலரின் வாழ்க்கை எத்தனை இயல்பாய் இரசிக்கப்பட்டிருக்கலாம்.

சில விடயங்களை முக்கியமாகத் துக்கமான சம்பவங்களை, அல்லது துன்பப்படுத்திய வரை மறப்போம் மன்னிப்போம் என்று ஆலோசனை கூறுவார்கள். இங்கு மறப்போம் என்பது தாமாகவே எமது ஞாபகத்திற்கு வருவதை நாமாக தேவை கருதி மறப்பதாகும். அவ்வாறான சூழ்நிலையில் ஞாபகமறதி ஒரு வகையில் உதவியாக அமைகின்றது. தனிமனித சோகம் சிறிது சிறிதாய் மறக்கப்பட வேண்டிய ஒன்று. செயலிழக்கச் செய்யும் நினைவுகளை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திப் பார்ப்பது தவிர்க்கப்பட வேண்டும். பிடிக்காத திரைப்படப் பாடல்களை அல்லது காட்சிகளை என்றும் நாம் நினைவு கூர்வதில்லை. பிடித்த பாடல்களையோ காட்சிகளையோ திரும்பத்திரும்ப காணவிளைகிறோம். அதுபோல் துன்புறுத்தும் நினைவுகளை மறந்து இதம் சேர்க்கும் நினைவுகளை மட்டுமே பாதுகாத்துக் கொள்ளவேண்டும். வாழ்வு இனிதாய் இருக்கும்.

சமூகக் கட்டுப்பாடு (சமூகத்தின் மீதான அக்கறை) இப்போதெல்லாம் மறக்கப்பட்டு விட்டது. குழந்தைகள் மாடிப்படிகளில் திபுதிபுவென ஓடி இறங்கினால் முன்பெல்லாம் யார் வீட்டுக் குழந்தையாயினும் வயதில் பெரியவர்கள் வித்தியாசம் பாராது என்ன வேலையிருந்தாலும் நின்று அவர்களை நிறுத்தி மெதுவாகப் போ என்று சொல்வார்கள். குழந்தைகளும் அவர்கள் பேச்சிற்கு மரியாதையுடனும் பணிவுடனும் கட்டுப்படுவர். அதுபோல் வீதியில் குடி காரக் கணவன் மனைவியை சடசடவென அடித்துக் கொண்டிருந்தால் யாராயிருந்தாலும் நின்று தவறு என்று தடுத்து நிறுத்துவார்கள்.

அரசியல் தலைவர்கள் ஏதேனும் தவறு அறியாதுசெய்தால் எதிர்க்கட்சித் தலைவரோ உறுப்பினர்களோ கடமை உணர்வுடன் எடுத்துச் சொல்லும் முறை மறக்கப்பட்டு விட்டது. அதனைமக்களின் நன்மை கருதி அப்படியே ஏற்றுக் கொள்ளும் சகிப்புத்தன்மை மறக்கப்பட்டுவிட்டது. இவையெல்லாம் எக்காலத்திலும் நினைவு கொள்ளத் தக்கது. ஆனால் இவை எளிதாய் சாதகமாய் இப்போது மறக்கப்பட்டு விட்டது. அடுத்த தேர்தல் வரும் பொழுது அரசியல், மத தீங்குகளை வசதியாக மறந்து விடுகிறோம். அரசியல் தலைவர்களும் கொடுத்த வாக்குறுதிகளை ஆட்சிக்கு வந்ததும் அடியோடு மறந்து விடுகின்றனர். எப்பேர்ப்பட்ட ஒரு கொடுப்பினை இந்தமறதி.

எல்லா மதங்களும் போதிப்பது அன்பையே. இலக்கு ஒன்று. மார்க்கங்கள் தான் வேறு. எனினும் வசதியாக எல்லாம் மறந்து அன் பினைத் துறந்து அழிவிற்கு வித்திடுகிறோம். வாழு வாழ விடு என்பது போல் "மறப்போம் மன்னிப்போம்" என்பதும் உயர்ந்த விடயம் தான். எதனை மறப்பது எதனை நினைவு கொள்வது என்பதில் தான் வேறுபாடு. எதனை எப்படிமறக்க வேண்டும் எதனை எப்போது நினைவு கொள்ள வேண்டும் எனும் கலை கைவந்து விட்டால் வாழ்வில் துயரேது. கற்போம் கற்பிப்போம் மறக்கும் கலையினை. வாழ்வோம் வாழவைப்போம் மொத்த உலகினை.

காலிங்கராசா ஹரிச்சந்திரா
தொழில்நுட்பஅலுவலர்,
மீன்பிடியியல் விஞ்ஞானத்துறை,
விஞ்ஞானபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 191

தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பின் (SAARC) நிரந்தர செயலகம் எங்கே அமைந்துள்ளது?

புதிர் 190 இற்கான விடைகளை 28.08.2017 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கலாநிதி.(செல்வி) ஷிவதர்சினி இராசலிங்கம்
ஆசிரியர்,
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்-பிரிவு A,
84,கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடமிருந்து நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

## புதிர் 190க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

கு.உமாகாந்
793, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

**புதிர் 190க்கான கேள்வியும் விடையும்:**

அண்மையில் நடைபெற்ற விம்பிள்டன் டென்னிஸ் பெண்கள் ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்றவர் யார்?

Garbine Muguruza

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 191

சரியான விடை:-..............................

முழுப்பெயர்:-..............................

முகவரி:-..............................

தொ.பே. இல:..............................

கையொப்பம்:..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளர்களின் கேள்விக்கணைகளை சரமாரியாக எதிர்கொண்ட பொலிஸ் பேச்சாளர்

## மௌனம் காத்த அமைச்சர்கள்

(கொழும்பு)

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகரவிடம் ஊடகவியலாளர்கள் சரமாரியாக கேள்விக்கணைகளை தொடுத்தனர்.

பொலிஸ் திணைக்களத்தின் ஊழியர் ஒருவரை பொலிஸ்மா அதிபர் வசைபாடுவது போன்ற காணொலி வெளியாகியுள்ளமை தொடர்பிலேயே பொலிஸ் பேச்சாளரிடம் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்கள் சரமாரியாக கேள்விக்கணைகளை தொடுத்தனர்.

இது தொடர்பில் பல வழிகளிலும் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர பதிலளித்தபோதும் ஊடகவியலாளர்கள் தொடர்ந்து கேள்விகளை எழுப்பிய வண்ணமே இருந்தனர்.

பொலிஸ் பேச்சாளரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அவர் அளித்த பதில்களும் வருமாறு.

கேள்வி:- பொலிஸ்மா அதிபர் மின்தூக்கி தொழில் பாட்டாளர் ஒருவரை அச்சுறுத்துவது போன்று காணொலி வெளியாகியுள்ளது. இது தொடர்பில் பொலிஸாரின் விளக்கம் என்ன?

பதில்:- பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர பதவிக்கு வந்ததன் பின்னர் முக்கிய சுற்றுநிருபம் ஒன்றை விடுத்திருந்தார். அதாவது காலையில் தேசிய கீதம் பாடுவதும், குறிப்பிட்ட நேரம் தியானம் செய்வதும் அவசியம் என்பதை வலியுறுத்தும் சுற்று நிருபமாகும். இதனை கட்டாயம் செய்ய வேண்டும். இந்த பணி சரியாக இடம்பெறுகின்றதா என்பதை கண்காணிப்பதற்கு பொலிஸ்மா அதிபர் அதிகாரிகளையும் நியமித்திருந்தார். அத்துடன் சில நேரங்களில் பொலிஸ்மா அதிபரே நேரில் வந்து இதனைப் பார்வையிடுவார்.

பொலிஸ் அதிகாரிகளின் மனநிலையை சரியாக பேணுவதற்கும் மக்கள் சேவையை அர்ப்பணிப்புடன் மேற்கொள்வதற்கும் இந்த செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது. அந்த வகையிலேயே குறித்த தினம் மின் தூக்கி தொழில் பாட்டாளர் அதனை சரியாக பின்பற்றாதன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் அந்த ஊழியரை பொலிஸ்மா அதிபர் தாக்கினார் எனக்கூறுவது தவறான தகவலாகும்.

அதேபோன்று மற்றொரு பெண் ஊழியரை துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்ததாகவும் சமூக ஊடகங்களில் தகவல் பரப்பப்படுகின்றது. இவை பொய்யான தகவல்கள் ஆகும். எனவே இது தொடர்பில் பொலிஸ் திணைக்களத்தின் சட்டத்தரணிகள் இணைந்து ஆராய்ந்து வருகின்றனர். விரைவில் இந்த விடயம் குறித்து சிவில் நீதிமன்றத்தில் நாங்கள் சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராய்கிறோம்.

கேள்வி:- இது தொடர்பில் விசாரணை நடத்தப்படுகிறதா?

பதில்:- எமது பொலிஸ் திணைக்கள மட்டத்தில் விசாரணை நடத்தப்படுகிறது. சிவில் நீதிமன்றத்திற்கும் செல்லவிருக்கின்றோம்.

கேள்வி:- மின்தூக்கி ஊழியரும் தியானம் செய்ய வேண்டுமா?

பதில்:- ஆம். அது கட்டாயம்.

கேள்வி:- ஒரு ஊழியரை இவ்வாறு அச்சுறுத்துவது சரியா?

பதில்:- இங்கு அச்சுறுத்தல் இல்லை. எது எப்படியிருப்பினும் இது தொடர்பில் விசாரணை நடத்தப்படுகிறது.

கேள்வி:- இந்த சம்பவம் ஏப்ரல் மாதம் நடைபெற்றதாக கூறப்படுகிறது. ஏன் இதுவரை விசாரணை நடத்தப்படவில்லை?

பதில்:- சம்பந்தப்பட்ட நபர் இதுவரை எந்தவொரு விசாரணைப் பிரிவிடமும் முறைப்பாடு செய்யவில்லை. குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் கூட முறைப்பாடு செய்யவில்லை.

கேள்வி:- திணைக்களங்களைப் பொறுத்தவரையில் மத நம்பிக்கையற்றவர்களும் இருப்பார்கள். இந்த சூழலில் இவ்வாறு தியானம் செய்ய வேண்டும் என வலியுறுத்தி சுற்றறிக்கை விடுவது சரியா?

பதில்:- எப்படியிருப்பினும் திணைக்களத்தில் பின்பற்றப்படவேண்டிய நடைமுறை தொடர்பில் சுற்றறிக்கை விடுப்பதற்கு திணைக்களத்தின் தலைவருக்கு அந்த அதிகாரம் இருக்கிறது.

கேள்வி:- இந்த காணொலி எவ்வாறு வெளியே சென்றது?

பதில்:- அது குறித்தும் நாம் ஆராய்கிறோம். குறிப்பாக குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் இருந்த காணொலியே சென்றுள்ளது.

கேள்வி:- இவ்வாறு ஒரு விடயத்தை செய்யுமாறு அரசாங்க ஊழியர்களை கட்டாயப்படுத்துவது சரியா?

[illegible] (ஊடகவியலாளர்கள் அமைச்சர்களான ராஜித சேனாரட்ன, தயாசிறி ஜயசேகர ஆகியோரிடமும் இந்தக் கேள்விகளை கேட்கின்றனர்) எந்தத் தரப்பிலிருந்தும் பதில் வரவில்லை.

கேள்வி:- அமைச்சர்களிடமிருந்து பொறுப்பான பதில்களை எதிர்பார்க்கின்றோம்?

பதில்:- (தயாசிறி ஜயசேகர) இவ்வாறு சுற்றுநிருபம் வெளியிடுவது தவறுபோல் தான் தெரிகிறது. தியானம் செய்வதை விட பொலிஸ் அதிகாரிகள் தமது உடல் வலிமையைப் பேணுவதற்கு ஏதாவது செய்யலாம் என்று ஆலோசனை கூறினார். (இ-7)


## வேலையாட்கள் தேவை

லைடன் புடைவை நிலையத்துக்கு
இரு விற்பனையாளர்கள் தேவை.
பழகியவர்களும்
பழக விரும்புபவர்களும்
விரும்பத்தக்கது.(பெண்கள்)
● கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்

(C-9356)

**லைடன் புடைவை நிலையம்**
410,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


# 10 நீதிமன்றங்களை அமைத்தாவது திருடர்களைத் தண்டிக்க வேண்டும்

## அமைச்சர் சம்பிக்க கூறுகிறார்



துப்பாக்கிகளை காட்டி யாரையும் கட்டுப்படுத்தும் அரசியல் கலாசாரம் எமது நல்லாட்சியில் இல்லை. சுயாதீனமான சட்ட நகர்வுகளின் மூலமே நல்லாட்சி அரசாங்கம் சகல பிரச்சினைகளையும் கையாள்கின்றது என பாரிய நகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஒரு நீதிமன்றம் அல்ல பத்து நீதிமன்றங்களை அமைத்தாவது திருடர்களை தண்டிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

பாரிய நகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்தக் கருத்தினை முன்வைத் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வீதி மறுசீரமைப்பு நகர்வுகளில் நாம் பல்வேறு முரண்பாடுகளுக்கு மத்தியில் செயற்பட்டு வருகின்றோம். பேருந்து போக்குவரத்து தொடர்பில் நாம் முன்னெடுத்த நகர்வுகள் எமக்கு வெற்றியளித்துள்ளன. அதேபோல் வீதி சட்டங்கள் பலப்படுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது. அதன்போது வரும் எதிர்ப்புகள் அனைத்தையும் நாம் எதிர்கொள்ள தயாராக உள்ளோம்.

முன்னைய ஆட்சியின் போது அதிக நிதி செலவில் வீதி நிர்மாண நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். ஆனால் நாம் அவ்வாறான எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. இதில் கொள்ளைகள், ஊழல் மோசடிகள் எதற்கும் இடமில்லை.

துப்பாக்கிகளை காட்டி எவரையும் அச்சுறுத்தியோ, கட்டுப்படுத்தியோ நல்லாட்சி அரசாங்கம் செயற்படவில்லை. நாம் சட்டத்தின் மூலமாக மட்டுமே எமது நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். முன்னர் துப்பாக்கிகள் மட்டுமே பேசின. அரசாங்கம் அமைதியாக இருந்தது. எவரும் கருத்துக்களை முன்வைக்க இடமளிக்கவும் இல்லை. அபிவிருத்திகளின் பின்னணியில் இருந்த ஊழல்கள் தொடர்பில் எவரும் கருத்துக் கூற முடியாத நிலைமை காணப்பட்டது.

ஆனால் இன்று நாம் அனைத்தையும் மாற்றியுள்ளோம். சட்ட நடவடிக்கைகளில் மக்களுக்கு நம்பிக்கை உள்ளது. அதேபோல் இராணுவம் மற்றும் பொலிஸார் தேவையான சந்தர்ப்பங்களில் சரியாக செயற்பட்டு வருகின்றனர்.

மேலும் திருடர்கள் தொடர்பில் அரசாங்கம் மௌனம் காப்பது சற்று ஏமாற்றமான விடயமாக இருந்தாலும் கூட விரைவில் சட்ட நகர்வுகள் பலமடையும். கடந்த கால திருடர்கள் மட்டுமல்ல நிகழ் கால அரசாங்கத்தின் திருடர்களும் கூட சட்டத்தின் முன்னால் தண்டிக்கப்படுவார்கள். இவர்களை தண்டிக்க ஒரு நீதிமன்றம் அல்ல பத்து நீதிமன்றங்களையாவது அமைத்து இவர்களைத் தண்டிக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (இ-7)

# வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

அரச தாதியர் சங்கம் நேற்று ஏற்பாடு செய்திருந்த வேலை நிறுத்தம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கலந்துரையாடல்களில் தமது கோரிக்கைகளுக்குச் சாதகமான பதில்கள் கிடைத்தமையால் குறித்த வேலை நிறுத்தத்தைத் தற்காலிகமாக கைவிட்டதாக அதன் தலைவர் சமன் ரத்னபிரிய தெரிவித்தார்.

இதேவேளை எழுத்து மூலம் வழங்கப்பட்டுள்ள உறுதிகள் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் செயற்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அதிகரிக்கப்பட்டிருக்கும் சம்பளத்தைத் தொடர்ச்சியாக வழங்குவதற்கு அதிகாரிகள் உடன்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 15சூரி செவ் 3 இல்
தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்
தொ.இ: B/7617

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: செவ் 7 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BFA/அரசதொழில்
தொ.இ: B/7620

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 39சூரிசெவ் 12 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L/சாரதி (அரச)
தொ.இ: B/7621

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 165cm
தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்
தொ.இ: B/7622

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அனுசம்
தகைமை/தொழில்:தாதிகனடா
தொ.இ: G/7619

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 30
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்
தொ.இ: G/7625

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அனுசம்
தகைமை/தொழில்: ஆசிரியர்
தொ.இ: G/7628

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: சூரிசெவ் 8 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: G/7629

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பொறுமைக்கும் நற்பண்பிற்கும் கிடைத்த பரிசு



தொடர்ந்து சில ஆண்டுகளாக மழையே பெய்யவில்லை. அந்த ஊரில் கடும் பஞ்சம் நிலவியது. மக்கள் பசியால் வாடினர். நல்ல உள்ளம் படைத்த செல்வந்தர் ஒருவரிடம் அந்த ஊர் மக்கள் சென்றனர்.

"ஐயா! பெரியவர்களாகிய நாங் கள் எப்படியோ பசியைப் பொறுத்துக் கொள்கிறோம். சிறுவர், சிறுமி யர்கள் என்ன செய்வர்? இந்த நிலையில் நீங்கள் கட்டாயம் உதவி செய்ய வேண்டும்" என்று வேண் டினர்.

இளகிய உள்ளம் படைத்திருந்த அவர்,"இந்த ஊரில் குழந்தைகள் யாரும் பசியால் வாட வேண்டாம். ஆளுக்கொரு மோதகம் கிடைக் குமாறு செய்கிறேன். என் வீட்டிற்கு வந்து மோதகத்தை எடுத்துச் செல் லச் சொல்லுங்கள்!" என்றார்.

மாளிகை திரும்பிய அவர், தன் வேலைக்காரனை அழைத்தார். "இந்த ஊரில் உள்ள குழந்தை களின் எண்ணிக்கையைக் கணக் கெடுத்துக் கொள். ஆளுக்கொரு மோதகம் கிடைக்க வேண்டும். கூடவும் கூடாது. குறையவும் கூடாது. நாளையிலிருந்து மோதகங்களைக் கூடையில் சரியான எண்ணிக் கையில் வைத்துக்கொண்டு வீட்டி ற்கு வெளியே இரு" என்றார்.

மறுநாள், வேலைக்காரன் மோத கக் கூடையுடன் வெளியே வந் தான். அங்கே காத்திருந்த சிறுவர், சிறுமியர் அவனைச் சூழ்ந்து கொண் டனர். கூடையை அவர்கள் முன் வைத்தான் அவன்.

பெரிய மோதகத்தை எடுப்பதில் ஒவ்வொருவரும் போட்டி போட் டனர். ஆனால், ஒரே ஒரு சிறுமி மட்டும் அமைதியாக இருந்தாள். எல்லோரும் எடுத்துச் சென்றது போக, மிஞ்சி இருந்த சிறிய மோத கத்தை எடுத்துக் கொண்டு அங்கிருந்து மகிழ்ச்சியுடன் சென்றாள் அவள்.

இப்படியே தொடர்ந்து நான்கு நாட்கள் நிகழ்ந்தது. எல்லாவற் றையும் கவனித்துக் கொண்டிருந் தார் செல்வந்தர்.

ஐந்தாம் நாளும் அப்படியே நடந்தது. எஞ்சியிருந்த சிறிய மோதகத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள் அந்த சிறுமி. தன் வீட்டிற்கு வந்தவள், தன் தாயிடம் அதைத் தந்தாள். அந்த மோதகத்தைப் பிய்த்தாள் தாய். அதற்குள் இருந்து ஒரு தங்கக்காசு கீழே விழுந்தது.

அந்தத் தங்கக் காசை எடுத்துக் கொண்டு செல்வந்தரின் வீட்டிற்கு வந்தாள் சிறுமி. "ஐயா! இது உங்கள் தங்கக் காசு. ரொட்டிக்குள் இருந்தது. பெற்றுக் கொள்ளு ங்கள்!" என்றாள். அவள். "மகளே! உன் பெயர் என்ன என்று கேட்டார் செல்வந்தர். சிறுமி தன் பெயர் கிருசாம்பாள் எனக் கூறினாள். மகளே உன் பொறுமைக்கும், நற்பண்பிற்கும் நான் அளித்த பரிசே இந்தத் தங்கக் காசு.மகிழ்ச்சியுடன் இதை எடுத்துக் கொண்டு வீட்டிற்குச் செல் என்றார் செல்வர். துள்ளிக் குதித்தபடி ஓடி வந்த அவள், நடந்ததை தன் தாயிடம் சொன் னாள்.

எனவே, நாமும் பொறு மையாகவும், நேர்மையாகவும் இருந்தால் பெரியோர்களின் பரிசில்களைப் பெறலாம்

## 08.2017 18 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

◆ 1201 - லாத்வியாவின் ரீகா நகரம் அமைக்கப்பட்டது.
◆ 1868 - பிரெஞ்சு வானியல் நிபுணர் பியேர் ஜான்சென் சூரிய கிரகணத்தை ஆரா யும்போது ஹீலியம் என்ற தனிமத்தைக் கண்டுபிடித்தார்.
◆ 1877 - செவ்வாய்க் கோளின் ஃபோபோஸ் துணைக் கோள் கண்டுபிடிக்கப்பட்டது.
◆ 1891 - மார்ட்டீனிக் தீவில் நிகழ்ந்த பெரும் சூறாவ ளியினால் 700 பேர் கொல்லப்பட்டனர்.
◆ 1917 - கிறீசில் தெசலோனிக்கி என்னும் நகரில் இடம்பெற்ற தீவிபத்தில் நகரின் பெரும் பகுதி அழிந்தது. 70,000 பேர் வீடுகளை இழந்த னர்.
◆ 1924 - பிரான்ஸ் ஜெர்மனியில் இருந்து தனது படைகளைத் திரும்ப அழைக்க ஆரம்பித் தது.
◆ 1928 - சென்னை மியூசிக் அகாதமி அதிகாரப் பூர்வமாக தொடங்கி வைக்கப்பட்டது.
◆ 1938 - நியூயோர்க்கையும் கனடாவின் ஒண்டாரி யோவையும் இணைக்கும் ஆயிரம் தீவுகள் பாலத்தை அமெரிக்க அதிபர் பிராங்கிளின் ரூஸ்வெல்ட் திறந்துவைத்தார்.
◆ 1950 - பெல்ஜியம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஜூலியன் லாஹூட் படுகொலை செய்யப்பட் டார்.
◆ 1958 - விளாடிமீர் நபகோவ் எழுதிய லொலிட்டா (Lolita) என்ற புதினம் அமெரிக்காவில் வெளியிடப்பட்டது.
◆ 1971 - வியட்நாம் போர்: ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகியன தமது படைகளை திரும்ப அழைக்க முடிவு செய்தன.
◆ 1983 - டெக்சாசைத் தாக்கிய அலீசியா என்ற சூறாவளியினால் 22 பேர் கொல்லப்பட்டனர்.

பிறப்புகள்

◆ 1870 - இலாவர் கோர்னிலோவ், உருசிய இராணுவத் தலைவர் (இ. 1918)
◆ 1886 - ஆர். எஸ். சுபலட்சுமி, சமூக சீர்திருத்தவாதி (இ. 1969)
◆ 1933 - ரோமன் போலான்ஸ்கி, பிரெஞ்சு-போலது இயக்குநர், நடிகர்
◆ 1934 - குல்சார், இந்திய இயக்குநர்
◆ 1945 - எஸ். எல். வி. மூர்த்தி, ஒரு தமிழக எழுத்தாளர்
◆ 1967 - தலேர் மெகந்தி, இந்தியப் பாடகர், தயாரிப்பாளர்
◆ 1972 - பிரியங்கா காந்தி, இந்தியப் பொறியாளர்
◆ 1975 - பிள்ளையான், இலங்கை அரசியல்வாதி, முன்னாள் போராளி

இறப்புகள்

◆ 440 - மூன்றாம் சிக்ஸ்துஸ் (திருத்தந்தை)
◆ 1227 - செங்கிஸ் கான், மங்கோலியப் பேரரசர்
◆ 1850 - பல்சாக், பிரெஞ்சு எழுத்தாளர் (பி. 1799)
◆ 1945 - சுபாஷ் சந்திர போஸ், இந்திய அரசியல்வாதி, விடுதலைப் போராட்ட வீரர் (பி. 1897)
◆ 2012 - ரா. கி. ரங்கராஜன், இந்திய ஊடகவியலாளர், எழுத்தாளர் (பி. 1927)
◆ 2015 - சுவ்ரா முகர்ஜி, இந்திய எழுத்தாளர், ஓவியர் (பி. 1940)

சிறப்பு நாள்

◆ மர நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 160 | 70 | 80 | 120 | 120 | 140 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 85 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 200 | 250 | 250 | 300 | 250 |
| தக்காளி | 160 | 200 | 110 | 170 | 120 | 150 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 60 | 80 | 80 | 80 | 70 |
| கோவா | 100 | 120 | 60 | 120 | 100 | 120 | 100 |
| கரட் | 100 | 200 | 120 | 200 | 160 | 160 | 200 |
| பூசணி | 50 | 100 | 35 | 60 | 60 | 80 | 60 |
| புடோல் | 50 | 100 | 50 | 100 | 120 | 80 | 80 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 100 | 80 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 160 | 200 | 140 | 200 | 200 | 150 | 160 |
| பெரிய வெங்காயம் | 120 | 150 | 120 | 140 | 120 | 140 | 140 |
| பாகற்காய் | 200 | 200 | 150 | 100 | 200 | 200 | 240 |
| வெண்டிக்காய் | 50 | 100 | 70 | 100 | 120 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 80 | 140 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 100 | 100 | 70 | 150 | 100 | 100 | 120 |
| லீக்ஸ் | 100 | 100 | 60 | 120 | 100 | 100 | 120 |
| பீற்றூட் | 50 | 100 | 40 | 60 | 80 | 60 | 60 |
| கறிமிளகாய் | 100 | 100 | 100 | 150 | 120 | 150 | 160 |
| முருங்கைக்காய் | 50 | 100 | 20 | 60 | 50 | 60 | 60 |
| போஞ்சி | 20 | 100 | 120 | 200 | 200 | 120 | 180 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 70 | 120 | 80 | 100 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 50 | 30 | 30 | 30 | 20 | 40 |
| தேசிக்காய் | 80 | 80 | 100 | 60 | 200 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 60 | 70 | 65 | 50-80 | 60 | 70 |
| இராசவள்ளி | 200 | 200 | 200 | — | — | — | 250 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 150 | 200 | 160 | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 100 | 30 | 80 | 60 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 40 | 40 | 25 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 20 | 15 | 20 |
| ஈரப்பலா | 80 | 60 | 50 | 80 | 80 | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலை.வவுனியா வளாக 25 ஆவது ஆண்டு நிறைவு விழா




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தின் 25ஆவது ஆண்டு வெள்ளி விழா நேற்று த.மங்களேஸ்வரன் தலைமையில் பம்பைமடுவில் உள்ள வளாகத்தில் இடம்பெற்றது. வவுனியா வளாகத்தின் 25ஆவது ஆண்டு வெள்ளி விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே விஞ்ஞான, கணித பாடங்களில் நடத்தப்பட்ட புதிர் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன், வவுனியா வளாகத்தில் கடந்த 20 வருடங்களாக பணியாற்றி ஓய்வுபெற்ற முதல்வர்கள், உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு, கலை நிகழ்வுகள் என்பனவும் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல, விசேட விருந்தினராக உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் மோகன்லால் கிரேரே, வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், சார்ள்ஸ் நிர்மலநாதன், சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, காதர் மஸ்தான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தனர். (8-250)

## ஆன்மீக நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்.கதிர் கலையகத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் ஆன்மீக நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு நல்லூர்க் கந்தசுவாமி கோவில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் யாழ்.பல்கலைக்கழக முதுநிலை உதவி நூலகர் பிரம்மஸ்ரீ க.நவநீதகிருஸ்ண சர்மா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பேராசிரியர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் சொற்பொழிவாற்றுவதுடன் கந்தபுராணம் தொடர் சொற்பொழிவை பண்டிதர் சைவப் புலவர் பொன்.சுகந்தன் நிகழ்த்துவார். (இ-7)

## ஆன்மீக அருளுரைகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு யாழ். சின்மயா மிஷன் நடத்தும் ஆன்மீக அருளுரைகள் (ஞானயக்ஞம்) இன்று வெள்ளிக்கிழமை இரவு 7.15 மணிமுதல் இரவு 8 மணிவரை இல. 700, பருத்தித்துறை வீதி, நல்லூர் எனும் முகவரியில் அமைந்துள்ள யாழ். சின்மயா மிஷனில் இடம்பெறும்.

இதில்தன்னம்பிக்கைஎனும் தலைப்பில் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா ஆன்மீக அருளுரை வழங்குவார். (இ-3)

## தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.45 மணி முதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

இதில் பாட்டு- பொன் ஸ்ரீ வாமதேவன், வயலின்- சா.குகபரன், மிருதங்கம்- நா. சிவசுந்தரசர்மா, முகர்சிங்- சி.செந்தூரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-3)

## தொடர் இசைப் பேருரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தப் பெருமானின் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவமகா சபை 30 வருடங்களுக்கு மேலாக நடத்தி வரும் கம்பராமாயணம் பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரை இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.45 மணிமுதல் நல்லை ஆதீன குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் இடம்பெறும்.

இதில் 'விபீஷணன் சரணாகதி' எனும் தலைப்பில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதா வாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். (இ-3)

## தெல்லியூர் துர்க்காதேவியின் வருடாந்த மஹோற்சவம்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 02.09.2017 சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள் ளன. (இ-3)

## இசை அர்ச்சனை இன்று

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு மிருதங்க வித்துவான் பிரம்மஸ்ரீ க.சுவாமிநாதன் சர்மாவின் இசை அர்ச்சனை- கதாகாலஷேபம் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் "கந்தபுராணம்" எனும் தலைப்பில் சு.அனந்த நாராயணன் சர்மா இசை அர்ச்சனை நிகழ்த்துவார். (இ-7)

## அருள்நெறி விழா

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தும் யாழ். மாவட்ட அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள்நெறிவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் மாலை 6 மணிவரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களக் கணக்காளர் எம்.ஜி. காண்டீபன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் நா.மகேந்திரராசா கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கோகுலம் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பேச்சு, தனிப்பாடல் யாழ். தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்கள் வழங்கும் கதாப் பிரசங்கம், திருப்புகழ் கச்சேரி, வள்ளி திருமணம் நாடகம் என்பன இடம்பெறும். (இ-3)

## தெய்வீகச் சிறப்பு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தசுவாமி ஆலயமஹோற்சவத்தை முன்னிட்டு உலக சைவத் திருச்சபை நடத்தும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 7.45 மணி வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் சைவப்புலவர் சிவஸ்ரீ கதிர்குமாரசாமி சுமுகலிங்கம் சிவாச்சாரியார் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் 'அமுதால் உன்னைப் பெறலாமே' எனும் தலைப்பில் மன்னார் மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் [illegible] சொற்பொழிவாற்றுவார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இந்துவாக வாழ்வோம்

மதுரம் மதுரம் முருகநாமம்
சொல்லச் சொல்ல மதுரமே
அழகு அழகு ஆறுமுகத்தான்
கருணை பொங்கும் திருமுகமே

அபயம் அபயம் முருக வேல் தான்
துணை புரியும் ஞான வேலே
எண்ணம் எண்ணம் நல்லூர் முருகன்தான்
அருளாட்சி செய்யும் கோல வடிவமே
(மதுரம்)

திருமதி சாந்தா வீரசிங்கம்,
சின்மயாமிஷன்.

## தெண்டாயுதபாணியாய் வருவான்

கண்டாமணி கணீரென்று ஒலிக்கும்
கால் மணிக்கு ஒரு தடவை
திண்டோளும் திகழ்கின்ற அறுமுகமும்
துலங்க எங்கள் திருமுருகன்
தெண்டாயுதபாணியாய் வருவான்
தேவலோகமொத்த நல்லூர்ப்பதியிலே
கண்டேன் அவன் அருட் கோலம்
கண்கள் பனித்தன கால்கள் வலம் வந்தன

ஏழாலை மு.இந்திராணி.

## இன்னருள் ஒளி தந்தருள் முருகா

முருகா நல்லைப் பதியழகா
முத்து மாமணி வேலழகா
கருணைக் கடலே கந்தாவா
கங்கையிற் தவழ்ந்த செல்வாவா
அருளே அருளின் ஒளிநீயே
அன்னை உமையவள் பாலகனே
இருகர மலர்குவித் துன்னடிகள்
பணிந்தே னருள்வாய் அருள்வாயே

சு.குகதேவன்
தெல்லிப்பழை.

## காத்திட வருவாய் வேலவனே

ஆறுபடை வீடுடைய
அலங்காரக் கந்தனே
ஏறு மயில் ஏறிவரும்
எழில் ததும்பும் வேலவனே

சரவணப் பொய்கையில்
சக்தியின் அரவணைப்பால் தோன்றிய
ஆறுமுகக் கந்தா அலங்கார
வடிவுடனே அமைந்திருக்கும் குமரா

வேண்டும் அடியவரின் வினை தனை
அறுப்பவனே நாடிவரும் பக்தர்
நலம் காப்பவனே தோகை மயில்
ஏறி வையகம் காத்திட
வேண்டும் ஐயா!

கு.சுரேஸ்குமார்,
கைதடி மேற்கு.

## நல்லைக்கந்த சந்தப் "பா"

இதயம் மட்டுமே யிருப்ப தாலுனை
ஏற்றி வைத்ததென் னேழை நெஞ்சமே
உதய மாகியே யுள்நின் றாடியே
உன்னை யேயெனக் குணர வைத்தனை
எதையு மேயறி யாத பேதையை
எழுத வேகவி எடுத்தி யம்பினை
புதைய லாயுனைப் போற்றி யேற்றியே
பூரிக் கின்றனன் நல்லைக் கந்தப்பா!

கலாபூஷணம், சந்தக்கவிஞர் நவ.பாலகோபால்

# மத்தள விமான நிலையத்தை இந்தியாவுக்கு கொடுப்பது 100 மடங்கு ஆபத்தானது

## விமல் வீரவன்ச காட்டம்



(கொழும்பு)

மத்தள விமான நிலையத்தில் நேரடித் தலையீடு, அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு குத்தகைக்குக் கொடுத்ததை விட 100 மடங்கு அதிகம் ஆபத்தானதுஎன்றுதேசியசுதந்திரமுன்னணியின் தலைவரான விமல் வீர வன்ச காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

'மத்தள உடன்பாடு இலங்கைக்கு மிகவும் பாதகமான நிலையை ஏற்படுத்தும். எந்தவொரு சூழ்நிலையிலும் அம்பாந்தோட்டை உடன்பாட்டை மத்தளவுடன் ஒப்பீடு செய்ய முடியாது.

மத்தள விமான நிலையத்தினால் பிராந்திய சக்தியான இந்தியாவுக்கு எந்த வர்த்தகப் பெறுமதியும் கிடைக்காது. எனவே இதனை இந்தியா எப்படிப் பயன்படுத்தப் போகிறது என்ற கேள்வி உள்ளது.

நாட்டின் தேசிய சொத்துக்களை நீண்டகால குத்தகைக்கு வெளிநாடுகளுக்கு கொடுக்கும் போது, இலங்கையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும்.

இந்த களநிலவரங்களை தற்போதைய அரசாங்கம் அறிந்திருப்பதாக தெரியவில்லை.

இதுபற்றி அவர் களுக்கு அக்கறையில்லை.

அவர்களுக்குத் தனியே, மேற்குலகத்தையும், இந்தியாவையும் திருப்திப்படுத்துவது தான் ஒரே தேவையாக இருக்கிறது" என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# மத்தள விமான நிலையம் மீதான இந்தியாவின் மேலாதிக்கத்தை குறைக்க இலங்கை முயற்சி

மத்தள விமான நிலையத்தை கூட்டு முயற்சியாக அபிவிருத்தி செய்யும் இந்தியாவின் திட்டம் குறித்து இன்று பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளன. மத்தள விமான நிலையத்தின் 70 வீத பங்குகளை 205 மில்லியன் டொலருக்கு, அபிவிருத்தி செய்து, 40 ஆண்டுகளுக்கு அதனை இயக்குகின்ற திட்டம் ஒன்றை இந்திய அரசாங்கம் முன்வைத்திருந்தது.

கடந்த மே மாதம் இந்திய அரசாங்கம் இந்த யோசனையை முன்வைத்திருந்தது. இந்தத் திட்டம் குறித்த மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான குழுவொன்றை அமைப்பதற்கு இலங்கை அமைச்சரவையும் ஒப்புதல் அளித்திருந்தது.

இந்த நிலையில், இந்த திட்டம் தொடர்பாக இலங்கை அரசாங்கம் இந்தியத் தரப்புடன் பேச்சுக்களை நடத்தவுள்ளது.

குறிப்பாக, இந்தியாவுக்கு 70 வீத பங்குகளையும் இலங்கைக்கு 30 வீத பங்குகளையும் பகிரும் வகையில் முன்மொழியப்பட்டுள்ள யோசனையைத் திருத்துவதில் இலங்கை கவனம் செலுத்தவுள்ளது.

இந்தியாவுக்கு பெரும்பான்மை பங்குகளை கொடுக்காமல், கூடுதல் பங்குகளை வைத்திருப்பது குறித்து இலங்கை பேசவுள்ளது.

இந்தியாவுக்கு 49 வீதமும், இலங்கைக்கு 51 வீதமும் என்ற அடிப்படையில் பங்குகளைப் பகிர்ந்து கொள்வதற்கான இணக்கப்பாட்டை ஏற்படுத்த இலங்கை அரசாங்கம் இன்றைய பேச்சுக்களில் முயற்சிக்கவுள்ளது.

அதேவேளை, இந்த கூட்டு முயற்சி உடன்பாட்டில், விமானப் போக்குவரத்து கட்டுப்பாடு, சிவில் விமான ஒழுங்குமுறைகளை இந்தியாவுக்கு வழங்க முடியாது என்றும், தனியே வர்த்தக செயற்பாடுகளை மட்டுமே கொடுக்க முடியும் என்றும், போக்குவரத்து அமைச்சின் செயலர் நிகால் சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் திட்டத்தில் கூறப்பட்டுள்ளது போல, 40 ஆண்டுகள் குத்தகைக் காலத்தை குறைப்பதற்கும் இலங்கை திட்டமிட்டுள்ளது.

அதேவேளை, மத்தள விமான நிலையத்தின் சொத்துக்களை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த மதிப்பீட்டு அறிக்கையைப் பொறுத்தே, பங்குகளின் அளவு தீர்மானிக்கப்படும்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஜே.வி.பியின் சின்னத்தை மாற்ற தீர்மானம்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் தற்போதைய சின்னத்துக்குப் பதிலாக பொதுவான அடையாளமொன்றை பயன்படுத்தி எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தலுக்கு முகம் கொடுக்க மக்கள் விடுதலை முன்னணி தீர்மானித்துள்ளதாக அக்கட்சியின் ஊவா மாகாண சபை உறுப்பினர் சமந்த வித்யா ரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் அரசியல் மாற்றமொன்றுக்காக பாரிய மக்கள் புரட்சியொன்றை ஏற்படுத்தப் போவதாகவும் இதன்போது, மக்கள் விடுதலை முன்னணி புதிய சின்னத்தில் அறிமுகமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### நீங்கள் பொறுப்பானவரா?

சில பெற்றோர் இப்படி வருத்தப்படுகிறார்கள்; "பையனுக்குப் பொறுப்பே வரலீங்க, அதாங்க ரொம்பக் கவலையா இருக்கு?"

சில நிறுவனங்களில் ஊழியர்கள் இப்படித் திட்டு வாங்குகிறார்கள். "கொஞ்சமாச்சும் பொறுப்பு வேண்டாம் உங்களுக்கு"

சில மனைவிகளும் சில கணவர்களும் இப்படி வாங்கிக் கட்டிக் கொள்கிறார்கள். "குடும்பப் பொறுப்பு வேண்டாம் உங்களுக்கு/உனக்கு"

இவர்களெல்லாம் குறிப்பிடும் பொறுப்பு என்பது எதைக் குறிப்பது?

பொறுப்புணர்ச்சிஎன்பதுபலநல்லகுணங்களின் கலவை. இச் சொல்லுக்கு விளக்கம் தர ஒரு வாக்கியத்தால் முடியாது. ஒரு பாராவே தேவை.

கவலைப்பட வேண்டியதற்குக் கவலைப்பட்டு, அக்கறை காட்ட வேண்டியதில் அக்கறை காட்டி, மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து, நம்பிக்கைக்கு உரியவர்களாக நடந்து கொண்டு, கவனமாகவும் நிதானமாகவும் நல்ல நினைவாற்றலோடும் செயற்பட்டு இன்னும் இப்படியாக அடுக்கிக் கொண்டே போகக் கூடிய நல்ல அம்சங்கள் பலவற்றையும் கொண்டிருப்பவர்தான் பொறுப்பானவர்.

சிறு வயதாக இருந்த போது ஒருவரிடத்தில் விளையாட்டுக் குணம் இருந்தால் சரி, தவறில்லை. வயது ஏற ஏற விளையாட்டுக் குணம் குறைந்து பொறுப்புணர்ச்சி அதிகப்பட வேண்டும்

கல்வி வாழ்க்கையை முடித்ததும் கொஞ்சம் கூடுதல் பொறுப்புணர்ச்சி. வேலையில் சேர்ந்ததும் கைகட்டிச் சேவகம் புரிகிற இடத்தில் இன்னும் கொஞ்சம் பொறுப்புணர்ச்சி. திருமணமானதும், தன்னை நம்பியிருக்கிற அல்லது தான் சார்ந்து இருக்கிறஓர்உயிருக்காகக்கூடுதல்பொறுப்புணர்ச்சி; பிள்ளைகள் பிறந்ததும் தம்மை நம்பி வந்து இந்த உலகில் காலடி வைத்துள்ள இந்த ஜீவன்களுக்காக அதிகப்படியான பொறுப்புணர்ச்சி, கூடுதல் வளர்ச்சி, வகிக்கும் பதவி, கூடுதல் செல்வாக்கு, வயது அதிகமாகுதல் இவற்றின் காரணமாக மித மிஞ்சிய பொறுப்புணர்ச்சி என்று இது ஏறுமுகமாகவே செல்ல வேண்டுமே தவிர, தலைகீழாக ஆகிவிடக்கூடாது.

அதை விடுத்து, எது எப்படியோ போகட்டும் என்று கற்பனை உலகில் சஞ்சாரம் பணிக் கொண்டிருந்தால் பொறுப்புணர்ச்சி வளராது.

பொறுப்புகளை உதறிவிட்டு மேலோட்டமாகத் திரிபவர்கள் எவரும் உருப்பட்டு வந்ததாகத் தெரியவில்லை. யார் என்ன பெயர் எடுத்தாலும் பரவாயில்லை, சமாளித்து விடலாம். பொறுப்பு இல்லாதவர் என்ற பெயரை மட்டும் எடுத்து விட வேண்டாம் அப்புறம் தலை தூக்கவே முடியாது!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவியுடைப் பேரினவாதத்தை களத்திற்கு கொண்டுவருவது ஆபத்து

## பிரதியமைச்சர் அமீரலி எச்சரிக்கை

(கொழும்பு)

**தமிழ், முஸ்லிம் சமூகம் ஒற்றுமைப்பட்டு வாழுகின்ற சந்தர்ப்பங்களை நழுவ விட்டு முரண்பட்டு காவியுடைப் பேரினவாதத்தை களத்திற்குக் கொண்டு வருவது ஆபத்தானது என கிராமிய பொருளாதார பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீரலி எச்சரித்தார்.**



கிராமிய பொருளாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு[illegible] வீதிகளைப் புனரமைத்தல் மற்றும் சுயதொழிலுக்கான உபகரணத் தொகுதிகளை வழங்கி வைக்கும் நிகழ்வு ஏறாவூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் எம்.எல். அப்துல் லத்தீப் தலைமையில் ஏறாவூர் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பிரதியமைச்சர் மேலும் உரையாற்றுகையில்,

தமிழருக்கும் முஸ்லிம்களுக்குமிடையே இருக்கின்ற முரண்பாடுகளை பேரினவாத காவியுடை தரித்தவர்கள் வந்து நீதவானாக நின்று நீதி சொல்லுகிற ஒரு சங்கடமான சூழ்நிலைக்குள் நாம் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றோம்

காணிப் பிரச்சினை முஸ்லிம்களுக்கும் உள்ளது தமிழர்களுக்கும் உள்ளது.

தமிழ்,முஸ்லிம் மக்கள் வாழும் எல்லைப் புறங்களிலே இந்தப் பிரச்சினை இருக்கின்றபோது அதனைப் பார்த்து அக்கறை எடுத்துத் தீர்த்துக் கொள்வதற்கு சமூகத் தலைவர்கள் இருக்கிறார்கள், கோயில் பள்ளிவாசல் பரிபாலகர்கள், தர்மகர்த்தாக்கள், மக்கள் பிரதிநிதிகள் நிர்வாக அதிகாரிகள் போன்றோர் இருக்கிறார்கள்.

அதேவேளை காவியுடை தரித்தவர்கள் கைக்கூலிக்கு எங்கிருந்தோ ஆட்களைத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்து இயல்பு நிலையைக் குழப்பி இனமுறுகலை ஏற்படுத்தி அரசியல் இலாபம் தேட முயற்சிக்கிறார்கள்.

இது குறித்து இரு சமூகங்களும் எச்சரிக்கையாக இருந்து கொள்ள வேண்டும்.

எங்களுக்காகப் பரிந்து பேசுவதாகச் சொல்லிக் கொள்ளுகின்ற இந்தக் காவியுடைக் காரர்களின் பேரினவாத சூழ்ச்சியால் சிறுபான்மை இனங்கள் குறிப்பாக தமிழ் மக்கள் அழிவடைந்த வரலாறு உலகறிந்ததே.

இப்பொழுது அதே பேரினவாத காவியுடைக்காரர்கள் தமிழரையும் முஸ்லிமையும் முட்டி மோத வைத்து அழிவுகளை ஏற்படுத்த ஆவலாய் இருக்கும் நயவஞ்சகத் தனத்தை தமிழரும் முஸ்லிமும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

காவியுடைக்காரர்களின் பேரினவாத தந்திரோபாயங்களை விளங்கிக் கொள்ள நாம் கலாநிதிப் பட்டம் பெற வேண்டியதில்லை. அது சாதாரண பாமர மகனுக்கும் பட்டவர்த்தனமாகத் தெரியும்.

இந்த விடயத்தில் தமிழ், முஸ்லிம் பொது மக்களும் இரு சமூக அரசியல் தலைமைகளும் கருத்தொருமித்து கவனமாகக் காரியமாற்ற வேண்டும்.

இல்லையேல் சிறுபான்மை இனங்கள் சிதைக்கப்பட்டு அவர்களின் வரலாறே இல்லாமல் இந்த பேரினவாதக் காவியுடைகள் சிறுபான்மையை அழித்து விடும்.

வடக்கு கிழக்கிலும் இந்த மாவட்டத்திலும் இருக்கின்ற தமிழ், முஸ்லிம் அரசியல் தலைமைத்துவங்கள் முரண்பாடுகளை மறந்து இப்பொழுது கைகோர்த்திருக்கின்றோம்.

இந்த உறவு இன்னமும் இறுக்கமானதாக வளர்ந்து பேரினவாத காவியுடைத் தந்திரத்தை முறியடிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 2020 இல் மகிந்தவின் ஆட்சி

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அணியினர் ஆட்சிக்கு வரலாம் என்ற தொனியில் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரட்ன நேற்று கருத்து முன்தினம் வெளியிட்டார்.

அரசாங்கத் தகவல் [illegible]ணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

ஒன்று அல்லது இரண்டு மேல் நீதிமன்றங்களை ட்ரயல் அட்பார் நீதிமன்றங்களாக மாற்றி கடந்த ஆட்சியாளர்கள் தொடர்பான ஊழல் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை முன்னெடுக்க வேண்டும்.

2020 ஆம்ஆண்டு வரை இதனை இழுத்தடிப்பதற்கு இடமளிக்க முடியாது. அப்படி 2020 ஆம் ஆண்டு வரை இந்த விசாரணைகள் இழுத்தடிக்கப்பட்டால் அதன்பின்னர் மகிந்தவுக்கு எதிரான குற்றச்சாட்டை மகிந்தவே விசாரணை செய்யும் நிலைமை ஏற்பட்டு விடலாம்.

கேள்வி:- அப்படியானால் 2020 ஆம் ஆண்டில் மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வரலாம் என்று கூறுகிறீர்களா?

பதில்:- ஒரு விடயத்தை நன்றாகப் புரிந்துகொள்ளுங்கள், நாங்கள் ஆட்சிக்கு வராவிடின் அவர்கள்தான் ஆட்சிக்கு வருவார்கள். இல்லாவிடின் ஜே.வி.பியால் ஆட்சிக்கு வரமுடியுமா? நாம் யதார்த்தத்தையும் புரிந்து கொள்ள வேண்டும்.

கேள்வி:- மாகாண சபைத் தேர்தல்களை பிற்போடுவதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக குற்றம்சாட்டப்படுகின்றது.

பதில்:- அப்படி இல்லை. மாகாணசபைத் தேர்தல்களை ஒரே தரத்தில் நடத்த வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கிறது. இது தொடர்பில் நாங்கள் மக்களுக்கு வாக்குறுதி வழங்கியிருக்கிறோம். அந்த வாக்குறுதியை நிறைவேற்றவே முயற்சிப்போம். மாகாணசபைத் தேர்தலை ஒரே நாளில் நடத்தவேண்டும் என்பதே எமது நோக்கம். குறிப்பாக மாகாணசபைத் தேர்தலையும் உள்ளூராட்சித் தேர்தலையும் ஒரே தினத்தில் நடத்துவதற்கே ஆராய்கின்றோம். அதேபோன்று பாராளுமன்றத் தேர்தலையும் ஜனாதிபதித் தேர்தலையும் ஒரே தினத்தில் நடத்துவதற்கு ஆராய்கின்றோம்.

கேள்வி:- இவை எல்லாவற்றுக்கும் முன்னர் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவது குறித்து நீங்கள் கருத்து வெளியிட்டீர்களா?

பதில்:- இந்தத் தேர்தல்களுக்கு முன்னர் உண்மையில் சர்வஜனவாக்கெடுப்பை நடத்துவதே சிறப்பாக இருக்கும். காரணம் நான் இது தொடர்பில் ஜனாதிபதியிடமும் பேசினேன். அவரும் சர்வஜன வாக்கெடுப்பு குறித்து ஆராயவேண்டும் என்று கூறினார்.

கேள்வி:- சர்வஜன வாக்கெடுப்பை சுதந்திரக் கட்சி எதிர்க்கின்றதே?

பதில்:- சுதந்திரக்கட்சி எதிர்க்காது என்றே கருதுகின்றேன். சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதன் மூலம் சுதந்திரக்கட்சிக்கே அதிக நன்மை இருக்கிறது. இன்று சர்வஜன வாக்கெடுப்பை ஐக்கிய தேசியக்கட்சியும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும், மக்கள் விடுதலை முன்னணியும் கோரிநிற்கின்றன. எதிர்ப்பதாயின் மகிந்த மட்டுமே இதனை எதிர்ப்பார். எனவே அனைவரும் விரும்பி நிற்கின்றபோது சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதே சிறந்ததாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நீர்கொழும்பில் கட்டடம் ஒன்றின் கொங்கிறீட் உடைந்து விழுந்தது



நீர்கொழும்பு, பெரியமுள்ள பிரதேசத்தில் நேற்றுக் காலை நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்த கட்டடம் ஒன்றின் கொங்கிறீட் தட்டு உடைந்து விழுந்ததில் மூன்று பேர் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளவர்களில் இருவர் காப்பாற்றப்பட்டு நீர்கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மற்றொரு நபரை மீட்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## விபத்தில் இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கேகாலை, அவிஸ்ஸாவளை வீதியில் பிந்தெனிய, பிட்டகல்தெனிய் பிரதேசத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்ற விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

கார் ஒன்று வீதியை விட்டு விலகி குருகொட ஓயாவில் விழுந்ததன் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளதென்று பொலிஸர் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த மூன்று பெண்கள் உள்ளிட்ட ஐந்து பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், அவர்களில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் 57 வயதுடைய காரின் சாரதி மற்றும் 31 வயதுடைய அவரது மகன் என்று பொலிஸார் கூறினர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு பரவும் அபாயம்!

## சுத்தம் செய்துதருமாறு கோரும் மக்கள்



(பரந்தன்)

கிளிநொச்சியில் டெங்கு பரவும் அபாயம் காணப்படும் பகுதிகளை நீண்ட காலமாக சுத்தம் செய்ய தவறியுள்ளமை தொடர்பில் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி தொண்டமான் நகர் பகுதியிலிருந்து இரணைமடு சந்திவரையான ஏ9 வீதியில் இவ்வாறு டெங்கு நுளம்பு பெருகக்கூடிய நிலையில் குப்பைகூழங்கள் காணப்படுகின்றன. இவற்றை நீண்ட காலமாக கரைச்சி பிரதேச சபையினர் அகற்றவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு காணப்படும் பகுதிகளை அண்டிய பகுதியில் அதிகளவான குடியிருப்புக்கள் காணப்படுகின்றன. கரைச்சி பிரதேச சபையினர் உடனடியாக செயற்பட்டு குறித்த பகுதிகளை சுத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பிரதேச மக்களின் கோரிக்கையாகும்.(8-312)




# நேர்முகத் தேர்வு

தேசிய தொழிற்றகைமை (NVQ) மட்டம் 4 ற்குரிய தொழிற்பயிற்சிகளின் முழுநேரக் கற்கை நெறிக்கான நேர்முகத் தேர்வுகள் எதிர்வரும் 22 ஆம் திகதி Auto mobile Mechanic பாடமும் 24 ஆம் திகதி ICTT பாடமும் 28 ஆம் திகதி Electronics பாடமும் காலை 9 மணிக்கு NAITA நிறுவனத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது.

இந் நேர்முகத் தேர்வுக்கு தேசிய அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ்கள் போன்றவற்றின் மூலப் பிரதிகள் மற்றும் நிழற் பிரதிகளுடன் நேர்முகத் தேர்விற்கு சமுகமளிக்குமாறும் பயிற்சிநெறிகள் யாவும் முற்றிலும் இலவசமாக அமையும் என்பதுடன் போக்குவரத்திற்கான பருவ கால சிட்டை சலுகை அடிப்படையில் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்து தரப்படும் எனவும் NAITA நிறுவனத்தின் கிளி நொச்சி மாவட்ட முகாமையாளர் நளீம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஆரம்பிக்கவிருக்கும் தேசிய தொழிற்றகைமை மட்டம் 4 ற்குரிய தொழிற் பயிற்சிகளின் முழு நேரக் கற்கை நெறியில் பாடசாலைக்கல்வியை நிறைவு செய்து இடைவிலகிய 16-35 வயதிற்குட்பட்ட இளைஞர், யுவதிகளை இணைந்து கொண்டு பயிற்சி பெறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (8)

# டெங்கு பரவும் சூழல் காணப்பட்டால் சட்ட நடவடிக்கை- சுகாதார பிரிவினர்

கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு நுளம்பு பெருகும்சூழல் காணப்பட்டால் அந்தசூழல் காணப்படுகின்ற இடத்தின் உரிமையாளர் மீது இன்று முதல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி சுகாதார பிரிவினர் அறிவித்துள்ளனர்.

மாவட்டத்தில் டெங்கு நோய் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் தற்போது அவற்றை கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நேற்று முன்தினம் புதன்கிழமை மாவட்டத்தின் பல இடங்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு நேற்று வியாழக்கிழமை பொது மக்கள் மற்றும் படையினர் ஆகியோர் பங்குகொண்டு துப்புரவு பணிகளில் ஈடுபட்டனர். இதன் தொடர்ச்சியாக இன்று வெள்ளிக்கிழமை வியாபார நிலையங்கள், பொது இடங்கள் என்பன ஆய்வுக்குட்படுத்தப்பட்டு அவற்றில் டெங்கு நுளம்பு வளரும்சூழல் காணப்பட்டால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார பிரிவினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு சுகாதார அமைச்சினால் விடுக்கப்பட்ட பணிப்பிற்கமையவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் இதற்காக கொழும்பிலிருந்து சுகாதார அமைச்சின் விசேட குழுவொன்று கிளிநொச்சிக்கு வருகைதந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

தை மாதத்திலிருந்து தற்போது வரையான நாட்களில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் மொத்தம் 815 நோயாளர்கள் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டுச் சிகிச்சை வழங்கப்பட்டது. இவர்களுள் 585 நோயாளர்கள் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஏனையோர் பிற மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (8-312)

# சர்வதேச தென்னை விழா





சர்வதேச தென்னை விழாவினை முன்னிட்டு பளை பிரதேச பொலிஸ் நிலையத்தினால் இயக்கச்சி முகாவில் பகுதியில் நடந்துவரும் நடமாடும் பொலிஸ் பிரிவினரால் முகாவில் மக்களுக்கு நேற்றையதினம் தென்னம் பிள்ளைகள் வழங்கப்பட்டதுடன் தென்னம் பிள்ளைகளை எவ்வாறு பராமரிப்பது என்பது தொடர்பாக தென்னை அபிவிருத்தி பிராந்திய சபையினால் விரிவாக்கல் நிகழ்வும் இடம் பெற்றது.

இந்நிகழ்விற்கு பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரஞ்சித பண்டார மற்றும் தென்னை அபி விருத்தி சபை முகாமையாளர் வைகுந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (8-111)

# தற்கொலை செய்ய முயன்றவரை காப்பாற்றிய புகையிரத காப்பாளர்

வவுனியா, மன்னார் வீதி புகையிரதக் கடவைக்கு அண்மித்ததாக புகையிரதத்தில் தற்கொலை செய்ய முயன்ற குடும்பஸ்தர் ஒருவரை அப்பகுதியில் கடமையில் இருந்த புகையிரத கடவைக் காப்பாளர் ஒருவர் காப்பாற்றிய சம்பவம் இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 7.20 மணியளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா - மன்னார் வீதியில் காமினி மகாவித்தியாலயத்திற்கு அண்மையில் அமைந்துள்ள புகையிரதக் கடவைக்கு அண்மித்தாக உள்ள புகையிரதப் பாதையில் வயது முதிர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் நீண்ட நேரமாக படுத்திருந்திருந்துள்ளார். இதனை அவதானித்த அயலில் வசிப்பவர்கள் அவரை அவ்விடத்தில் இருந்து அகற்ற முயன்ற போது அவர் மறுப்பு தெரிவித்ததுடன், தான் தற்கொலை செய்யப் போவதாகவும் தெரிவித்துள்ளார். இதனையடுத்து குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா - மன்னார் வீதி புகையிரதக் கடவையில் கடமையில் இருந்த உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

சம்பவ இடத்திற்கு சென்ற உத்தியோகத்தர் அவரை அங்கிருந்து கட்டாயப்படுத்தி அகற்றி புகையிரதக் கடவை காப்பாளரின் அறைக்கு அழைத்து வந்தார். இதன் போது அங்கு நின்றவர்கள் இது தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையம் மற்றும் வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் உள்ள தமிழ்மொழி மூல அவசர தொலைபேசி இலக்கம் என்பவற்றுக்கு தகவல் வழங்கியிருந்தனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த வவுனியா பொலிஸார் குறித்த நபரை மீட்டதுடன் அவர் தற்கொலை செய்யப் போவதாக தெரிவித்தமையடுத்தும் மதுபோதையில் இருந்தமையினாலும் அவரை பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர். (8-250)

# வயல் விழா

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள விவசாயப்பயிற்சி நிலையத்தினால் நடத்தப்படும் வயல் விழா கண்காட்சி நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை மாவட்ட விவசாயப் பயிற்சி நிலைய வளாகத்தில் இடம் பெறவுள்ளது.

இவ் விழாவில் சேதன முறையிலான செய்கை, வீட்டுத் தோட்டம், அதிசெறிவான மாமரச் செய்கை, பத்திரக் கலவையுடன் பப்பாசி, வீதி முறைப் பயிர்ச்செய்கை, நாற்று மேடைப் பரிபாலனம், ஏற்றுமதிப் பயிர்கள், வரட்சியான காலத்தில் விதைப் பரிகரணம், நீர்ப்பாசன முறைகள், பத்திரக் கலவையிடும் முறைகள் மழைக் கூடாரத்தில் பயிர்ச்செய்கை, வலைவீட்டினுள் பயிர்ச்செய்கை, காளான் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, முயல் வளர்ப்பு, தாரா வளர்ப்பு, பண்ணை இயந்திரங்களின் அலகு விதையிடும் கருவிகளின் செய்முறை காட்டுதல், வரம்பு கட்டும் கருவிகளின் செய்முறை காட்டுதல், உமிக் கரி மற்றும் உயிர்க்கரி தயாரிப்பும் பாவனையும், நிலக் கடலைப் பிரித்தெடுப்பும் இயந்திரம் பயிர்ச் சிகிச்சை முகாம் போன்றன காட்சிப்படுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)



யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் வெள்ளிவிழா ... பெற்றது...

# பயிற்சி வகுப்புக்கள்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி கிளையினால் ஆங்கிலம், சிங்களம் மற்றும் முதலுதவி அனர்த்த முகாமைத்துவம் ஆகிய அறிவு மற்றும் திறன்சார் பயிற்சி வகுப்புக்களை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ள பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொண்டு பயிற்சி நெறியை முழுமையாக பூர்த்தி செய்யும் அனைவருக்கும் பெறுமதியான சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

எனவே குறித்த பயிற்சி வகுப்புக்களில் பங்கு கொள்ள ஆர்வம் கொண்டுள்ளவர்கள் இலங்கை செஞ்சிலுவைச்சங்க கிளிநொச்சிக் கிளை அலுவலகத்தில் தொடர்பு கொண்டு பெயர்களை பதிவு செய்ய முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் பதிவு செய்ய விரும்புபவர்கள் 021-228 5843 எனும் அலுவலக தொலைபேசி இலக்கத்தினை தொடர்பு கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிஸ்புல் வெளிநாட்டு தீவிரவாத இயக்கம்

## அமெரிக்கா அறிவிப்பு



(வோஷிங்டன்)

சில தீவிரவாத இயக்கங்களுக்கு அமெரிக்கா சமீப காலமாக தடை விதித்து வருகிறது.

காஷ்மீரில் ஹிஸ்புல் முஜாகிதீன் தீவிரவாத இயக்கத்தின் நடவடிக்கைகள் தீவிரமடைந்து உள்ளதை தொடர்ந்து அதை வெளிநாட்டு தீவிரவாத இயக்கமாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

பாகிஸ்தானில் இயங்கி வரும் இந்த இயக்கத்தின் தலைவர் சையத் சலாலுதினை சர்வதேச தீவிரவாதியாக கடந்த 2 மாதங்களுக்கு முன் அமெரிக்கா அறிவித்தது.

தற்போது அவரை தலைவராகக் கொண்டு இயங்கி வந்த ஹிஸ்புல் முஜாகிதின் இயக்கத்தை வெளிநாட்டு தீவிரவாத இயக்கமாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதன் மூலம், அமெரிக்கர்கள் யாரும் இந்த இயக்கத்துடன் எந்தப் பரிமாற்றமும் வைத்துக் கொள்ள முடியாது. (8)

# கட்டார் எல்லையைத் திறக்க சவுதி அரேபிய மன்னர் முடிவு



கட்டாரைச் சேர்ந்த ஹஜ் புனித யாத்திரிகர்களுக்காக அந்நாட்டுடனான எல்லையை மீண்டும் திறக்க சவுதி அரேபிய மன்னர் சல்மான் முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தீவிரவாத இயக்கங்களுக்கு உதவி செய்வதாக கூறி கட்டாருடனான தூதரக உறவை முறித்துக்கொள்வதாக சவுதி அரேபியா, ஐக்கிய அமீரகம், எகிப்து, பஹ்ரைன், ஏமன் உள்ளிட்ட 6 அரேபிய நாடுகள் கடந்த ஜூன் மாதம் அறிவித்திருந்தன.

வளைகுடா நாடுகளுக்கிடையே இந்த விவகாரம் இன்னும் தீராத நிலையில், குவைத், ஈரான், துருக்கி



உள்ளிட்ட நாடுகள் கட்டாருக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்தன.

சவுதி அரேபியாவில் உள்ள இஸ்லாமியர்களின் புனித ஸ்தலமான மெக்கா, மதினாவுக்கு ஆண்டுதோறும் கட்டாரிலிருந்து யாத்திரிகர்கள் வருவது வழக்கமான ஒன்று. தற்போது, இரு நாடுகளுக்கிடையே உள்ள பிளவால் கட்டார் யாத்திரிகர்களை சவுதி அனுமதிக்குமா? என்ற கேள்வி எழுந்தது.

இந்நிலையில், கட்டாரைச் சேர்ந்த ஹஜ் யாத்திரிகர்களுக்காக அந்நாட்டுடனான எல்லையை திறக்க மன்னர் சல்மான் முடிவு செய்துள்ள தாக சவுதி அரசு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும், கட்டார் தலைநகர் டோஹாவிலிருந்து விமானங்கள் மூலம் யாத்திரிகர்களை அனுமதிக்கவும் சவுதி முடிவு செய்துள்ளது.

முன்னதாக, தங்களது நாடுகளைச் சேர்ந்த யாத்திரிகர்களுக்கு தேவையான பாதுகாப்பு அளிக்க வேண்டும் என கட்டார் கோரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. (8)

# எங்களுக்கு எதுவும் தெரியாது

## சீனா மழுப்பல் பதில்

காஷ்மீர் எல்லையில் உள்ள லடாக்கில் சீன படைகள் ஊடுருவல் நடந்ததா என்பது எங்களுக்கு தெரியாது என்று சீனா மழுப்பலாக பதில் அளித்துள்ளது. இந்திய எல்லைகளில் தற்போது சீனப்படைகள் தொடர்ந்து ஊடுருவி வருகிறது. சிக்கிம் எல்லையில் உள்ள டோக்லாம் பகுதியில் வீதி அமைக்கும் பணியை இந்திய படைகள் தடுத்து நிறுத்தின. இதனால் சுமார் இரண்டு மாத காலமாக அங்கு இருநாட்டு படைகளும் குவிக்கப்பட்டு பதற்றம் நிலவி வருகிறது. முதலில் இந்தியா தனது படைகளை வாபஸ் பெற வேண்டும் என்று சீனா பிடிவாதம் பிடிப்பதால் இந்த பிரச்சினை இன்னும் முடிவுக்கு கொண்டு வரப்படவில்லை.

இதற்கிடையே கடந்த செவ்வாய்க்கிழமை காஷ்மீர் மாநிலம் லடாக் பகுதியில் சீனப் படைகள் அத்துமீறி ஊடுருவியுள்ளன. இதைப் பார்த்த இந்தியப் படைகள் மனித சங்கிலி அமைத்து சீனப் படைகள் ஊடுருவலை தடுத்தனர். அவர்களை மீறி சீனப் படைகளால் உள்ளே நுழைய முடியவில்லை.

எனவே, பதிலடியாக கற்களை வீசி தாக்குதல் நடத்தினர். அதேபோல் இந்தியப் படைகளும் கற்களை வீசி பதிலடி கொடுத்தனர். இதில் இருதரப்பிலும் சிலர் காயம் அடைந்தனர்.

இந்த சம்பவம் குறித்து சீன வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் ஷ௳ சன்னியங்கிடம்கேட்ட போது அவர் தெரிவித்ததாவது, காஷ்மீர் மாநிலம் லடாக் பகுதியில் உள்ள பான்காங் ஏரி பகுதியில் சீன படைகள் ஊடுருவியதாக எனக்கு எந்தவித தகவலும் வரவில்லை. எல்லையில் அமைதி நிலவவும், இருதரப்பினரும் ஒத்துழைப்போடு செயற்பட வேண்டும் என்பதும்தான் சீனாவின் நோக்கம். எல்லை பகுதியில் சீனப் படைகள் ரோந்து செல்வது வழக்க மான ஒன்றுதான். இந்திய-சீன எல்லையில் அமைதி நிலவவும், சீனப் பகுதியில் சமாதானம் நிலவவும் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டியது சீனப் படைகளின் பொறுப்பு.

இந்திய படைகளும் அதே பொறுப்புணர்வுடன் எல்லையில் நடந்து கொள்ள வேண்டும் என்றார். இதற்கிடையே லே பகுதியில் நேற்று முன்தினம் இந்திய, சீன எல்லை படை அதிகாரிகள் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினர்.(8)

# இந்திய- நேபாள ரயில் சேவை ஆரம்பம்

## மகிழ்ச்சியில் மக்கள்



இந்தியா-நேபாளம் எல்லையில் மூடப்பட்டிருந்த ரயில் சேவை மூன்று ஆண்டிற்கு பிறகு நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் விரைவில் தொடங்கப்படவுள்ளது.

நேபாளம் நாட்டின் ஜனக்பூருக்கும் இந்தியாவிற்கும் இடையில் 2014 ஆம் ஆண்டிற்கு முன் ரயில் சேவை இருந்து வந்தது. நேபாள மக்கள் அதன் மூலம் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்து வந்தனர்.

2014 ஆம் ஆண்டு நிகழ்ந்த விபத்திற்கு பின் ரயில் சேவை முற்றிலுமாக மூடப்பட்டது. அதனால் மக்களின் வர்த்தகம் வெகுவாக பாதிக்கப்பட்டது. மேலும் நாட்டில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பொருளாதாரத்தில் சற்று சரிவு ஏற்பட்டது. இந்நிலையில் நேபாளத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் இந்தியா- நேபாளம் இடையில் புதிய ரயில் பாதை அமைக்க அரசு முடிவு செய்து பணிகளை தொடங்கியுள்ளது. அதற்கு இந்தியா பொருளாதார ரீதியாக உதவி செய்துள்ளது.

மேலும், சீனாவும் நேபாளத்தில் வீதி மற்றும் நீர் மின் நிலையம் அமைக்க 8.3 பில்லியன் டொலர் முதலீடு செய்துள்ளது. (8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபல பாதாள உலகக்குழு தலைவன் சமிந்தவை கொலை செய்யத் திட்டம்!

## வெளியாகியது இரகசியம்

(கொழும்பு)

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர படுகொலை வழக்கில் குற்றவாளியாக காணப்பட்டு மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ள பிரபல பாதாள உலக குழு தலைவன் தெமட்டகொட சமிந்தவை கொலை செய்ய வகுக்கப்பட்டுள்ள இரகசிய திட்டம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. டுபாயில் இருந்து போதைப்பொருள் வர்த்தகம் புரியும் மாகந்துரே மதூஷ் தனது போதைப் பொருள் இராச்சியத்தை தக்க வைத்து கொள்ள இந்தக் கொலையை செய்ய திட்டமிட்டுள்ளமை தொடர்பிலான தகவல்களை பொலிஸார் வெளிப்படுத்திக் கொண்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை நீர்கொழும்பு - குரண பகுதியில் விசேட அதிரடிப் படையினரால் துப்பாக்கிச் சூடு நடத்தி பிடிக்கப்பட்ட ஆயுதக் குழுவில் இருந்த கடற்படையில் இருந்து தப்பி வந்த, மாகந்துரே மதூஷின் வலதுகரமான வஜிரவின் கீழ் செயற்பட்ட பாதாள உலகக் குழு உறுப்பினர் ரந்தீவை பொலிஸார் கைது செய்துள்ள நிலையிலேயே இந்த இரகசியம் அம்பலத்துக்கு வந்துள்ளது.

களனி விசேட புலனாய்வு பிரிவும் பேலியகொட விசேட குற்றத் தடுப்புப் பிரிவும் இணைந்து முன்னெடுத்த நடவடிக்கையிலேயே குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டு மேற்படி இரகசியத் திட்டம் அம்பலத்துக்கு வந்துள்ளது.

தெமட்டகொட சமிந்தவுக்கு எதிராக புதுக்கடை நீதவான் நீதிமன்றில் இடம்பெறும், கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போதான புளூமெண்டல் பகுதியில் வைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு தொடர்பிலான வழக்கிற்கு அவர் அழைத்து வரப்படும் போது சிறைச்சாலை பேருந்தை மறித்தோ அல்லது புதுக்கடை நீதவான் நீதிமன்ற வளாகத்திலோ இந்த கொலை திட்டத்தை அரங்கேற்றத் திட்டம் தீட்டப்பட்டுள்ளமை பொலிஸாரின் விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சயனைட் விஷம் கலந்த ஊசி மூலமோ அல்லது துப்பாக்கிச் சூடு நடத்தியோ இந்த கொலையை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பிலான தயார்படுத்தல்களாக பொலிஸ் பரிசோதகர்கள் அணியும் சீருடையை ஒத்த சீருடை தொகுதியொன்றும் ரி- 56 ரக துப்பாக்கி ஆகியவற்றையும் ரந்தீவின் கள்ளக் காதலியின் வீட்டில் மறைத்து வைத்திருந்த போது பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். தோட்டாக்கள், மகஸின் மற்றும் 3 கையடக்க தொலைபேசிகள் ஆகியவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மாலை 5.15 மணியளவில், திட்டமிட்ட குற்றம் ஒன்றினை அரங்கேற்ற குழுவொன்று வானொன்றில் பயணித்து கொண்டிருப்பதாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு இரகசிய தகவல் ஒன்று கிடைத்துள்ளது.

சிலாபம் பகுதியில் இருந்து நீர்கொழும்பு நோக்கி இந்த குழு பயணிப்பதாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப் பெற்றிருந்த தகவலுக்கு அமைய, ஜீப் வண்டியொன்றில் குறித்த வானை பின்தொடர்ந்த அதிரடிப் படையினர் நீர்கொழும்பு - குரண சந்தி அருகில் வைத்து வானுக்கு குறுக்காக ஜீப் வண்டியை நிறுத்தி வான் முன்னோக்கி செல்வதை தடுத்தனர்.

இதனையடுத்து அந்த வானை சுற்றிவளைத்த அதிரடிப் படையினர் வானை சோதனையிட முயற்சித்த போது, வானில் இருந்து அதிரடிப்படையினரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் உடன் செயற்படையினர் பதில் தாக்குதலுடன்வானை முழுமையாக தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதன்போது வானில் நால்வர் இருந்ததுடன் அவர்களில் இருவர் அதிரடிப் படையினரின் தாக்குதலில் காயமடைந்திருந்தனர். காயமடைந்த இருவரும் உடனடியாக சீதுவை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் அவர்கள் இருவரும் வட கொழும்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். பின்னர் அதில் ஒருவர் கடந்த 15ஆம் திகதி நள்ளிரவு கொழும்பு தேசிய வைத் தியசாலைக்கு மாற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் மேல் மாகாணத்தின் வடக்கு பிராந்தியத்துக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் கபில ஜயசேகரவின் மேற்பார்வையில் நீர்கொழும்பு பொலிஸ் அத்தியட்சகர் அநுர சில்வாவின் ஆலோசனைக்கு அமைவாக நீர்கொழும்பு பொலிஸ் பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் உதயகுமார வுட்லரின் தலைமையின் கீழான குழுவினர் முன்னெடுத்துள்ள சிறப்பு விசாரணைகளில் பல்வேறு தகவல்கள் அம்பலத்துக்கு வந்துள்ளன. குறிப்பாக ஆயுதக் குழு பயணித்த வானின் பதிவு தொடர்பில் போலியான ஆவணங்களும் இலக்கத் தகடுகளுமே இருந்துள்ள நிலையில் உண்மை உரிமையாளரை கண்டு பிடிக்க தனியான விசாரணைகள் இடம்பெறுகின்றன.

அத்துடன் இந்த ஆயுதக் குழுவில் இருந்த நால்வரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 28 வயதுடைய பியகமவைச் சேர்ந்த சம்பிக்க குமார ஜயதுங்க, சீதுவையைச் சேர்ந்த 41 வயதுடைய வஜிர குமார, தெல்தெனியவை சேர்ந்த 40 வயதுடைய ஜனக அருண சாந்த, ராகமவை சேர்ந்த 31 வயதுடைய தரிந்து மதூஷ் ஆகியோரே அந்த வானில் வந்திருந்தவர்களாவர்.

இவர்களில் சம்பிக்க குமார ஜயதுங்க ராகம வைத்தியசாலையிலும், மாகந்துரே மதூஷின் சகாவான வஜிர குமார ஆபத்தான நிலையில் தேசிய வைத்தியசாலையிலும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இந் நிலையில் குறித்த குழு பொலிஸாரிடம் சிக்கிய நிலையில் அதில்உள்ள தரிந்து மதூஷ் என்பவரது ராகம வீட்டில் இருந்து துப்பாக்கிகள் உள்ளிட்ட இரு பொதிகளை ரந்தீவ் என்பவர் எடுத்துச் சென்றமை தொடர்பில் களனி குற்றப் புலனாய்வுப் பிரிவின் கான்ஸ்டபிள் பண்டாரவுக்கு தகவல் கிடைக்கவே ரந்தீவை பிந்தொடர்ந்து பொலிஸார் அவரை கைது செய்து முன்னெடுத்த விசாரணைகளிலேயே இந்த தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக தெமட்டகொட சமிந்தவின் குழு, மாகந்துரே மதூஷின் போதைப் பொருள் வலையமைப்பை விடுத்து வேறு ஒரு வலையமைப்புடன் கொடுக்கல்வாங்கல்களை முன்னெடுத்து வருகின்றது.

எனினும் புளூமென்டல் சங்க, அங்கொட லொக்கா, ஆமி சம்பத் குழுவினர் மதூஷின் போதைப்பொருள் வலையமைப்பின் கீழேயே செயற்படுகின்றனர். இந்நிலையிலேயே போதைப் பொருள் வர்த்தகத்தின் ஏக போக உரிமையை கையகப் படுத்துவதற்காக மாகந்துரே மதூஷ் இந்த கொலை திட்டத்தை தீட்டியுள்ளதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

ஏற்கனவே சிறைச்சாலை பேருந்து மீது தாக்குதல் நடத்தி சமயங் உள்ளிட்ட பாதாள உலகக் குழு உறுப்பினர்களை கொலை செய்த அனுபவம் மதூஷ் குழுவினருக்கு உள்ள நிலையில், இந்த கைதுகள் ஊடாக பாரிய ஆபத்து தடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கருதுகின்றனர்.

மேல் மாகாணத்தின் வடக்கு பிராந்தியத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் கபில ஜயசேகரவின் நேரடிக் கட்டுப்பாட்டில் மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1165

Search for people, places and things Nagendram Home

**மாதவி**




**சியானி**




**நிர்மலன்**




**ரேகா**




**நந்து**




**கலையரசன்**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாதத இராசி பலன்கள்

## 17.08.2017-16.09.2017

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



எந்நேரமும் சோர்வின்றி சுறுசுறுப்பாக செயலாற்றும் சிம்ம இராசி அன்பர்களே!




ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, முயற்சிகள் வெற்றி கிட்டும் விதத்திலேயே உள்ளன. ஒன்று உங்கள் இராசிநாதன் சூரியன் பலம் பெற்று உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். மற்றொன்று உங்கள் இராசியில் இருந்து இதுவரை தடைகளைக் கொடுத்த இராகுவும், சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து குடும்பத்தில் பிரச்சினைகளைக் கொடுத்த கேதுவும் விலகிவிட்டார்கள்.

மறைந்த ராகுவால் நிறைந்த தனலாபம் கிடைக்கவும், 6ஆம் இடத்து கேதுவால் உத்தியோகம், தொழிலில் உன்னத நிலையைக் காணவும், மாதத் தொடக்கத்திலேயே சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது. இப்பொழுது உங்களுக்கு அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் மட்டும் இருக்கிறது. மந்தன் எனப்படும் சனியின் ஆதிக்கம் இருக்கும் பொழுது, மந்த கதியில் சில காரியங்கள் நடக்கலாம்.

நினைத்த காரியம் வெற்றிபெறவில்லையே என்று கவலைப்படுவீர்கள். இருந்தாலும் சனி விலகும் நேரம் இது என்பதால், ஓரளவேனும் நற்பலன்களைச் சனி செய்வார். அதற்கு சனிபகவானின் சிறப்பு ஸ்தலங்களுக்கு சென்று வழிபட்டு வருவது நல்லது. இம்மாதத்தில் உங்களின் விரய ஸ்தானத்தில் இராகு, செவ்வாய், புதன் ஆகிய மூன்று கிரகங்களும் சஞ்சரிக்கின்றன. எனவே வரவைக் காட்டிலும் செலவு கூடும்.

வளர்ச்சிப் பாதையில் இருந்த குறுக்கீடுகள் அகலும். தடையின்றிப் பணியாற்ற தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். முயற்சி அதிகம் செய்த காரியங்களில் முடிவு நன்மையாக இருக்கும். குறிப்பாக சொத்துகளை விற்பதில் இதுவரை பல மாதங்களாக தாமதம் ஏற்பட்டிருக்கலாம். அந்த நிலை இனி மாறும். விற்கும் சொத்துகளால் கிடைக்கும் இலாபத்தைக் கொண்டு தொழில் வளர்ச்சிக்கு மூலதனமாக்குவீர்கள். கடன் சுமையை குறைத்துக் கொள்ளவும் சிறிது தொகையைச் செலவிடுவீர்கள்.

அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு நல்ல பொறுப்புகள், பதவிகள் வருவதற்கான அறிகுறிகள் தென்படும். இருப்பினும் அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருப்பதால், அது கொஞ்சம் தாமதப்படலாம். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு உங்கள் இராசிக்கு 7,9,11

### உத்தியோக உயர்வு மகிழ்ச்சியைத் தரும்!

ஆகிய இடங்கள் புனிதமடைவதால், இனிய பலன்கள் தோன்றும்.

கடக சுக்ரனும், சிம்ம சுக்ரனும்!

ஓகஸ்ட் 22ஆம் திகதி கடகத்திற்கு சுக்ரன் செல்கிறார். பிறகு செப்டெம்பர் 15ஆம் திகதி சிம்மத்திற்கு சுக்ரன் வருகிறார். இதன் விளைவாக தொழில் மாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் உருவாகலாம். விலகிச் சென்ற சகோதரர்கள் விரும்பி வந்து சேருவர். ஆடம்பரப்பொருட்களின்சேர்க்கை அதிகரிக்கும். சொந்த பந்தங்களிடையே இருந்த கருத்து மோதல்கள் அகலும். வரன் வருகிறதா? என்று வழிமேல் விழி வைத்து காத்திருந்தவர்களுக்கு, நல்ல வரன்கள் நாடி வந்து சேரும். திருமணம் போன்ற சுபகாரியங்கள் சுக்ர பலத்தால் முடிவடையலாம்.

சிம்ம செவ்வாய் சஞ்சாரம்!

ஓகஸ்ட் 28ஆம் திகதி சிம்மத்திற்கு செவ்வாய் வருகிறார். யோகம் செய்யும் கிரகமான செவ்வாய் உங்கள் இராசிக்கு வருவதால் எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தள்ளிப்போன காரியங்கள் தானாக முடிவடையும். பத்திரப் பதிவில் இருந்த தாமதங்கள் அகலும். உறவினர்களை நம்பிச் செய்த காரியங்கள், இப்பொழுது முடிவடைந்து மகிழ்ச்சியை வழங்கும். இல்லம் கட்டி குடியேறும் வாய்ப்பும், எதிர்பார்த்தபடியே புதிய தொழில் தொடங்கும் சூழ்நிலையும் அமையும்.

சிம்ம புதன் சஞ்சாரம்!

உங்கள் இராசிக்கு தனலாபாதிபதியான புதன் செப்டெம்பர் 2ஆம் திகதி சிம்மத்திற்கு வரும்பொழுது அதிக நன்மைகளை வழங்குவார். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். மூத்த சகோதரர் ளால் முன்னேற்றம் கிடைக்கும். தொழிலில் வருமானம் திருப்திகரமாக இருக்கும். ஆன்மீகப் பயணங்களை மேற்கொள்வீர்கள்.

குருப்பெயர்ச்சிக் காலம்

செப்டெம்பர் 2ஆம் திகதி துலாம் இராசியில் சஞ்சரிக்கும் குரு, தனது பார்வை பலத்தால் 7,9,11 ஆகிய இடங்களைப் புனிதப்படுத்துவதால் சுபகாரியப் பேச்சுகள் கைகூடும். தகராறு செய்தவர்கள் தானாக விலகுவர். ஆதாயம் தரும் தகவல்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். கல்யாண வாய்ப்புகள் கைகூடும். உத்தியோக உயர்வு மகிழ்ச்சியைத் தரும். பணியாளர் தொல்லை அகலும். தந்தைவழி அனுகூலம் உண்டு.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

வளர்ச்சியும், தளர்ச்சியும் மாறி மாறி வரும் மாதம் இது. வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும். கணவன்- மனைவி உறவு திருப்தி அளிக்கும். சகோதரர்கள் மகிழ்ச்சிக்கு அடித்தளம் அமைத்துக் கொடுப்பர். பெற்றோர்கள் உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவர். என்னயிருந்தாலும் அர்த் தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருப்பதால், ஒரு சில காரியங்களில் தாமதம் ஏற்படலாம். சங்கிலித் தொடர்போல வந்த கடன் சுமை இனி குறையும். விரயங்களை சுபவிரயமாக்கிக் கொள்ளுங்கள். விநாயகர் வழிபாடும், ராகு, கேது பிரீதியும் விருப்பங்களை நிறைவேற்றும்.



ஆரோக்கியத்தை சீராக வைத்துக் கொள்வதில் அக்கறை காட்டும் கன்னி இராசி அன்பர்களே!




ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, சமீபத்தில் பெயர்ச்சியான இராகுவும், கேதுவும் நல்ல இடத்தில் சஞ்சரிப்பதால் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். இராசிநாதன் புதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரித்து மாதம் தொடங்குவதால் நீங்கள் நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். திடீர் முன்னேற்றங்கள் உருவாகும்.

சென்ற மாதத்தில் திட்டமிட்டு தள்ளிப்போன காரியங்கள், இந்த மாதத்தில் நடைபெறத் தொடங்கும். குறிப்பாக வீடு கட்டுவதில், வாங்குவதில் இருந்த தடை அகலும். இலாப ஸ்தானத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது, எதிர்பாராத வரவுகள் வந்து சேரும். வராமல் இருந்த கடன்கள் கூட கைக்கு கிடைக்கலாம்.

ஜென்ம குரு இந்த மாதத்தில் மாறப்போகிறார். கடந்த ஓராண்டாக உங்கள் இராசியிலேயே சஞ்சரித்து வந்த குரு பகவான், செப்டெம்பர் 2ஆம் திகதி துலாத்திற்கு வந்தவுடன் மேலும் நற்பலன்களை வழங்குவார். விலகும் குருவால் விருப்பங்கள் நிறைவேறும். நல்ல திருப்பங்கள் உருவாகும். குருவின் பார்வை பலன் முழுமையாக கிடைக்க, திசைமாறிய தென்முகக் கடவுளை வழிபடுவது நல்லது. அல்லது பெயர்ச்சியான ஒரு மாத காலத்திற்குள் பரிகாரங்களைச் செய்து கொள்ளுங்கள்.

பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேதுவால், பிள்ளைகள் வழியில் தொல்லைகள் ஏற்படாமலிருக்கவும், பிள்ளைகளின் வாழ்க்கை சீராக அமையவும் கேது பிரீதியும், நாகசாந்தி வழிபாடும் செய்யுங்கள். உங்கள் இராசிக்கு 3இல் சனி சஞ்சரிப்பதால் சகோதர வழி விரிசல்கள் ஏற்படலாம். எனவே உடன்பிறப்புகளை அனுசரித்துச் செல்லுங்கள். சிலரது மன வருத்தங்கள் முன்னேற்றத்தில் தடைகளை ஏற்படுத்தும் என்பதால் அருகில் இருப்பவர்களையும் சகித்துக் கொள்ளுங்கள்.

இம்மாதம் விநாயகர் சதுர்த்தி வருவதால் அன்றைய தினம் விரதமிருந்து, மோதக

### இல்லம் தேடி சுபச்செய்திகள் வந்து சேரும்!

நைவேத்தியம் வைத்து விநாயகப் பெருமானை வழிபாடு செய்யுங்கள். தும்பிக்கையான் மீது நம்பிக்கை செலுத்த வேண்டிய மாதமிது.

கடக சுக்ரனும், சிம்ம சுக்ரனும்

ஓகஸ்ட் 22ஆம் திகதி கடகத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். அதன்பிறகு செப்டெம்பர் 15ஆம் திகதி சிம்மத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாகப் பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள் பக்கபலமாக இருப்பர். இனத்தார் பகை மாறும். இல்லம் தேடி சுபச்செய்திகள் வந்து சேரும். சலசலப்புகள் விலகி கலகலப்புகள் உருவாகும். பாதியில் நின்ற பணிகள் மீதியும் தொடரும். பிறருக்கு பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை பிரச்சினையின்றி வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இனி தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் கூடும்.

சிம்ம செவ்வாய் சஞ்சாரம்!

ஓகஸ்ட் 28ஆம் திகதி சிம்மத்திற்கு செவ்வாய் செல்கிறார். இந்தக் காலம் ஒரு பொற்காலமாகும். 3,8இற்கு அதிபதி 12இல் சஞ்சரிக்கும் பொழுது. இந்த நேரத்தில் விபரீத இராஜயோகம் செயற்படப் போகிறது. எனவே நீங்கள் நினைத்துப் பார்க்காத சில நிகழ்வுகள் இப்பொழுது நடைபெறும். விலகிச் சென்ற பணியாளர்கள் மீண்டும் வந்து சேரலாம். வீடு மாற்றங்கள் விரும்பத்தக்கதாக அமையும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி நீங்கள் தீட்டிய திட்டங்கள் இப்பொழுது வெற்றி பெறும்.

சிம்ம புதன் சஞ்சாரம்!

செப்டெம்பர் 2ஆம் திகதி சிம்மத்திற்கு புதன் வருகிறார். அப்பொழுது உங்கள் வளர்ச்சி கூடுதலாக இருக்கும். உங்கள் வளர்ச்சியைக் கண்டு உறவினர்கள் பிரமித்துப் போவார்கள். உதாசீனப்படுத்தியவர்கள் ஓடி வந்து இணைவர். பகை அகலும். பணத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும்.

குருப்பெயர்ச்சிக் காலம்!

செப்டெம்பர் 2ஆம் திகதி துலாத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை, 6,8,10 ஆகிய இடங்களில் பதிவதால் எதிரிகள் மனம் மாறுவர். தொழில் மூலம் எதிர்பார்த்த இலாபத்தை அடைவீர்கள். உத்தியோக முன்னேற்றம் ஏற்படும். உயர் பதவிகள் வருவதற்கான அறிகுறிகள் தென்படும். வருமானம் போதுமானதாக இருக்கும். கல்யாணக் கனவுகள் நனவாகும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் இனிய மாதமாக அமையும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். நகை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். கணவன்-மனைவிக்குள் கனிவும், பாசமும் கூடும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சகோதர உறவு பலப்படும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகள் கைகூடவும், பஞ்சம ஸ்தான கேதுவால் தொழில் விருத்தியில் தடைகள் ஏற்படாமல் இருக்கவும் சர்ப்ப சாந்தி செய்துகொள்வது நல்லது. மேலும் பிரதோஷ காலத்தில் நந்தியை வழிபடுங்கள். புதிய வாகனங்கள் வாங்கும் யோகம் உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அதிகாரிகளின் பகை மாறி, உத்தியோக உயர்வு எதிர்பார்த்தபடி கிடைக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த பிக்போஸ்




## மாற்றம் வருமா?

இந்த வாரம் புது வரவாக வந்திருப்பவர் குத்தாட்ட நாயகி சுஜா வருணி. இவர் பிக்போஸில் உள்ள மற்ற போட்டியாளர்களை ஒருகை பார்ப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதேபோல சுஜா வருணி வந்தது மற்ற போட்டியாளர்களுக்கு பிடிக்கவில்லை.

அவரை ஆளாளுக்கு குறை சொல்ல ஆரம்பித்து விட்டனர். வையாபுரி கூறும்போது. இவர் என்ட்ரியை பார்க்கும்போது 4 சாவித்திரிக்கு சமமாக இருப்பார் போல தெரிகிறது என்கிறார். ஆரவிடம் காயத்ரி, நீ ஒழுங்காக என்னுடனேயே இரு. அதுதான் உனக்கு நல்லது என்கிறார். அதுமட்டும் அல்லாமல் சிநேகனிடம் சுஜா வருணி பயங்கரம். இவள் 4 ஜூலிக்கு சமம் என்கிறார். அதற்கு சிநேகன் அய்யோ ஒரு ஜூலியையே சமாளிக்க முடியவில்லை.

இதில் 4 ஜூலியை எப்படி சமாளிப்பது என்கிறார்.மேலும் கணேஷ் மட்டும் சுஜாவிடம் நல்ல விதமாக பழகுகிறார். இதனால் அவரை காயத்ரி மற்றும் சிநேகன் ஆகியோர் கிண்டல் செய்கின்றனர்.

இதனால் காயத்ரி மேலும் ரசிகர்களிடம் வாங்கிக்கட்டி கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அது மட்டும் அல்லாமல் சுஜா வருகையில் பிக்போஸ் வீட்டில் ஏதாவது மாற்றம் இருக்குமா? என்று பொறுத்து இருந்து தான் பார்க்க வேண்டும்

## சிநேகனின் எதிரி



கடந்த சில நாட்களாக ரைசா மற்றும் சிநேகன் ஆகியோர் தான் பிக்போஸ் வீட்டில் நெருக்கமாக பழகி வந்தனர். இந்நிலையில் அவர்கள் இருவருக்கு இடையே "பேய் டாஸ்க்" தொடர்பாக சண்டை வெடித்தது.

சிநேகன் அவரிடம் பேசியபோது "தயவுசெய்து என்னுடன் பேசாதீங்க. இங்கிருந்து எழுந்து போங்க" என கோபமாக கூறிவிட்டார் ரைசா.

"என்னால் இந்த வீட்டில் இருக்க முடியாது. என்னால் முடிந்தவரை சமாளித்து விட்டேன். இனிமேல் முடியாது" என அவர் முன்னர் பிக்போஸிடம் சொன்னார்.

ஆனால் இந்த வாரம் ஏவிக்ஷன் இருப்பதால் முடிவு மக்களின் கையில்தான் என பிக்போஸ் தெளிவாக கூறிவிட்டார்.

## கண்டிசன்

விஜய் தொலைக்காட்சி நடத்தும் பிக்போஸ் நிகழ்ச்சியில் நடிகை ஓவியா கலந்து கொண்டார். வீட்டில் இருந்து கடந்த 10 நாட்களுக்கு முன்னர் பிடிக்காமல் வெளியேறினார். இந்நிலையில், ஓவியா இருக்கும் வரை விஜய் தொலைக் காட்சியின் டிஆர்பி அதிகமாக இருந்தது. ஓவியா வீட்டை விட்டு வெளியேறியதால் பிக்போஸ் பார்ப்பதற்கு கூட ஆளில்லாமல் டிஆர்பி அப்படியே சரிந்தது.

இதனையடுத்து விஜய் டிவி ஓவியாவை மீண்டும் பிக்போஸ் நிகழ்ச்சிக்கு கலந்து கொள்ள வேண்டும் என அழைத்தது. அப்போது அவர் சில நிபந்தனைகளை விதித்ததாக தெரிகிறது.

தினமும் ரூ.10 இலட்சம் சம்பளமாக வழங்க வேண்டும். மேலும், காயத்ரி, ஆரவ்வை வீட்டிலிருந்து வெளியேற்ற வேண்டும். அது மட்டுமின்றி தன்னுடன் ஒரு தோழியை அழைத்து வருவதாகவும் அவரையும் வீட்டிற்கு அனுமதிக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்துள்ளார்.

இதனைக் கேட்ட கமல் அதிர்ச்சியடைந்ததாக தெரிகிறது. ஆனாலும் விஜய் தொலைக்காட்சி சார்பில் கிரின் சிக்னல் கொடுத்ததாகத் தெரிகிறது.

## பிந்துவின் கோபம்



BiggBoss நிகழ்ச்சியில் அடுத்தடுத்து என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை. எப்போது யாருக்கு பிரச்சினை வந்தாலும் அவர்களை சமாதானப்படுத்தி அவர்களுக்கு ஆறுதலாக இருப்பவர் சிநேகன். ஆனால் அவரை தான் அடிக்கப் போவதாக பிந்து மாதவி கூறுகிறார். இருவரும் சண்டை போட வையாபுரி பெரியவரை அப்படி சொல்லக்கூடாது என்று பிந்து மாதவியிடம் கூறுகிறார்.

## புதுவரவு



பிக்போஸ் நிகழ்ச்சி முன்பு போல் சுவாரசியமாக இல்லை என்று கூறி வருகின்றனர். இந்நிலையில் சமீபத்தில் சுஜா உள்ளே வந்தார். இவர் வந்தும் இன்னும் ஏதும் சூடுபிடிக்கவில்லை. இதனால், பொறியாளன் படத்தின் மூலம் பிரபலமான ஹரிஸ் கல்யாண் பிக்போஸ் வீட்டிற்குள் வந்துள்ளார்.

அவர் வெளியே நடக்கும் பல தகவல்களை வீட்டில் இருப்பவர்களுடன் பகிர்கிறார். இவருடைய வருகை பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

## ரைசா



வையாபுரி, ரைசாவை தாக்கிப் பேசுகிறார்.

இதற்கு ரைசா எனக்கு இதுபோல் செய்பவர்களை பிடிக்காது. என்னை வந்து இப்படி செய், அப்படி செய் என்று கூற யாருக்கும் உரிமை கிடையாது என்று சிநேகனிடம் பேசுகிறார். ஒரு கட்டத்தில் ரைசா என்னை விட்டுவிடுங்கள் என்று கூறி அந்த இடத்தில் இருந்து கிளம்புகிறார்.

தற்போது பரணி, ஓவியாவைப் போல் ரைசா ஒதுக்கப்படுவதாக ரசிகர்களுக்கு எண்ணம் வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரணில்லாதிருக்க முயல்க. உண்மையிருக்க மட்டுமே உழைத்திடுக.

– ஹோரஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## உண்மையைக் கூறிய உத்தமராக இராணுவத் தளபதி

தமிழ் – சிங்கள உறவுகளின் சிதைவு என்பது பொய்யில் இருந்தும் புனைவில் இருந்தும் ஏற்பட்டதுதான். இதில் பலரதும் பங்களிப்பு உண்டு. அதிலும் குறிப்பாக ஊடகங்களின் வகிபங்கு அதிகமானது.

மனித வாழ்க்கையில் ஏற்றமும் இறக்கமும் இயற்கையானது. ஆனாலும் உண்மை, நேர்மை, தர்மம் இதற்காகக் குரல் கொடுப்பதற்கு எவரும் பின்னிற்கக் கூடாது.

அவ்வாறு யாரேனும் பின்னிற்பார்களாயின் அதுவே அநீதி பிறப்பெடுப்பதற்கு; அதர்மம் தழைத்தோங்குவதற்கு; பொய்யும் புரட்டும் பரவுவதற்கு அடிப்படையாகிவிடும். உண்மையை உண்மை என்று சொல்லாமல் மறைப்பதுமாபாவம்.

தமிழகத்தின் முதல்வராக இருந்த பெருந்தலைவர் காமராஜர் தன் அரசியல் எதிரிகளைக் கூடத் தனது ஆதரவாளர்கள் இழிவாகப் பேசுவதற்கு அனுமதிக்க மாட்டாராம்.

இந்தப் பெருந்தன்மை இல்லை என்றால், எங்கள் இளம் சந்ததி; மாணவ சமூகம் எங்ஙனம் அற நீதியில் தங்கள் வாழ்வை அமைக்க முடியும்.

இப்போதெல்லாம்பாடசாலைகளில், உயர்கல்வி நிறுவனங்களில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு விருந்தினர்களாக அழைக்கப்படுபவர்கள் ஒற்றுமைபற்றி, நல்வழி பற்றி மாணவர்களுக்கு மிகச்சிறப்பாக எடுத்துரைப்பார்கள்.

ஆனால் அவர்கள் இம்மியும் தங்களின் உரையை கடைப்பிடித்திருக்கமாட்டார்கள். பேசுவதென்பது வெறுமையானதல்ல. அது செயலுருவில் கொண்டுவரப்பட வேண்டியது.

எனவே வாழ்க்கையில் முன்மாதிரியாக நடந்து காட்டியவர்கள் பேசுகின்ற போதே மாணவர்கள் அதை அங்கீகரிப்பர்.

இதைவிடுத்து செய்வதெல்லாம் உருட்டும் புரட்டும். ஆனால் பேச்சு மட்டும் கொல்லாமை, புலால் உண்ணாமை, தர்மம், நீதி, அறம் என்பதாக இருந்தால் அங்கிருந்துதான் பொய் ஆரம்பிக்கிறது. எனவே என்னதான் கஷ்டம், நஷ்டம் வந்தாலும் உண்மையைப் பேச வேண்டும்.

என் எதிரி என்பதற்காக அவர் மீது அபாண்டமான பழி சுமத்தும் போதும் நாம் பேசாமல் இருப்பது கூட அபத்தமானது.

ஆகையால் உண்மையைப் பேசுவதில் எவரும் தயங்கக்கூடாது. இந்த வகையில் இலங்கையின் இராணுவத்தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவின் பெருந்தன்மை கண்டு நெகிழ்ந்து போனோம்.

முன்னாள் போராளிகள் பொறுப்புடன் நடந்து கொள்கின்றனர் என்ற உண்மையை இராணுவத் தளபதி துணிந்து கூறியிருப்பதானது தமிழ் மக்களை திரும்பிப் பார்க்கச் செய்துள்ளது.

கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கு எதிராக எதையெல்லாம் சொல்ல முடியுமோ அதையெல்லாம் கூறி அரசிடமும் பேரினவாதிகளிடமும் நல்ல பெயர் பெற்ற தளபதிகளும் அரசியல்வாதிகளையும்தான் தமிழ் மக்கள் சந்தித்தனர்.

ஆனால் இன்றைய இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க, எந்தவித பக்கசார்புமின்றி துணிச்சலோடு ஓர் உண்மையைக் கூறியுள்ளார். அதுதான் முன்னாள் போராளிகள் பொறுப்புடன் நடந்து கொள்கின்றனர் என்பது.

அது மட்டுமல்ல வடக்கில் சில சம்பவங்கள் நடந்தால், அதனைத் தேசிய பாதுகாப்புடன் தொடர்புபடுத்துவோர் அந்தச்சம்பவம் தெற்கில் நடந்தால் அதைக் கவனிப்பதேயில்லை என்ற யதார்த்தத்தையும் கூறியுள்ளார்.

எல்லாவற்றுக்கும் மேலாக, யாழ்ப்பாணத்தில் நடக்கும் அசாதாரண சம்பவங்களுக்கும் முன்னாள் போராளிகளுக்கும் தொடர்பு உண்டு என்று பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர யாழ்ப்பாணத்தில் வைத்துக் கூறிய நிலையில், இராணுவத்தளபதி உரைத்த உண்மை அப்பாவிகளான முன்னாள் போராளிகளுக்கு பெரு நன்மையாக அமையும்.

# கிழக்கு பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடல்

(மட்டக்களப்பு)

மாணவர் போராட்டத்தால் அசாதாரண நிலை ஏற்பட்டுள்ளதால் கிழக்கு பல்கலைக்கழகம் நேற்று வியாழக்கிழமை முதல் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக வளாகத்திற்குள் நண்பகல் 12 மணிக்கு பின்னர் மாணவர்கள் நடமாட்டத்திற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்கள் இன்று வெள்ளிக்கிழமை நண்பகலுக்கு முன்னதாக அனைத்து உடைமைகளுடன் வெளியேற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழகத்தில் தற்போது ஏற்பட்டுள்ள வழமைக்கு மாறான சூழ்நிலையை கருத்தில் கொண்டு பல்கலைக்கழக கவுன்சில் கூடி இந்த முடிவை எடுத்துள்ளதாக துணை வேந்தர் கலாநிதி த.ஜெயசிங்கம் கூறியுள்ளார்.

"இத் தீர்மானத்தின்படி திருகோணமலை வளாகம் தவிர வந்தாறுமூலை வளாகம் மற்றும் மட்டக்களப்பு மருத்துவ பீடம் ஆகியன மறு அறிவித்தல் வரை மூடப்பட்டிருக்கும்," என்று அவர் கூறினார்.

கிழக்கு பல்கலைக் கழகத்தின் வந்தாறுமூலை வளாகத்தில் கல்வி பயிலும் சிங்கள மாணவர்கள் உட்பட அனைத்து மாணவருக்கும் விடுதி வசதி வழங்கப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட சிலகோரிக்கைகளை முன்வைத்து இரு மாதங்களுக்கும் மேலாக ஆர்ப்பாட்டங்களிலும் போராட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

தங்கள் போராட்டத்தின் ஒரு வடிவமாக கடந்த வாரம் நிர்வாகக் கட்டடத் தொகுதியை முற்றுகையிட்ட மாணவர்கள், தொடர்ந்து இரவும் பகலும் அங்கே தங்கியிருந்தனர்.

இதனால் பல்கலைக் கழக நிர்வாகத்துக்கு நெருக்கடி நிலை ஏற்பட்டது. (மு-11)

## இரு மோ.சைக்கிள்கள் விபத்து; குடும்பஸ்தர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 9 மணியளவில் தனங்கிளப்பு பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் முழங்காவில் கும்பிடு முனைப்பைச் சேர்ந்த நவரட்ணம் குவிந்தன் (வயது 31) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்துள்ளார்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-10-30)

## ஆவா குழு பயன்படுத்திய மோ.சைக்கிள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

ஆவா குழு குற்றச் செயல்களுக்கு பயன்படுத்தியதாக கூறப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்று கொக்குவில் பிரதேசத்தில் பாழடைந்த தோட்டம் ஒன்றில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

யாழ்ப்பாணம் விசேட அதிரடிப்படை முகாம் படையணி ஒன்று நேற்று இந்த மோட்டார் சைக்கிளை கைப்பற்றியுள்ளது.

உரிமையாளர் இல்லாத மோட்டார் சைக்கிள் ஒன்று கொக்குவில் பிரதேசத்தில் தோட்டம் ஒன்றில் காணப்படுவதாக அதிரடிப் படையின் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலை அடுத்தே இந்த மோட்டார் சைக்கிள் கைப் பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் குற்றச் செயல்களுக்காக மோட்டார் சைக்கிளை பயன்படுத்தி விட்டு பின்னர், குறித்த தோட்டத்தில் மறைத்து வைத்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாக கூறப்படுகிறது. (மு-11)

## சாஸ்திரங்கள்

✦ அன்னம், இடம், தீபம், தண்ணீர்,விறகு, எண்ணெய், சந்தனம் முதலிய வாசனைகள், மருந்து, எள், உப்பு முதலிய திரவியங்களைக் கொடுப்பது நித்தியமான தர்மகாரியமாகும்.

-உமையவளிடம் ஈஸ்வரன் கூறியது

## மலேரியா மீள் எழுச்சியை தவிர்த்திடுவோம்!

மலேரியா நோய் கட்டுப்பாட்டினுள் இல்லாத நாடுகளுக்கு சென்று வருபவர்கள், கட்டாயம் மலேரியா தடுப்புக் குளிசைகளை பெற்றுச் செல்லுதல் வேண்டும். இவற்றை சகல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளினும் பெற்றுக் கொள்ள முடியும்.

மீண்டும் நாட்டிற்கு திரும்பியவுடன் அருகிலுள்ள அரச வைத்தியசாலைகளில் மலேரியாவிற்கான இரத்தப் பரிசோதனையை செய்து கொள்ளல் வேண்டும்.

காய்ச்சலுக்கு சிகிச்சை பெறும் சந்தர்ப்பங்களில் தங்கள் வெளிநாட்டுப் பிரயாணத்தை மறக்காது கூறுதல் வேண்டும்.

மலேரியா நோயைப் பரப்பும் நுளம்புகள் இப்போதும் எம் பிரதேசத்தில் உண்டு.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகர சபை

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### இந்தப் பொருள் உங்கள் வீட்டில் இருந்தால் போதும்

செல்வதை அள்ளித்தரும் மகாலட்சுமியின் பார்வை பட்டால் குப்பைமேட்டில் இருப்பவன் கூட பணக்காரன் ஆகிவிடுவான் என கூறுவர்.

ஆயிரம் சிப்பியானது ஒரு இடம்புரி சங்கு. ஆயிரம் இடம்புரி சங்கானது ஒரு வலம்புரி சங்கு. வலம்புரி சங்கை வீட்டில் வைத்தால் இழந்த செல்வம் மீண்டும் பெறலாம். ஆனால், வலம்புரி சங்கை வீட்டில் எப்படி வைத்திருக்க வேண்டும் என்பதைப் பற்றி பார்ப்போம்...

வலம்புரி சங்கை வீட்டில் அல்லது தொழில் செய்யும் இடங்களில் வைத்துக் கொள்ளலாம். ஆனால், வலம்புரி சங்கை சுத்தமாகவும், தினமும் பூஜித்து வர வேண்டியது அவசியம். (தொடரும்)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### உன்னைப் பற்றிய உன் கற்பனைத் தோற்றத்தை விட்டு விடு

கஷ்யப்: எப்படி நாம் எல்லோரையும் மகிழ்ச்சியுடனிருக்கச் செய்யக்கூடும்.

ஸ்ரீஸ்ரீ: என் மாதிரி ஆகு.

ராமா: நாங்கள் உங்களைப் போன்று எப்படி ஆவது?

எனக்கும் உனக்கும் நடுவில் இருப்பது உன்னைப் பற்றிய உன் கற்பனைத் தோற்றம். இதுதான் நீ என்னைப் போன்று ஆவதைக் கட்டுப்படுத்துகிறது. உன்னைப் பற்றிய உன் கற்பனை நல்லதோ கெட்டதோ அது துன்பத்திற்குக் காரணமாக உள்ளது.

உன்னை நீ நல்லவனாக நினைக்கும்போது சூட்சும நிலையில் மற்றவர்களைக் கெட்டவர்களாக நினைக்கிறாய். அப்போது கோபம், பொறாமை, வெறுப்புணர்ச்சிகள் தொடரும்.

உன்னைக் கெட்டவனாக நினைக்கும்போது நீ உன்னைத் தாழ்வாக உணருகிறாய். மறுபடியும் எல்லோரையும் கோபிக்க, வெறுக்க ஆரம்பிக்கிறாய்.

உன்னை நல்லவனாக நினைக்கும்போது நீ துன்பப்படுகிறாய்.

உன்னைக் கெட்டவனாக நினைக்கும்போது நீ அதிக துன்பப்படுகிறாய்.

உன்னைப் பற்றிய உன் கற்பனைத் தோற்றத்தை விட்டுவிடு.

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### மகத்தானது மன்னிப்பு

✦ விருந்தில் எல்லோரும் உண்டு முடிவடைவதற்குள், உணவில் இருந்து கையை எடுத்து விடாதீர்கள்.

✦ உங்கள் சொற்படி நடக்கும் ஊழியர்களுக்கு நீங்கள் உண்பதையே கொடுங்கள்.

✦ முதியோருக்கு மரியாதை செலுத்துதல் இறைவனுக்கு மரியாதை செலுத்துவதாகும்.

✦ ஒருவன் தன் அதிகாரத்தின் கீழ் இருக்கும்போது அவனை மன்னித்து விடுகின்றவன் இறைவனுக்கு மிகவும் அருகில் இருப்பான்.

✦ நன்மை செய்வோருக்கு நன்மை செய்வதாயும், தீமை செய்தோருக்கு தீமை செய்வதில்லை என்றும் தீர்மானம் செய்து கொள்ளுங்கள்.

✦ மறதி என்பது அறிவின் துரதிர்ஷ்டம். அறிவைத் தகுதியற்றவரிடம் உபயோகிப்பது அதனையே இழப்பதற்கு ஒப்பாகும்.

✦ தன் பிழையை உணர்ந்து உண்மையாகவே வருந்துபவன், குற்றம் இழைக்காதவனுக்கு ஒப்பாவான்.

✦ சகோதரனின் வியாபாரத்தைப் போட்டியிட்டுக் கொண்டு கெடுக்காதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி-2017

2017 ஆம் ஆண்டிற்கான அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி கடந்த 12 ஆம் 13 ஆம் திகதிகளில் சப்ரகமுவ பல்கலைக் கழகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டு சப்ரகமுவ பல்கலைக்கழக மைதானத்திலே நடத்தப்பட்டது. இச்சுற்றுப் போட்டியில் 12 பல்கலைக்கழகங்கள் பங்குற்றி தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தன. இச்சுற்றுப் போட்டியிலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வலைப்பந்தாட்ட அணியானது மிகத்திறமையாக விளையாடி இரண்டாம் இடத்தைப் பெற்றது. யாழ்ப்பாணப் பல்கலை. வரலாற்றில் வலைப்பந்தாட்ட அணியானது அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டமை இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் அணி ரீதியாக முதல் மூன்று இடங்களைப் பெற்ற பல்கலைக்கழகங்கள் வருமாறு, முதலாமிடம் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம், இரண்டாமிடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், மூன்றாமிடம் கொழும்பு பல்கலைக்கழகம். யாழ்ப்பாணப்பல்கலைக்கழக வலைப்பந்தாட்ட பெண்கள் அணி ஆரம்ப சுற்றுப் போட்டியிலே ஊவாவெல்லச பல்க லைக்கழகத்தை எதிர்த்து விளையாடி வெற்றிபெற்று பின்னர் வயம்ப பல்கலைக் கழகத்தை எதிர்த்து விளையாடி வெற்றி பெற்றது. காலிறுதி ஆட்டத்தில்




கட்புல மற்றும் அரங்கக் கலைகள் பல்கலைக்கழகத்துடன் மோதி வெற்றி பெற்றது. பின்னர் அரையிறுதி ஆட்டத்தில் களனிய பல்கலைக்கழகத்துடன் மோதி வெற்றிபெற்று இறுதி ஆட்டத்திற்குத் தகுதி பெற் றது.இறுதி ஆட்டத்தில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துடன் சிறப்பாக விளையாடி 2ஆம் இடத்தைப் பெற் றுக்கொண்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வலைப்பந்தாட்ட பெ ண்கள் அணியின் தலைவியாக T.லகீதாவும் உபதலைவியா A.விதுராவும் பயிற்றுநராக திருமதி J.சரவணபவஜயரும் முகாமையாளராக உடற் கல்வி அலகின் பணிப்பாளத் K.க ணேசநாதனும் செயற்பட்டிருந்தனர். (கு)

# வல்வை ஷைனிங்ஸ் வி.கழக உதைபந்தாட்ட இறுதிப் போட்டி

## நேதாஜி வெற்றி

வல்வை ஷைனிங்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வைர விழாவையொட்டி அவ் விளையாட்டுக் கழகத்தால் வல்வை விளையாட்டுக் கழகத்திற்கு உட்பட்ட கழகங்களுக்கிடை யிலான பல்வேறு போட்டிகள் இடம்பெற்று வருகின்றது.

இதன் வரிசையில் கடந்த செவ்வாய்க்கிழமை வல்வை விளையாட்டுக் கழகத்திற்கு உட்பட்ட கழகங்களுக் கிடையிலே நடத்தப்பட்ட பெண்கள் வலைப்பந்தாட்ட போட்டியின் இறுதிப் போட்டி நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்றது.

இவ் இறுதிப் போட்டியில் நேதாஜி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து தீருவில் இளைஞர்விகழகம்மோதியது. இதில் 3:1 என்ற கோல் கணக்கில் நேதாஜி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

போட்டியின் சிறந்த ஆட்ட நாயகனாக நேதாஜி வி.கவை சேர்ந்த ரசிகரனும் தொடர்நாயகனாக தீருவில் இளைஞர் விக சேர்ந்த சண்முகதாசும் வளர்ந்து வரும் இளம் வீரராக தீருவில் வி.கவைச் சேர்ந்த மோகன்ராஜும் சிறந்த கோல் காப்பாளராக நேதாஜி வி.கவைச் சேர்ந்த ஜிவிந்தனும் தெரிவு செய்யப்பட்டார்கள். இதேவேளை காட்சிப் போட்டியாக சைனிங்ஸ்விளையாட்டுக் கழகத்தின்திருமணமானவர் - திருமணமாகாதவர் ஆண்கள் அணிகளுக்கு இடையே உதைபந்தாட்டபோட்டிகள் நடைபெற்றது. இவ்வாட்ட முடிவில் இரு அணிகளும் சமநிலை பெற்றன. (க)



# பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் உதயசூரியன் வி.கழகம் முதலாமிடம்





வல்வை ஷைனிங்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வைர விழாவையொட்டி அவ் விளையாட்டுக் கழகத்தால் வல்வை விளையாட்டுக் கழகத்திற்கு உட்பட்ட கழகங்களுக் கிடையிலான பல்வேறு போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இதன் வரிசையில் வல்வை விளையாட்டுக் கழகத்திற்கு உட்பட்ட கழகங்களுக்கிடையிலே நடத்தப்பட்ட பெண்கள் வலைப்பாந்தாட்ட போட்டியின் இறுதிப் போட்டி ரேவடியில் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் முதலிடத்தையும் நேதாஜி விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தையும் 11 / 8 என்னும் புள்ளிகள் அடிப்படையில் பெற்றுக் கொண்டன.

இதேவேளை காட்சிப் போட்டியாக சைனிங்ஸ் விளையாட்டுக் கழகத்தின் திருமணமானவர் - திருமணமாகாதவர் பெண்கள் அணிகளுக்கு இடையே நடைபெற்ற போட்டியில் திருமணமாகதவர் அணி 8 / 2 என்னும் புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (க)

# ஷைனிங்ஸ் வைரவிழா மென்பந்தாட்டம் தீருவில் இளைஞரை வீழ்த்தி நேதாஜி சம்பியன்



வல்வை ஷைனிங்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வைரவிழாவையொட்டி அவ் விளையாட்டுக் கழகத்தால் வல்வை விளையாட்டுக் கழகத்திற்கு உட்பட்ட கழகங்களுக்கிடையிலான பல்வேறு போட்டிகள் இடம் பெற்று வருகின்றது.

இதன் வரிசையில் அண்மையில் வல்வை விளையாட்டுக் கழகத்திற்கு உட்பட்ட கழகங்களுக்கிடையிலே நடத்தப்பட்ட ஆண்கள் மென்பந்தாட்ட போட்டியின் இறுதிப் போட்டி நெற் கொழு கழுகுகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்றது.

மென்பந்தாட்ட இறுதிப் போட்டியில் நேதாஜி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து தீருவில் இளைஞர் விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் நேதாஜி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இந்த சுற்றுத் தொடரின் தொடர் நாயகன் -பா.மயூரன் தீருவில் இளைஞர் விளையாட்டுக்கழகம் அதிக விக்கெட்களை வீழ்த்திய வீரர்- தாசன் தீருவில் இளைஞர் விளையாட்டுக்க ழகம் அதிக ஓட்டங்கள் - ஜெகன் ரெயின்போ விளையாட்டுக்கழகம் வளர்ந்து வரும் இளம் வீரர் - ஜேம்ஸ் தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழகம் இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகன் - லக்மன்ஸ் நேதாஜி விளையாட்டுக்கழகம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டார்கள்.

இதேவேளை காட்சிப் போட்டியாக சைனிங்ஸ்விளையாட்டுக் கழகத்தின் திருமணமானவர் - திருமண



காதவர் ஆண்கள் அணிகளுக்கு இடையே மென்பந்தாட்ட போட்டிகள் நடைபெற்றது.

# வி.ரி.மகாலிங்கம் பிறிமியர்லீக் யாழ்.சென்றல் அணி வெற்றி

வி.ரி. மகாலிங்கம் பிறிமியர் லீக் கிரிக்கெட் தொடரின் 12 ஆவது போட்டி (13. 08. 2017) ஞாயிற்றுக் கிழமை அன்று ஹாட்லி கல்லூரி மைதானத்தில் நடை பெற்றது. இதில் யாழ். சென் றல் அணி,ஓல்ட்கோல்ஸ்அணியை 9 இலக்குகளால் வெற்றி பெற்று தனது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளனர். முதலில் துடுப்பெடுத்தாடிய ஓல்கோல்ஸ் அணி 12 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 76 ஓட் ங்களை பெற்றனர். திலீபன் -18,



நிரோஸன்-16 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் யாழ். சென்றல் அணியை சார்ந்து வி.ரஜீவ்குமார்-4, சுபாதீஸ் - 3,சலிஸ்ரன்-2, கிரிசாந் ஒரு இலக்கினையும் கைப்பற்றியுள்ளனர். 77 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களம் இறங்கிய யாழ். சென்றல் அணி 9.3 ஓவர்களில் ஒரு இலக்கினை இழந்து 77 ஓட்டங்களை பெற்றனர்.

மனோச்-21, ரஜீவ்குமார் ஆட்ட மிழக் காது 21 , லதுாசன் ஆட்டமிழக்காது 18 ஓட்டங்களையும் பெற்றனர். நிரோசன் ஒரு இலக்கினை கைப்பற்றினார்.இப் போட்டி யின் மூலம் யாழ். சென்றல்விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து 8 வருடங்களாக நடத்தி வரும் தரவரிசை (Rating) பட்டியலுக்கு யாழ். சென் றல் அணி 4.67 புள்ளிகளையும் ஓல் கோல்ஸ் அணி 0.86 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சித்...

அடுத்த தேர்தலுக்கு முன் தன்னை கட்சியில் இருந்து துரத்திவிட்டால் என்ன செய்வது என்ற எண்ணத்தில் பல கட்சித் தலைமைகளுக்கும் தன்னை விளம்பரப்படுத்துவதற்கான ஏற்பாடாக இது இருக்கலாம் என்றும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தனது கடுமையான விமர்சனத்தை முன்வைத்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 102ஆவது சபை அமர்வு (கடந்த கால செயற்பாடுகள் தொடர்பாக மீளாய்வு செய்யும் சிறப்பமர்வு) நேற்றைய தினம் கைதடியில் உள்ள பேரவை மண்டபத்தில் நடைபெற்றது. கடந்த வருடங்களில் மாகாண சபையால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக கடந்த அமர்வில் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவால் முன்வைக்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் வழங்கும் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பதிலளிக்கையில்,

எதிர்க்கட்சித் தலைவர் அண்மைக்காலங்களில் தன்னைப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதற்கு எம்மைக் கையாலாகாதவர்கள் என்று சித்திரிக்கப்பார்க்கின்றார். தனது கட்சியில் வேண்டப்படாத ஒருவராக இருக்கும் அவர் பத்திரிகைகளில் தஞ்சம் புகுந்திருப்பது விளங்கக்கூடியதொன்றுதான். எமது அவைத்தலைவரின் சாதுரியத்தால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தக்கவைத்துக்கொண்டிருக்கும் அவர் கடந்த 45 மாதங்களில் நாங்கள் எதுவுமே செய்யவில்லை என்று கூறியுள்ளார்.

ஒருவேளை அவர் அரசியலை விட்டு ஆத்மீகத்துனுள் நுழைந்துவிட்டாரோ என்று அப்பொழுது நினைத்துக்கொண்டேன். ஆத்மீகத்தில்தான் நாம் எதுவுமே செய்யவில்லை. இறைவன்தான் எல்லாம் செய்விக்கின்றான் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து. ஆனால் அவரின் கேள்விகள் அந்த அர்த்தத்தில் எழுப்பப்படவில்லை என்று தெரிந்து கொண்டேன்.

அதாவது நாங்கள் சனி, ஞாயிறு பார்க்காமல் ஒவ்வொரு நாளும் 15 இலிருந்து 18 மணித்தியாலம் வரை ஓயாது வேலை செய்து கொண்டிருக்கின்றோம். பலவற்றைச் செய்துமுள்ளோம். ஆனால் அவை தனது எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறு அமையவில்லை என்பது தான் அவரின் பிரச்சினை. அதனால் தான் நாங்கள் ஒன்றுமே செய்யவில்லை என்று கூறியுள்ளார்.

நாங்கள் பலதையும் செய்துள்ளோம். ஆனால் அவருக்கு அவற்றின் தாற்பரியமும் உண்மையும் தெரியாமல் செய்ததால் நாங்கள் ஒன்றுமே செய்யவில்லை என்பது அவரின் முறைப்பாடு. அவருக்குத் தெரியாமல் நடந்த பலவற்றின் உண்மை நிலையை நான் இங்கெடுத்துரைப்பதற்கு முன்னர் என் நண்பருக்கு ஒன்றைக் கூறவிரும்புகின்றேன்.

உங்கள் எதிர்பார்ப்புக்கள், உங்கள் சிந்தனைகள், உங்கள் ஊகங்கள் யாவும் உங்களின் அறிவின் வரையறைகள், உங்களின் வாழ்க்கையின் பாதிப்புக்கள், உங்கள் கட்சியின் கொள்கைகள் பாற்பட்டவையே.

நாம் எதை, ஏன், எவ்வாறு செய்கின்றோம் என்பதை எம்முடன் கலந்தாலோசித்தே நீங்கள் அறியவேண்டும். நீங்களாக உங்கள் முடிவுகளுக்கு வந்து பலதையும் பத்திரிகைகள் ஊடாகப் பலரறியப் பகிர்ந்து கொள்வது நல்லதல்ல என்று கூறி வைக்க விரும்புகின்றேன்.

பத்திரிகையில் பெயர் வரவேண்டும் என்பது தான் உங்களின் குறிக்கோளாக உள்ளதே ஒளிய உண்மையைத் தெரிந்து கொள்வதல்ல என்று நம்புகின்றேன். ஒருவேளை உங்கள் கட்சி உங்களை அடுத்த தேர்தலுக்கு முன் கட்சியில் இருந்து துரத்திவிட்டால் என்ன செய்வது என்ற எண்ணத்தில் பல கட்சித்தலைமைகளுக்கும் உங்களை விளம்பரப்படுத்த இந்த ஏற்பாடோ நான் அறியேன். எனினும் நீங்கள் எழுப்பிய ஒவ்வொரு விடயத்திற்கும் நான் முதலில் பதில் கூறுவேன் என தெரிவித்தார்.

இதன்போது ஆவேசத்துடன் எழுந்து முதலமைச்சரின் உரையில் குறுக்கிட்ட எதிர்க்கட்சித் தலைவர், கட்சியை பற்றி நீங்கள் கதைக்க முடியாது. நீங்கள் எந்த கட்சி என்று கூறுங்கள். உங்கள் இயலாத்தனத்தை மறைக்க கட்சியை பற்றி கதைக்கிறீர்கள் என்றார்.

அதற்கு, எங்களுடைய செயற்பாடுகளை பற்றி எம்மிடம் அறியாமல் எதற்காக இல்லாத விடயங்களை பத்திரிகைகளில் அறிக்கை விடுகிறீர்கள் என முதலமைச்சர் கேள்வி எழுப்பிய போது, பத்திரிகைகளில் அறிக்கை விடுவது எனது உரிமை, உங்களிடம் கேட்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை என்றார் எதிர்க்கட்சித் தலைவர்.

இதன்போது அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் குறுக்கிட்டு முதலமைச்சரின் கருத்துக்கு பதில் அளிப்பதற்கு நேரம் தரப்படும் அது வரை முதலமைச்சரின் உரையில் குறுக்கிட வேண்டாம் என தெரிவித்து எதிர்க்கட்சித் தலைவரை ஆசுவாசப்படுத்தினார்.

மேலும் முதலமைச்சர் தனது உரையைத் தொடர்ந்தார்.

நான் வன்வழிவந்தவனல்ல. ஜனநாயகத்தை மதிப்பவன். முன்னைய ஆளுநர் சந்திரசிறியின் வழி எதிர்க்கட்சித் தலைவருக்குப் பொருத்தமாக இருக்கலாம். எமக்கு அது பொருந்தாது என வடமாகாண முதலமைச்சர் எதிர்க்கட்சி தலைவருக்கு பதிலடி கொடுத்துள்ளார்

முன்னைய ஆளுநர் பு.யு.சந்திரசிறி மற்றும் முன்னைய பிரதம செயலாளர் ஆர். விஜயலட்சுமி என்பவர்களை மாற்றிய பின் சாதித்தது என்ன என எதிர்க்கட்சி தலைவர் கடந்த அவை அமர்வில் கேள்வி எழுப்பியிருந்தார்.

அந்த கேள்விக்கு நேற்றைய மாகாண சபை அமர்வில் பதில் அளிக்கும் போதே மேற்கண்டவாறு முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் தொடர்ந்து பதிலளிக்கையில்,

முன்னைய ஆளுநர் திரு.பு.யு.சந்திரசிறியின் மாற்றமானது அவருடைய இராணுவப் போக்குடைய எதேட்சை அதிகாரத் தன்மையுடைய, வடக்கு மாகாண சபையை ஓரங்கட்டும் நடவடிக்கைகளோடு கூடிய முன்னெடுப்புகளுடன் செயற்பட்டமையை, வடமாகாணத்தைச் சேர்ந்த, எம்மாகாணத்தின் முன்னேற்றத்தில் அக்கறையுடைய மாகாண சபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், புத்திஜீவிகள், உயர் அதிகாரிகள், பொதுமக்கள் ஆகிய எம் எல்லோராலும் உணரப்பட்டு கூட்டிணைப்புடன் கூடிய அழுத்தத்தின் பயனாக நடைபெற்ற ஒன்று.

இது ஒட்டுமொத்தமாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. ஆனால் தவராசாவின் கேள்வி இதனை அவர் விரும்பவில்லையா என்று கேட்க வைக்கின்றது. அவ்வாறு விரும்பவில்லையாயின் அவர் தன்னுடைய எதிர்ப்பை அப்போது வெளியிட்டிருக்க வேண்டும். ஆளுநர் சந்திரசிறிக்கு நிகரானவர்கள் எவரும் இல்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் அப்போது அவர் புகழ் பாடியிருக்க வேண்டும். அவரின் செயற்பாடுகளில் திடீரென எமது எதிர்க்கட்சித் தலைவருக்கு மதிப்பு ஏற்பட்டுள்ளமை விந்தையே.

அவர் போல் எதேட்சையாக ஏன் நீங்கள் நடந்து கொள்ளவில்லை என்று கேட்கின்றார். நான் வன்வழிவந்தவனல்ல. ஜனநாயகத்தை மதிப்பவன். ஆகவே அவர் வழி எதிர்க்கட்சித் தலைவருக்குப் பொருத்தமாக இருக்கலாம். எமக்கு அது பொருந்தாது.

அவ்வாறே முன்னைய பிரதம செயலாளர் வடமாகாண சபையின் நிர்வாக நடவடிக்கைகளை மாகாண சபையுடன் இணைந்து செயற்படுத்தாமல் தன்னிச்சையாகச் செயற்பட்டிருந்தார். அவருடைய இடமாற்றம் நிர்வாக நடவடிக்கைகளுக்குட்பட்டது.

இவ்விரு விடயங்களையும் இணைத்து ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் கேள்வி கேட்கும் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, குறித்த இருவரும் தம் காலத்தில் சாதித்தது என்ன என்பதைப் பட்டியலிட்டுக் கூறுவாரானால் அதன் பின் அவர்கள் மாற்றத்தின் பின் எம்மால் மேற்கொண்ட சாதனைகள் பற்றித் தெளிவுபடுத்தலாம் என மேலும் தெரிவித்தார். (மு-9)

# மானிப்பாயில்...

இது தொடர்பான விசாரணையை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சடலமானது பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (மு-30)

(இது தொடர்பில் முன்னர் கிடைத்த செய்தி 05ஆம் பக்கத்தில்)

# மகிந்தவை...

ளின் திருமண வாழ்க்கையைப் பற்றி குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கேள்விகளை கேட்டுள்ளதாக நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிரிரிய அமைப்பிற்கு வழங்கப்பட்ட டிபென்டர் வாகனத்தின் நிறம் மாற்றப்பட்டமை தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக யோசித ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் குற்றப்புலனாய் வுப் பிரிவிற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

சுமார் 4 மணி நேரம் வாக்குமூலம் வழங்கிவிட்டு வெளிவே வரும் போது ஊடகவியலாளர்கள் நாமல் மற்றும் யோசிதவை சூழ்ந்து கொண்டார்கள். இதன்போது கருத்து தெரிவிக்கும் போதே நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து தெரிவிக்கையில்,

டிபென்டர் வாகனத்தின் நிறம் மாற்றப்பட்டமை தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் எனது அம்மாவிடமும் விசாரணைகளை நடத்தியிருந்தனர். ஆனால் அங்கு கேட்கப்பட்ட கேள்விகள் வேறு.

மகிந்தவை திருமணத்திற்கு முன் எப்போது சந்தித்தீர்கள்? மகிந்தவை எவ்வாறு திருமணம் செய்தீர்கள்? தற்போது அவரை திருமணம் செய்துள்ளீர்களா? என்ற கேள்விகளை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அம்மாவிடம் கேட்டுள்ளனர்.

அவர்களது மூத்த மகனுக்கு 31 வயதாகிவிட்டது. ஆனால் தற்போதுதான் அவர்கள் திருமணம் செய்துள்ளார்களா? என கேள்வி கேட்கின்றனர்.

இவ்வாறான கேள்விகளை கேட்பதால், இது ஒரு ஏமாற்று அரசியல் நாடகம் என்று தெளிவாக தெரிகின்றது.

அரசாங்கத்தின் இயலாமையை மறைப்பதற்காகவே இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (மு-11)

# எங்களை பயன்...

அழைத்து மக்களின் கவனத்தை திசை திருப்பும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

தமது குடும்பத்தினருக்கு எதிரான வழக்குகளை விசாரிக்க தனியான நீதிமன்றத்தை ஸ்தாபிக்க போவதாக தெரிவித்துள்ளதன் மூலம் இது தெளிவாகியுள்ளது.

வேறு தரப்பினருக்கு சொந்தமான சொத்துக்களை தமது குடும்பத்திற்கு சொந்தமானது என காட்ட அரசாங்கம் முயற்சித்து வருகிறது எனவும் முன்னாள் ஜனாதிபதி குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த வாரத்திற்குள் எனக்கும், எனது குடும்பத்தினர் மற்றும் எதிர்க்கட்சியினருக்கு எதிரான பிரசாரத்தின் அடுத்த கட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

தாஜுடீன் தொடர்பாக பொலிஸார் பெற்றுக்கொள்ளும் வாக்குமூலங்களின் உள்ளடக்கம் அரசாங்கத்திற்கு முக்கியமில்லை.

தாஜுடீன் தொடர்பில் எனது குடும்பத்தினர் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்ற ஊடக செய்திகளை மாத்திரமே அரசாங்கம் முக்கியமாக கருதுகிறது எனவும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (மு-11)

# சிறப்பு நீதிமன்ற...

வினால் முன்வைக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், இதற்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (மு-11)

# படைத்தளபதி...

அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவை நேற்று கடற்படை தலைமையகத்தில் வைத்து சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இச் சந்திப்பில் கடற்படைக்குரிய பாரம்பரிய வரவேற்பு மரியாதையுடன் பாதுகாப்பு படையின் பிரதானியை கடற்படை தளபதி வரவேற்றார்.

அங்கு கடற்படைத் தளபதி பாதுகாப்பு படை பிரதானிக்கு வாழ்த்துக்களையும் நினைவுச் சின்னமொன்றையும் வழங்கி கௌரவித்துள்ளார்.

இதன் பிறகு இரு தரப்பு சார்ந்த முக்கிய விடயங்களில் சுமுகமான விவாதங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இச் சந்திப்பில் கடற்படை பிரதி ஜெனரல்கள் மற்றும் கடற்படை தலைமையகத்திலுள்ள சிரேஷ்ட அதிகாரிகள் கலந்துகொண்டுள்ளனர். (மு-11)

# தனக்குத் தானே...

ன் இன்றி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

இதில் யாழ்ப்பாணம் கொட்டடியை சேர்ந்த சூரசங்காரன் கிருஸ்ண மேனன் (வயது 37) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் அவரது வீட்டில் தீ விபத்து ஏற்பட்டுள்ள நிலையில் சிகிச்சை பலனின்றி அன்றைய தினம் இரவே உயிழந்துள்ளார்.

சடலமானது பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டதோடு மரண விசாரணையை யாழ்.போதனா வைத்திய சாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (மு-30)

# மோ.சைக்கிள்...

யத்தள பாவனையின்போது உண்மையிலேயே பாவனையாளர்களுக்கு 25 வீத நிவாரணம் கிடைக்கின்றது என நிதியமைச்சர் சுட்டிக்காட்டினார்.

செப்டம்பர் முதலாம் திகதியிலிருந்து மின் தொலைத்தொடர்பாடல் வரி நீக்கம் அமுலுக்கு வருகிறது.

இதேவேளை, சிறிய ரக லொறி மற்றும் சிங்கிள் கெப் வாகனங்களுக்கு 10 இலட்சம் ரூபா உற்பத்தி வரி அறவிடப்பட்டு வரும் நிலையில், அந்த வரி 7 இலட்சம் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த வரித்திருத்தம் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வருகின்றது.

இதுதவிர, 150 சீ.சீக்கு குறைவான ரக மோட்டார் சைக்கிள்களுக்கான வரி, தற்போது அறவிடப்படும் பெறுமதியில் 90 வீதம் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த வரியையும் நேற்று நள்ளிரவு முதல் நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நிதியமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டார். (மு-11)

# கடன் வசூலிக்க...

ணொருவர் கடனடிப்படையில் ஒரு இலட்சம் ரூபாயை பெற்றுள்ளார். அதற்காக ஒவ்வொரு வாரமும் 2000 ரூபாயினை கட்டுப்பணமாக செலுத்த வேண்டும்.

இந்நிலையில் நேற்றைய தினம் குறித்த வங்கியிடம் கடன் பெற்றவர் வாராந்த பணத்தினை செலுத்த முடியாத சூழ்நிலையில் அடுத்த தினம் செலுத்துவதாக கூறியுள்ளார்.

இதனை ஏற்றுக்கொள்ளாத நிதி நிறுவன ஊழியர்கள் இருவர் குறித்த பெண்ணின் வீட்டிற்கு நேற்று இரவு 8.30 மணிக்கு சென்று தகாத வார்த்தை பிரயோகத்தில் ஈடுபட்டு அட்டகாசம் செய்துள்ளனர்.

இதன்போது கடன் பெற்ற பெண்ணின் கணவர் மேசன் தொழிலாளி என்பதால் அவர் குறித்த நேரத்தில் அங்கு இருக்கவில்லை. பெண்கள் மட்டும் தனியாக இருக்கும் நேரத்திலேயே மேற்படி நிதி நிறுவன ஊழியர்கள் அட்டகாசத்தில் ஈடுபட்டனர்.

மாலை 5.30 பிற்பாடு நிதி நிறுவன ஊழியர்கள் கடன் பெற்றவர்களின் வீடுகளுக்கு செல்ல முடியாது என்று வடக்கு மாகாண சபை சட்டம் அமுல்படுத்திய பின் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது பலரது விசனத்துக்கும் உள்ளாகியுள்ளது. (மு-89)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமல் ஆக்க...

ஜெனிவாவிருந்து வருகை தந்துள்ள ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் பிரதிநிதியான தோமஸ் மற்றும் இலங்கைக்கான யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதி ஆகியோர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை கிளிநொச்சியில் நேற்று சந்தித்து கலந்துரையாடினர்.

179 நாளாக கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை ஐ.நா அதிகாரிகள் நேற்று பிற்பகல் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் நிலைமைகளை கேட்டறிந்து கொண்டதோடு, இந்த விடயம் குறித்து கவனம் செலுத்துவதாகவும் தெரிவித்துள்ளனர். (மு-11)

## விரைவில் அரச...

இவ்வாறு உயர்கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தின் 25ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க பிரதமராக இருந்த சந்தர்ப்பத்தில் அரசமைப்புக்கான வரைபு உருவாக்கப்பட்டது. அவரே அதன் ஆசிரியர். அதில் தமிழ்க் கட்சிகள் பங்கேற்கவில்லை.

ஜே.ஆர்.ஜெயவர்தனவின் அரசமைப்பு உருவாக்கத்திலும் தமிழ்க் கட்சிகள் பங்கேற்கவில்லை. முதல் முறையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து கட்சிகளினதும் பங்கேற்புடன் அரசமைப்பு ஒன்று உருவாக்கப்படவுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (மு-11)

## மண்...

பான விசாரணையை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (மு-30)

**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**

● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK - 550/= (C-9334)



கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப
CANADA - 400/= மட்டுமே
(நிபந்தனைக்குட்பட்டது)

V2 TRAVELS-0768226240

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

**விற்பனைக்கு**

ஊர் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.
இல.07, மீனாட்சி அம்மன் வீதி,
ஆனந்தபுரம், கிளிநொச்சி.
தொ.பே:0750741440, 0774911793, 0215680936
(C-9355)

**அறிவுபூர்வமான முதலீடு - வளமான எதிர்காலம்**
**யாழ் - முதலீட்டாளர் கருத்துக்களம்**

Aug.26 (Saturday) @ 9.30am
@Tilko City Hotel
முன்பதிவு : Call & SMS to 0777822014
(C-9331)
CSE COLOMBO STOCK EXCHANGE

**வட இந்திய காசி யாத்திரை**

10 நாள் (வயதானவர்களுக்கான யாத்திரை)
நாட்கள்: 10 ஆரம்பம் 15.09.2017

செல்லும் இடங்கள்: டெல்லி, நாராயணசுவாமி கோவில், ஆக்ரா, தாஜ்மஹால், மதுரா, கிருஸ்ணஜென்மபூமி, பிரேம்மந்திர் பிரமாண்டமான கிருஷ்ணர் கோவில், செங்கோட்டை, காசி (வாரணாசி 2 நாள்), கயா காலமானவர்களுக்கு பிதிர்க்கடன் செய்யுமிடம், புத்தகயா (புத்தலாயங்கள்), அலகாபாத் (கங்கா, யமுனா, சரஸ்வதி திருவேணி சங்கமம், சீத்தாமடி (சீதை தாயாருடன் பூமிக்குள் புதையுண்ட இடம்), இராமேஸ்வரம், நவபாஷாணம், உத்திரகோஷமங்கை, திருப்புலானி, மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரத் தரிசனம், சென்னையில் 01 நாள் சொப்பிங், அப்துல் கலாமின் மணிமண்டபமும் காணலாம்.

பெற்றுக்கொள்ளும் ரூபாயிக்கு எமது சேவை

4 விமான டிக்கெட், மடப்பள்ளி ஆட்கள் சமைத்த சுத்தமான சைவ உணவு மூன்று வேளை, கோப்பி, ரீ, (மினரல் வோட்டர்) குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரன் கொமட், குளியலறை இணைந்த அறைகள், யாத்திரை முழுவதும் A/C வாகன வசதி, கொழும்பிலிருந்து எயார் போட் போக வர வாகன வசதி, மேலும் யாழ்ப்பாணத்திலிருந்து 10 பேர் வந்தால் யாழ்- கொழும்பு- யாழ் வாகன ஒழுங்கு செய்து தரப்படும்.

பிராமண சமையல் ஆட்கள், சமைப்பதால் பிராமண சமூகத்தினர் தயக்கமின்றி கலந்து கொள்ளலாம். விபரங்களை கேட்டு அறிந்து பதிவு செய்யவும்.

விஸ்வப்பிரம்மஸ்ரீ கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
No: 59,3/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11
T.P: 077 768 0102, 077 736 2154
Facebook: sridevisriranganathanthuraiappa
(C-9360)

**வேலையாட்கள் தேவை**

எமது உணவகத்திற்கு கீழ்க் காணும் வேலைக்கு ஆட்கள் தேவை.



✦ உணவு பரிமாறுபவர் - ஆண் / பெண்
✦ ரொட்டி / றைஸ் தயாரிப்பவர்
✦ பார்சல் கட்டுபவர்கள் - ஆண் / பெண்

தொடர்பு: அமுல் சைவ உணவகம்
452, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே : 021 221 6779
(159)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

அண்ணா வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
070 330 5500
அண்ணா அன் கோ
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com
(C-9347)
கனடாவுக்கு (Canada) மிகக் குறைந்த கட்டணத்தில் கப்பல் ஊடாக அனுப்பிடவும்
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | ஊர்காவத்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா | திருகோணமலை

**V2 TRAVELS**



வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை [illegible] நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.
VISA EXTENSION
FOR FOREIGN PASSPORT
(வீசா எக்ஸ்ரென்சன்)
0768227499
(C-9338)
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

**வீண்போகாதையா உன் தமிழ்த் தேசியப்பற்றும் தன்மான உணர்வும்**
**விட்டுச் சென்ற விழுதுகள் நாம் விருட்சமாய் எழுந்து நிற்போம்**

எனது அன்பு மாணவர்களே!

எந்தவொரு நாட்டிற்கும் இறுதியாக இரண்டு மூலவளங்கள் காணப்படுகின்றன. அந்த நாட்டின் காணிகளும் அதன் மக்களுமே அந்த மூல வளங்களாகும். எனவே நீங்கள் உங்கள் வாழ்வின் எக் கட்டத்தில் இருந்தாலும் எம் தமிழ் தேசத்தின் மண்ணையும் மக்களையும் மறக்காதீர்கள். எக் காரணத்தைக் கொண்டும் இவற்றை இழக்கச் சம்மதிக்காதீர்கள்.

இன்று எம்மிடம் கல்வி - அறிவு எனும் சொத்து மட்டுமே உள்ளது. இம் மனித மூலதனத்தை வெளியிலிருந்து எவரா லும் அழிக்கமுடியாது. இம் மூலதனத்தை நாம் தான் காப்பாற்றவும் வேண்டும். மேலும் உயர்த்தவும் வேண்டும்.

அறிவால் உயருங்கள். இந்த உலகத்தையே வெல்லமுடியும்.

தமிழன் என்றோர் இனமுண்டு.
தனியே அவற்கோர் குணமுண்டு.

பொருளியல் ஆசிரியர்
*சி.வரதராஜன்*

இறுதியாக மாணவர்களுக்கு வழங்கிய செய்தியிலிருந்து......



சென்றன ஆண்டுகள் மூன்று
*18.08.2017*

தமிழ்த் தேசியப்பற்றாளர்
**சின்னத்துரை வரதராஜன்**

*(ஈழத்தின் பிரபல பொருளியல் ஆசான்,*
*முன்னாள் விரிவுரையாளர், பொருளியல்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்,*
*ஆலோசகர் யாழ்.ஏய்ட் அறக்கட்டளை, கலிங்கம் பல்சுவை இதழ்)*

வீதிச் சுவர்களில் பொருளியல் என்ற
எழுத்துக்கள் தென்படும் சமயங்களில்
பொருளியல் மாணவர்களுடன்
அளவளவும் போதுகளில் ..
தமிழர் தேசிய வளங்கள் பற்றிய
எண்ணங்கள் எழும் வேளைகளில்...

வரதராஜன் என்ற மானுடனின் உயிர்ப்பு
மீண்டும் மீண்டும் நிகழவே செய்யும்.

-குடும்பத்தினர்
(154)

**மறைந்தும் மனங்களில் வாழும் தனியார் கல்வியுலகின் விழுதுகள்**



நா.கிருஸ்ணானந்தன்
[பிரபல பொருளியல் பேராசான்]



பஸில் ஜெனதாஸா
[பிரபல வணிகக்கல்வி ஆசான்]



என்.ரி.தரன்
[பிரபல இந்துநாகரிக ஆசான்]

இவர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org